வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

வாரமலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 170 | பக்கங்கள் : 20



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


08 ‘அறகலய’ செயற்பாட்டாளர்களுக்கு எதிரான அவதூறுப் பிரசாரங்கள்


09 கௌபீனமும் இல்லாததை மறந்து வேட்டியைக் கழற்றினால் என்னாகும்?


10 அநுராதபுரம், பொலநறுவையில் தமிழர் கோலோச்சிய வரலாறு


11 இலங்கையில் ஆணைக் குழுக்களின் சுதந்திரம் முடக்கப்படுகின்றதா?

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை கைவிடுவதாக இல்லை

AMNESTY INTERNATIONAL

## சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

கொழும்பு, மே 28

பயங்கரவாத தடைச் சட்டத்தைக் கைவிடுவதாக பல்வேறு தரப்புகளுக்கு தொடர்ச்சியாக உறுதியளித்துள்ளபோதிலும் இலங்கை அரசு மீண்டும் மீண்டும் அதனைப் பயன்படுத்துகின்றமை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை தனது கவலைகளை வெளியிட்டுள்ளது. 19



## ஜனாதிபதி வேட்பாளராக அநுர!

கொழும்பு, மே 28

ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அனுரகுமார திஸாநாயக்கவை களமிறக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளதென அறிய முடிகின்றது.

கட்சி உள்ளக தகவல்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்துவதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் எனவும், 19

## சவேந்திர சில்வாவுக்கு எதிராக பிரிட்டன் தடை விதிக்கவேண்டும்

### போராட்டத்தை ஆரம்பித்தது சர்வதேச அமைப்பு

லண்டன், மே 28

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக பிரிட்டன் தடை விதிக்கவேண்டும் எனக் கோரும் மனுவுக்கு ஆதரவாக கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை சர்வதேச அமைப்பொன்று ஆரம்பித்துள்ளது.

இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் வழக்கு தொடருதலுக்கான சர்வதேச நிலையம் என்ற அமைப்பு கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை இணையத்தளத்தில் ஆரம்பித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் ஆதரவாளர்கள், மனித 19

## மிருசுவிலில் கிணற்றுக்குள் விழுந்து 6 வயது சிறுமி பலி!

யாழ்ப்பாணம், மே 28

மிருசுவிலில் 6 வயதுச் சிறுமி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். ரி.கின்சிகா என்ற சிறுமியே வீட்டுக் கிணற்றுக் குள் விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 3 மணி முதல் சிறுமியைக் காணவில்லையென தேடியபோது, மாலை 4 மணியளவில் கிணற்றுக்குள் விழுந்திருந்தமை கண்டறிப்பட்டது.

உடனடியாகச் சிறுமியை மீட்டு கொடிகாமம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். (அ)

## லான்ட்மாஸ்டரில் ஏற்றப்பட்டிருந்த விறகு தாக்கி 4 வயதுச் சிறுமி பலி!

### முல்லைத்தீவில் துயரச் சம்பவம்

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு,புதுக்குடியிருப்பில் லான்ட் மாஸ்டரில் ஏற்றி வரப்பட்ட விறகு தாக்கி, 4 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் 1.40 மணியளவில் புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை முடித்து வந்த றிவ்விகா என்ற 4 வயதுச் சிறுமி அயல் வீட்டுக்காரர் செலுத்திய லான்ட் மாஸ்டரில் இருந்த விறகு தாக்கி 19

## அச்சுவேலியில் விபத்து; ஆணொருவர் உயிரிழப்பு

### ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 28

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லை வீதியில் கப் ரக வாகனம் மோதி ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் புல் செருக்கிக்கொண்டு இருந்தவேளை வீதியால் வந்த கப் ரக வாகனம் மோதி அவர் உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் சீனியர் சந்திரகாந்தன் என அடையாளம் காணப்பட்டார். 19



## வெள்ளப்பள்ளம் குளம் அடாத்தாக ஆக்கிரமிப்பு

### சம்பவ இடத்துக்கு சாள்ஸ் எம்.பி விஜயம்

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட உடையார்கட்டுப் பகுதியில் வெள்ளப்பள்ளம் குளம் அடாத்தாக ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

வெள்ளப்பள்ளம் குளம் தனியார் ஒருவரினால் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லையிடப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு அக்கிராம மக்களினால் தெரிவிக்கப்பட்டதன் 19

## யாழ்ப்பாணத்தை சேர்ந்த 3 பேர் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர்!

யாழ்ப்பாணம், மே 28

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த ஜிம்ஸ்ரிங் (வயது-46), அவரது மனைவி யாழினி (வயது-45), மகள் திபேந்தினி (வயது-18) ஆகிய 3 பேர் நேற்று முன் தினம் அதிகாலை தனுஷ்கோடி அருகே கோதண்டராமர் கோயில் கடற்கரை பகுதியை அடைந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பேசாலைக்குச் சென்று, கடந்த வியாழன் இரவு தலைமன்னாரிலிருந்து புறப்பட்டுள்ளனர்.

தகவலறிந்த மரைன் பொலிஸார் 3 பேரையும் மண்டபம் மரைன் 19

## ஓ.எல். பரீட்சை நாளை ஆரம்பம்

கொழும்பு, மே 28

2022 ஆம் ஆண்டு கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

6 மாதங்களின் பின்னர் நடைபெறும் பரீட்சையை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மாணவர்கள் எதிர் கொள்ளவுள்ளனர்.

கொரோனா நெருக்கடி - பொருளதார கஷ்டத்திற்கு மத்தியில் மாணவர்கள் இதற்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற விருந்த கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையே நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. 19

## இப்படியும் நடக்கிறது...!

கனடாவில் வாழும் ஒரு மூத்த ஊடக நண்பர், எப்போதும் நகைச்சுவையாக எழுதுபவர், பேசுபவர். கதை ஒன்றை அனுப்பியிருந்தார். நான் படித்துப் பார்த்ததுபோல நீங்களும் முதலில் படித்துப் பாருங்கள்.

துருக்கியில் வாழ்ந்த முல்லா என்று அறியப்பட்ட முல்லா நஸ்ருதீன் தலைசிறந்த அறிஞர். கல்விமான். அவர் அந்த நாட்டின் மன்னருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார், அது அரசவையில் இருந்த பலருக்கு பிடிக்கவில்லை.

ஒருமுறை முல்லா ஒரு நண்பரின் திருமணத்திற்கு சென்ற போது பேச்சுவாக்கில் நாட்டில் உள்ள அறிஞர்கள் எல்லாம் குழப்பவாதிகள், எதையுமே உறுதியாக, தீர்மானமாகக்கூற இயலாதவர்கள் என்று சொன்னார்.

அதை அறிந்த முல்லாவின் எதிரிகள் மன்னரிடம் போய் 'மன்னரே, நீங்கள் அறிஞர்களை வைத்திருப்பதற்கு பதிலாக குழப்பவாதிகளை வைத்திருப்பதாகவும், சரியான முடிவு எடுக்கத் தெரியாமல் இருக்கும் அறிஞர்கள் பேச்சு கேட்பதாகவும் முல்லா சொல்லிக் கொண்டு திரிகிறார்' என்று அரசரிடம் முல்லாவைப் பிடிக்காதவர்கள் கூறித் தூண்டிவிட்டார்கள்.

உண்மை நிலைமை அறிய விரும்பிய அரசர், முல்லாவை சபைக்கு வரவழைத்தார்.

அத்துடன், தத்துவ மேதைகள், மார்க்க ஞானிகள், சட்ட நிபுணர்கள், அறிவுசால் அமைச்சர்கள் அனைவரையுமே கூட்டினார். பிறகு முல்லாவை நோக்கி, 'இவர்கள் எல்லாம் குழப்பவாதிகள் என்று கூறினீர் களாமே?. ஏன் அப்படிக் கூறினீர்கள்? இவர்கள் குழப்பவாதிகள் என்று உம்மால் நிரூபிக்க முடியுமா?' என்று கேட்டார்.

'இது என்னடா, சும்மா வாய்ப்பேச்சுக்கு சொன்னதை வைத்து என்னை மாட்டி விடப் பார்க்கிறீங்களா, அப்போ நீங்கள் குழப்பவாதிகள்தான், அதை நிரூபித்தால் போச்சது' என்று நினைத்து 'அரசே என்னால் நிரூபிக்க முடியும்' என்று கூறிய முல்லா, அனைவரிடமும் ஆளுக்கொரு தாளைக் கொடுத்தார்.

பின்னர் அவர்களிடம், 'அறிஞர் பெருமக்களே. நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்கப் போகிறேன். அதற்குரிய பதிலை, இந்தத் தாளில் நீங்கள் எழுதிக் கொடுக்கவேண்டும்' என்றார்.

பின்னர், அவர்களிடம் ஒரு தாளை கொடுத்தார், அதில், 'ரொட்டி என்றால் என்ன?' என்று கேட்டார்.

அனைவரும் பதிலைத் தாளில் எழுதி அரசரிடம் கொடுத்தார்கள். அரசர் படிக்க ஆரம்பித்தார்.

ஒருவர் - ரொட்டி என்பது சத்துள்ள பண்டம் என்று எழுதியிருந்தார்.

இரண்டாமவர் - ரொட்டி என்பது ஒரு உணவு என்று குறிப்பிட்டிருந்தார்.

மூன்றாமவர் - இறைவன் கொடுத்த கொடையே ரொட்டி.

நான்காமவர் - ரொட்டி என்பது வேகவைத்த மாவுப் பொருள்.

ஐந்தமவர் - ரொட்டி என்பது மாவும் நீரும் கலந்த கலப்பு.

ஆறாமவர் - அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப சுவையும் வடிவும் பெறுவது ரொட்டி

ஏழாமவர் - ரொட்டி என்பதற்கு சரியான பொருள் யாருக்குமே தெரியாது என்று குறிப்பிட்டு எழுதியிருந்ததை அரசர் படித்தார்.

எல்லா பதில்களையும் அரசர் படித்து முடிக்கும்வரை பொறுமையுடம் காத்திருந்த முல்லா, 'அரசே ! ரொட்டி என்பது என்ன? என்ற எனது சாதாரண கேள்விக்கு, இவர்கள் அனைவரும் பலவிதமான பதில்களைக் கொடுத்துள்ளார்கள்.

யாருடைய பதிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போக வில்லை பார்த்தீர்களா?

இதனால்தான் நம் நாட்டில் உள்ள அறிஞர்கள் குழப்பவாதிகள் என்றேன்' என்றார்.

இந்தக் கதையை ஏன் அவர் அனுப்பியிருந்தார் என்பதை அறிய அவரே கீழே குறிப்பு ஒன்றையும் எழுதியிருந்தார்.

'தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை அனைவரும் இணைந்து ஒருமனதாக தன்னிடம் ஒப்படைத்தால் அதனை ஏற்றுக்கொள்ளத் தான் தயாராக இருப்பதாக வடக்கு மாகாண அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் ஐயா தெரிவித்திருந்த செய்தியைப் படித்தும் இந்தக் கதைதான் ஞாபகத்தில் வந்தது.

தமிழரசுக் கட்சியில் பத்துப் பேரிடம் நீங்கள் கட்சியின் தலைவராக யாரை தெரிவு செய்ய விரும்புகிறீர்கள் என்று கேட்டு ஒரு தாளைக் கொடுத்தால், அவர்கள் அனைவருமே தங்கள் தங்கள் பெயர்களை எழுதித்தருவார்களோ என்னவோ?' என்று எழுதியிருந்தார் நண்பர்.

அதற்கும் இந்தக் கதைக்கும் என்ன சம்பந்தம் என்று அவரிடமே கேட்டு தகவல் அனுப்பினேன்.

சில நிமிடங்களிலேயே பதில் வந்தது.

தமிழரசில் உள்ள எல்லோரும் எழுதிய விடையும் பிழையானது இல்லைத்தானே. அங்கே ரொட்டி பற்றி அவர்கள் எல்லோரும் எழுதிய விடையும் சரியானதுதான். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு பதில்களை எழுதியதால் அவர்கள் குழப்பவாதிகள் என்று முல்லா மன்னனிடம் நிரூபிக்க அது உதவியது.

அதுபோலத்தான், தமிழரசுக் கட்சியினர் தங்கள் தங்கள் பெயர்களை எழுதித் தந்தாலும், அவர்கள் பதிலிலும் தவறில்லைத்தானே..

நண்பரின் விளக்கம் எதுவாக இருந்தாலும்,

அதற்காக சி.வி.கே ஐயா அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் அல்லவர் என்பதல்ல. அவர் சிறந்த நிர்வாகி. வடக்கு மாகாண சபைக்கு நீதியரசருக்கு பதிலாக அவரையே முதல்வராக்கியிருந்தால் அந்த ஐந்து வருடங்களிலும் மாகாணத்தில் சில மாற்றங்களைச் செய்திருப்பார்.

அவரைப் போன்றவர்கள் பதவிகள் தன்னை நாடி வருவதை எதிர்பார்க்கவேண்டுமே தவிர பதவிகளை எதிர் பார்த்து காத்திருக்கக்கூடாது.

இதுபோன்ற விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவாவது தமிழரசு தனது தலைவரை தெரிவு செய்ய வேண்டும். அது மீண்டும் மாவையாக இருந்தாலும் சரி.!

- ஊர்க்குருவி

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி பொங்கல் உற்சவ ஏற்பாடுகள் பூர்த்தி





முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு இரண்டாவது முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் முற்பகல் 10 மணிக்கு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

வற்றாப்பாளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் கடந்த 22 ஆம் திகதி பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் நாளை தீர்த்தமும், ஜூன் மாதம் 5 ஆம் திகதி வருடாந்த பொங்கல் உற்சவமும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஏற்பாடுகள் தொடர்பில் ஆலயப் பரிபாலன சபையினர் மற்றும் ஆலய உற்சவத்துக்கு வருடா வருடம் உதவும் ஏனைய திணைக்களுக்கிடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஆலய உற்சவ காலத்துக்கு தேவையான ஆலய வளாகத்தைச் சூழவுள்ள வீதிகள் புனரமைப்பு, ஆலய வளாகத் தூய்மைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களோடு ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்காகச் சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து வசதி, மின்சாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், அதில் உள்ள முன்னேற்றம், குறைபாடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இறுதியாக மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி பொங்கல் தொடர்பான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆலயத்துக்கு ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான பத்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பாத்துள்ளோம். அவர்களுக்கான போக்குவரத்து, குடிதண்ணீர், மலசலகூட வசதிகள், பாது காப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன - என்றார்.(அ)

## முல்லைத்தீவு பதில் அரச அதிபராக கனகேஸ்வரன்



முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்த க.விமலநாதன் கடந்த 20 ஆம் திகதி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய கனகசபாபதி கனகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபராக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 29.02. 2020 அன்று மாவட்ட அரசாங்க அதிபாராகக் கடமையைப் பொறுப்பேற்ற முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கதிராமத்தம்பி விமலநாதன் தனது 60 ஆவது வயதில் 20 ஆம் திகதி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்து கடந்த 21 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபராக கனகேஸ்வரன் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் பதில் அரசாங்க அதிபராக அவர் தனது கடமைகள் பொறுப்பேற்றுள்ளார்.

(அ)

## கூமாங்குளம் கிராம அலுவலகத்தில் பாவனைக்கு உதவாத அரிசி மீட்பு!

### சுகாதார பிரிவினரினால் கட்டடம் சீல்

வவுனியா, மே 28

வவுனியா கூமாங்குளம் கிராம அலுவலகத்தில் மக்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த அரிசி பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதாகத் தெரிவித்து குறித்த அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கட்டடம் சுகாதாரப் பிரிவினரினால் சீல் வைக்கப்பட்டது.

அரசினால் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி பை விகிதம் வழங்குவதற்காக கூமாங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு ஒப்பந்தகாரரான வவுனியாவிலுள்ள பிரபல அரிசி ஆலையினால் நேற்று முன்தினம் காலை 4860 கிலோ அரிசி (10கிலோ பை விகிதம் 486 அரிசி பை) இறக்கப்பட்டது.

குறித்த அரிசிப் பைகள் மக்களுக்கு நேற்று முன்தினமே பகிர்ந்தளிப்பட்டப்பட்டன.

அவை பழுதடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு தகவல் வழங்கினர்.



கூமாங்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு வருகை மேற்கொண்ட சுகாதாரப் பிரிவினர், குறித்த அரிசியை பரிசோதனைக்குட்படுத்தினர். அவை பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்பட்டதை உறுதிப்படுத்திய அவர்கள், அலுவலகத்தின் களஞ்சியசாலைக்கு சீல் வைத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் குறித்த கிராம சேவையாளரிடம் வினாவியபோது-

மக்களுக்கு அரிசி வழங்குவதற்க்காக குறித்த அரிசி மூடைகள் அரசாங்கத்தினால் ஒப்பந்தம் வழங்கப்பட்ட தனியார் அரிசி ஆலையினால் காலையே எமக்கு கிடைப்பெற்றன. அரிசி கிடைக்கப்பெற்று சில மணித்தியாலயங்களிலேயே மக்களுக்கு அரிசியை பகிர்ந்தளித்திருந்தோம். ஆனால் அவை பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதாக மக்கள் சுகாதாரப் பிரிவினருக்குத் தகவல் வழங்கியிருந்தமையுடன் சுகாதார பிரிவினர் களஞ்சியசாலையை சீல் வைத்தனர்.

மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரிசியை மீளப்பெறும் நடவடிக்கையினை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் முன்னெடுத்துள்ளனர்-என்றார்.

(அ)

# கிழக்கு மாகாணத்துக்கு விரைவில் விமானசேவை

## ஆளுநரிடம் உறுதியளித்தார் அமைச்சர்

கொழும்பு, மே 28

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விமான சேவையை உடனடியாக ஆரம்பிப்பது குறித்து சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் இரண்டு விமான நிலையங்கள் மற்றும் பல கடல் விமானங்கள் இறங்கும் தளங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளமை குறித்து அமைச்சரின் கவனத்துக்கு ஆளுநர் கொண்டு வந்ததையடுத்து விமான சேவைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர், விமானப் போக்குவரத்து பணிப்பாளர், சுற்றுலாப் பணியகப் பணிப்பாளர், விமானப் படை அதிகாரிகள், தனியார் விமான சேவையாளர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் சினமன் எயார் தனது விமானசேவையை ஜூலை மாதத்திலிருந்து ஆரம்பிப்பதாக உறுதியளித்தது. அதை ஊக்குவிக்க கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் தனது முழுமையான ஆதரவை அளிப்பதாக தெரிவித்தது. (அ)

# பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி வந்தவுடன் புதிய தலைவர்

கொழும்பு, மே 28

ஜப்பானில் இருந்து ஜனாதிபதி நாடு திரும்பியதும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு புதிய ஒருவரை நியமிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பான கடிதத்தை ஜனக ரத்நாயக்கவுக்கு நிதியமைச்சின் செயலாளர் அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தை ஜனக ரத்நாயக்க ஏற்றுக்கொண்டதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர்



ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஜனக ரத்நாயக்கவை நீக்குவதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (அ)

# தம்பதியை கடத்திய ஆறு பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 28

தம்பதியரை கடத்திய 6 பேரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் ஜயவர்தனபுர முகாமின் விசேட ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாயக் குழுவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கடத்தப்பட்ட பெண்ணும் ஆணும் தெமட்டகொடை பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருவதாக தெரியவந்துள்ளது.

அதன் பிரகாரம், கடத்தலை மேற்கொண்ட சந்தேக நபர்களில் ஒருவரின் காதலி முதலீடு செய்த பணத்தைச் செலுத்தத் தவறியதன் காரணமாகவே இவ்வாறு கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடத்தப்பட்ட பெண்ணும் ஆணும் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அங்கிருந்து வெளியேறியதாக தெமட்டகொடை பொலிஸிலில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த இருவரையும் கடத்த பயன்படுத்திய ஒட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெமட்டகொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மணப்பெண் மீது அசிட் வீச்சு!

கொழும்பு, மே 28

வெலிகம, மதுராகொட பிரதேசத்தில் நேற்று நடைபெறவிருந்த திருமண வைபவத்துக்கு தயாராகிக்கொண்டிருந்த மணமகள் மீது அசிட் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 03 மணியளவில் அவரது வீட்டுக்கு சென்ற நபர் ஒருவர் அசிட்டை வீசி தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த யுவதி மாத்தறை பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலுக்கு உள்ளான யுவதி சில வருடங்களுக்கு முன்னர் வெலிகம மதுராகொட பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய நபருடன் காதல் உறவை ஏற்படுத்தி பின்னர் பெற்றோரின் எதிர்ப்பினால் அதனை முறித்துக் கொண்டார்.

இதற்கு பழிவாங்கும் நோக்கில் குறித்த இளைஞரால் அசிட் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

குற்றவாளி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவரைக் கைது செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வெலிகம பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# மாணவனின் இடதுகையை மணிக்கட்டுடன் துண்டாக்கிய இருவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மே 28

மாத்தறை வெஹரகம்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது பாடசாலை மாணவன் ஒருவன் பட்டத்தைப் பறக்கவிடும் போது அங்கு நின்ற இருவர் மாணவனை வாளினால் வெட்டியுள்ளனர்.

இடது கை மணிக்கட்டுடன் துண்டாகிய நிலையில் மாணவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் மாணவனின் இடது கை மணிக்கட்டுக்கு மேல் முற்றாக துண்டிக்கப்பட்ட நிலையில், கையின் துண்டிக்கப்பட்ட பகுதியை குடும்பத்தினர் ஐஸ்கட்டி கட்டிகள் வைத்து மாத்தறை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

ஆரம்ப சிகிச்சையின் பின்னர் மாணவன் துண்டாகிய கையுடன் மேலதிக சத்திர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு விரைவாக மாற்றப்பட்டார்.

கையை வெட்டிய சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் மாத்தறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து மாத்தறை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரொஷான் ஹெட்டியாராச்சி மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி ருக்மன் கோட்டகே ஆகியோர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மீண்டும் டுபாய் நோக்கி பறந்தார் அலி சப்ரி ரஹீம்

கொழும்பு, மே 28

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்று முன் தினம் இரவு டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றார் எனக் கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

பாராளுமன்ற உறுப்பினர் நேற்று முன் தினம் இரவு 8.50 மணியளவில் டுபாய் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் டுபாய்க்கு புறப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏழரை கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்கப் பொருட்களையும் 91 கையடக்கத் தொலைபேசிகளையும் சட்ட விரோதமான முறையில் கொண்டுவந்த அவர் கடந்த வாரம் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 75 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீண்டும் மன்னிப்பு கேட்கிறார் ஜெரோம்

கொழும்பு, மே 28

மத நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, இந்து, பௌத்த, இஸ்லாமிய மக்களிடம் மீண்டும் மன்னிப்பு கோரியுள்ளார்.

மிரிஹான பிரதேசத்தில் அமைந்துள்ள விழா மண்டபம் ஒன்றில் நேற்று முன் தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமய விரிவுரையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மன்னிப்பு கோரினார்.

பௌத்த மற்றும் பிற மத நம்பிக்கைகளை அவமதித்ததாக முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டு தொடர்பாக சி.ஐ.டியும். விசாரணைகளை ஆரம்பித்துள்ளதோடு அவருக்கு எதிராக பயணத் தடையும் விதிக்கப்பட்டது.

முன்னதாக தனது அறிக்கையால் ஏதேனும் உணர்வுகள் புண்பட்டிருந்தால், அதற்காக அனைவரிடமும் மன்னிப்பு கோருவதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தம்மைக் கைது செய்வதைத் தடுக்க சி.ஐ.டி.க்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தனது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இராஜதந்திர நோக்கங்களுக்காக மேலும் 3 தூதரகங்கள் விரைவில்!

கொழும்பு, மே 28

ஈராக், ருமேனியா மற்றும் சைப்பிரஸ் ஆகிய நாடுகளில் இராஜதந்திர நோக்கங்களுக்காக இலங்கை தூதரகங்கள் விரைவில் அமைக்கப்படவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

குறித்த நாடுகளில் அதிகளவான இலங்கையர்கள் இருப்பதனால், அவர்களைக் கவனித்துக்கொள்ள தூதரகங்கள் அமைப்பது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சைப்பிரஸ் மற்றும் ஈராக்கில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் இதற்கு முன்னதாக செயற்பட்ட நிலையில் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த மூன்று நாடுகளிலும் இலங்கைத் தூதரகங்களை அமைப்பதன் முக்கியத்துவம் குறித்து முன்னதாக ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் குறித்த தூதரங்களை அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர், அலி சப்ரி மேலும் தெரிவித்தார். (அ)

# வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

கொழும்பு, மே 28

வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் மேலதிக படைத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பிரதேசத்தில் 41 வயதுடைய பெண்ணொருவர் பொலிஸ் காவலில் இருந்தபோது சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த சம்பவம் தொடர்பாக ஒரு பொலிஸ் பரிசோதகர், இரண்டு சார்ஜன்டுகள் மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் இரண்டு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட மூன்று கான்ஸ்டபிள்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

குறித்த பெண் தாக்குதலினால் உயிரிழந்துள்ளதாக உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக உள்ளக விசாரணையையும் பொலிஸார் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசிலிருந்து பலர் விரைவில் எதிர்க்கட்சிக்கு வரவுள்ளனர்!

## கூறுகின்றார் ஹர்ஷன ராஜகருணா

கொழும்பு, மே 28

**அரசில் இருந்து பலர் விரைவில் எதிர்க்கட்சிக்கு வரப்போகின்றார்கள் என்பதுதான் உண்மை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணா தெரிவித்தார்.**

'உங்கள் கட்சியில் இருந்து பலர் ரணிலுடன் சேர்ந்துவிட்டனர். இன்னும் பலர் இணைவதற்குத் தயாராக உள்ளனர் என்று சொல்லப்படுகின்றதே?' என்று சிங்கள ஊடகம் ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசுடன் எமது கட்சியைச் சேர்ந்த சிலர் இணைந்துள்ளனர். அது சரியான முடிவல்ல. அங்கிருந்து 50 பேர் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளார்கள். எங்களது நால்வர் அரசு பக்கம் சென்றுள்ளார்கள். அப்படிப் பார்க்கும்போது அரசுதான் வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்குக் கஷ்டப்படுவார். எமது கட்சியில் இருந்து அரசுடன் இணைவதைவிட அரசில் இருந்து பலர் விரைவில் எதிர்க்கட்சிக்கு வரப்போகின்றார்கள் என்பது தான் உண்மை. ஆனால், இது பற்றியோ அல்லது எதிர்க் கட்சிக்கு ஏற்கனவே வந்துள்ள 50 பேர் பற்றியோ பேசுவதில்லை. எமது கட்சியில் இருந்து அரசு பக்கம் சென்ற நால்வர் பற்றியே பேசப்படுகின்றது.

எனக்கும் அரசிடம் இருந்து அழைப்பு வந்தது. எனது தந்தைக்கும் ரணிலுக்கும் இடையில் நீண்ட உறவு இருந்தது. அப்படியென்றால் நான்தான் முதலில் போய் அரசுடன் இணைந்திருக்கவேண்டும்.

நான் தனிப்பட்ட உறவைப் பார்த்து அரசியல் செய்யவில்லை. கொள்கை அடிப்படையில் அரசியல் செய்கின்றேன். அதனால்தான் நாம் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை உருவாக்கினோம்.

ரணிலுக்கும் எமக்கும் இடையில் தனிப்பட்ட பகை எதுவும் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத் துவத்தில் மாற்றம் வேண்டும் என்பதை மக்கள் கூறினார்கள். அதனால்தான் நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகினோம்.

ரணில் அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத் துவப் பதவியை சஜித்துக்கு வழங்கி இருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி அப்போதே ஆட்சியைப் பிடித்திருக்கும்.

தனிப்பட்ட முறையில் ரணிலுக்கான மரியாதை - நட்பு எல்லாம் உள்ளது. அதில் எந்தப் பிரச்னை இல்லை - என்றார்.

# பொலிஸ் வைத்தியசாலையில் 20 இலட்சம் ரூபா, நகை திருட்டு

## சுத்திகரிப்பு தொழிலாளி கைது

கொழும்பு, மே 28

கொழும்பு - நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்திய சாலையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் தரத்தை உடைய பெண் சத்திர சிகிச்சை வைத்தியருக்குச் சொந்தமான 20 இலட்சம் ரூபா பணமும் தங்க நகைகளும் திருடப்பட்டுள்ளது.

பொலிஸ் வைத்தியசாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள் தாக குறித்த பெண் வைத்தியர் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

அதன்படி இது தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார், 60 வயதுடைய பெண் சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

குறித்த வைத்தியரின் உத்தியோகபூர்வ அறையிலிருந்த இலாச்சி ஒன்றுக்குள் பணமும் நகைகளும் இருந்த நிலையில் இத்திருட்டு இடம் பெற்றுள்ளதாக கூறப்பட்டது.

அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# 'இலக்கியவெளி' இதழ்கள் அறிமுகமும் உரையாடலும்

யாழ்ப்பாணம், மே 28

'இலக்கியவெளி' இதழ்கள் அறிமுகமும் உரையாடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பொதுநூலக குவிமாடத்தில் மூத்த எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில்நடைபெறவுள்ளது.

இதழ்கள் தொடர்பான உரைகளை வடகோவை வரத ராஜன், ந.குகபரன், வேல்.நந்த குமார், இ.இராஜேஸ்கண்ணன், சின்னராஜா விமலன் ஆகியோர் நிகழ்த்துவர்.

ஏற்புரையை இலக்கிய வெளி சஞ்சிகையின் ஆசிரியர் அகில் சாம்பசிவம் ஆற்றுவார்.

இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்களை பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(அ)

# சவுதியில் தினமும் வேலைக்காக விற்கப்படும் இலங்கை பெண்கள்

கொழும்பு, மே 28

செல்லக்கதிர்காமம் கோஹோம்பதிகான பிரதேசத்தைச் சேர்ந்த எச்.எம்.தில்ருக்சி என்ற பெண் சவுதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண் வேலைக்குச்சென்ற நிலையில்அநாதரவாகி இருப்பதாக அவ ரது உறவினர்கள் தெரிவித்த னர்.

தில்ருக்சி என்ற இந்த பெண் அனுப்பியுள்ள காணொளி ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

"20 முதல் 30 பேர் ஒரே அறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சாப்பிடவும் தருவதில்லை. தினமும் ஒவ்வொரு இடமாக அழைத்துச் சென்று விற்பனை செய்து 6 முதல் 7 மணி நேரம் வேலைகளில் ஈடுபடுத்துகின்றனர். பணம் கொடுப்பதில்லை. பணத்தை முகவர் நிலையத்தின் பெண் பெற்றுக்கொள்கிறார்.

வரிசையில் நிற்க வைத்து இலங்கைப் பெண்களை இவர்கள் விற்பனை செய்கின்றனர்.

எதனையாவது செய்து எங்களை மீட்டெடுங்கள்" என தில்ருக்சி அந்தக் காணொளியில் கூறியுள்ளார்.

தில்ருக்சி 4 பிள்ளைகளின் தாய். தில்ருக்சியின் கணவர் சமில் சிறி நந்த மனைவியை இலங்கைக்கு அழைத்து வரத் தலையிடுமாறு கோரி கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (அ)

# அணுமின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ரஷ்யா தயார்!

கொழும்பு, மே 28

இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கினால், நாட்டில் அணு மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள தமது நாடு தயாராகவுள்ளதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் தகர்ஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் தனது உத்தியோகபூர்வருவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தை பதிவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் எரிசக்தி அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ள தாகவும் அவர் கூறியுள்ளார்.



அத்துடன் அணு மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்திற்கு அனுமதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதற்கு தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்க தமது நாட்டு அதிகாரிகள் தயாராக வுள்ளதாக ரஷ்ய தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு தேவையான எந்தவொரு கலந்துரையாடலுக்கும் விசேட நிபுணர்களின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும் தயாராகவுள்ள தாக ரஷ்ய துதுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(அ)

# வாடகைக்காக வாகனங்களைப் பெற்றுச் சென்று அடகு வைத்த இராணுவத்தினரை தேடும் பொலிஸ்

கொழும்பு, மே 28

வாடகைக்கு வாகனங்களை வழங்கும் இடங்களில் வாகனங்களை பெற்றுச் சென்று அவரை அடகு வைத்து பணத்தை பெற்றுக்கொள்ளும் செயலில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்படும் இராணுவ கோப்ரல், ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் மற்றும் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற நபர் ஆகியோரைக் கைது செய்வதற்காக தியத்தலாவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்வதற்காக தேடப்படும் இராணுவ கோப்ரல் தியத்தலாவை இராணுவ முகாமில் கடமையாற்றி வருபவர் எனவும் ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் இந்த முகாமில் கடமையாற்றியவர் எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

சந்தேக நபர்கள் மூன்று பேரும் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

வாடகைக்கு பெற்று அடகு வைக்கப்பட்டிருந்த வான், ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தியத்தலாவை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# புதிய போராட்டம் ஜூன் 9 ஆரம்பம்!

## மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு, மே 28

அரசியலமைப்புச் சட்டத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குரிமையை உறுதிப்படுத்துமாறு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி புதிய போராட்டத்தை ஆரம்பிக்க மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படவிருந்த நிலையில், தேர்தலை நடத்தப் பண மில்லை எனக்கூறி அரசாங்கம் அதனை ஒத்திவைக்க நடவடிக்கை எடுத்தது.

எதிர்க்கட்சிகள் மற்றும் வேறு தரப்பினரும் இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

நிதி நெருக்கடியை அடிப்படையாக கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்த முடியாது என அரசாங்கம் நீதிமன்றத்தில் கூறியது.

இதற்கு அமைய நிதி நெருக்கடியில் இருந்து மீள அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை கோரியதுடன் நிதியத்தின் உதவி கிடைத்து தற்போது மூன்று மாதங்கள் கடந்துள்ளன.

இந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணி தேர்தலை நடத்துமாறு கோரி எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதி மிகப் பெரிய போராட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

நாடு முழுவதும் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பட்டாசு கொளுத்தியபோது காயமடைந்த நபர் மரணம்

கொழும்பு, மே 28

தம்புத்தேகம - தேக்கவத்தை பகுதியில் பட்சாசு வெடித்து கடும் காயங்களுக்குள்ளான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தமது வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற திருமண வைபவத்தில் பட்டாசு கொளுத்தச் சென்றபோது குறித்த நபர் விபத்திற்குள்ளானார்.

வெடிக்காத பட்டாசை மீண்டும் கொளுத்த முற்பட்ட போது, பட்டாசு வெடித்து அந்நபர் கடும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர் தேக்கவத்தையை சேர்ந்த 31 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.(அ)

ஈழநாடு
Eelanadu
28.05.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இனப்படுகொலை விவகாரம்?

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, மே-18, நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில், தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படு கொலை இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து, சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கைக்கான கனேடிய தூதுவரை அழைத்து, தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தார். தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையொன்று இடம்பெற்றுள்ளதாகவும், அதற்கான நீதி உறுதிப்படுத்தப்படவேண்டுமென்றும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன. குறிப்பாக புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்துமே இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் அவ்வப்போது மேற்குலக அரசியல்வாதிகள் சிலரும் இதனை உச்சரித்திருக்கின்றனர். முதல் முறையாக ஒரு நாட்டின், அதிலும் பசுபிக் பிராந்தியத்தில் செல்வாக்கு மிக்க நாடுகளில் ஒன்றான கனடாவின் பிரதமர் ரூடோ, தனது அறிக்கையில் இனப்படு கொலையென்னும் சொல்லை பயன்படுத்தியிருக்கின்றார். இது உடனடியாக பெரிய தாக்கங்களை ஏற்படுத்தாவிட்டாலும் கூட, எதிர்காலத்தில் தொடர்ந்தும் கொழும்பின் ஆட்சியாளர்கள் மனித உரிமை சார்ந்த குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்பான பதிலை வழங்குவதை தவிர்க்க முற்படும்போது, இவ்வாறான இனப்படுகொலை வாதம், மேற்குலகில் ஏனைவர்களாலும் உச்சரிக்கப்பட வாய்ப்புண்டு. இதன் காரணமாகவே பதறியடித்துக் கொண்டு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கண்டணம் தெரிவித்திருக்கின்றது.

ஆனால் விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாண சபையில், இனப்படுகொலை தீர்மானமொன்று, நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இலங்கைக்குள் ஒரு மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானமொன்று, இருக்கின்றபோது, கனேடிய பிரதமர் கூறியதை எதற்காக அலி சப்ரி கண்டிக்க வேண்டும்? முதலில் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்தியிருக்கவேண்டும். ஏன் அவ்வாறானதொரு பிரேரணை முன்வைக்கப்பட்டது? அதற்கான காரணங்கள் என்ன? தமிழர் தரப்பில் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் சரியானதா அல்லது தவறானதா? இந்தக் கோணத்தில் முதலில் இலங்கைக்குள் விசாரணை நடந்திருக்கவேண்டும். இலங்கைக்குள் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு உரிய விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தால், இந்த விவகாரம் ஒரு சர்வதேச விவகாரமாக மாறியிருக்காது. இனப்படுகொலை தொடர்பில் ஆரம்பத்தில் அனைத்து தமிழ் தரப்புக்களும் ஒரே கருத்தில் இருந்திருக்கவில்லை. விக்னேஸ்வரன் தலைமையில் இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, அதற்கு வெளிப்படையான ஆதரவை சம்பந்தன்- சுமந்திரன் தரப்பு வழங்கவில்லை. இப்போதும் கூட, சம்பந்தன் வெளிப்படையாக இனப்படுகொலை தொடர்பில் உச்சரிக்கவில்லை. மௌனியாகவே இருக்கின்றார். ஆனால் பெருமளவான தமிழ்த் தரப்புக்கள், சிவில் சமூக குழுக்கள், புலம்பெயர் அமைப்புக்கள் அவ்வாறானதொரு நிலைப்பாட்டில் ஒன்றுபட்டிருக்கின்றனர்.

கனேடிய பிரதமரை கண்டிப்பதை விடுத்து, முதலில், யுத்தம் முடிவுற்று 14 வருடங்களுக்கு பின்னர் கூட, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை உறுதிப்படுத்துவதற்கான ஆரம்ப விசாரணையைக்கூட மேற்கொள்ளாமல் இருக்கும் மோசமான ஜனநாயகம் தொடர்பில்தான் முதலில் அலி சப்ரி கவலைப்படவேண்டும். ஒருவேளை அலி சப்ரி, வெளிவிவகாரத்தில் அனுபவமில்லாதவராக இருப்பதால் விடயங்களை அவரால் புரிந்துகொள்ள முடியாமலும் இருக்கலாம் அல்லது தனது எசமான விசுவாசத்தின் காரணமாகவும் அவர் கனேடிய பிரதமரை கண்டிக்கலாம். ஏனெனில் அண்மையில் அவரது எசமான், கோட்டாபய ராஜபக்ஷவை, கனடிய அரசாங்கம் கறுப்புப் பட்டியலில் இட்டிருந்தது.

# யாழ்.அறிஞர்கள் நால்வருக்கு தருமபுரம் ஆதீனத்தால் சீர்காழி கும்பாபிஷேக பெருவிழாவின்போது கௌரவம்



யாழ்ப்பாணம், மே 28

தமிழகத்தின் மூத்த ஆதீனங்களுள் ஒன்றான தருமை ஆதீனத்தால் சீர்காழி தோணி புரம் பிரம்மபுரீஸ்வரர் ஆலய மகாகும்பாபிசேகப் பெரு விழாவின்போது ஈழத்து அறிஞர்கள் நால்வருக்கு கௌரவம் வழங்கப்பட்டது.

சுன்னாகம் சிவசிறி நா.சர்வேஸ்வரக் குருக்கள், அச்சு வேலி கு. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோருக்கு சிவாகம கலாநிதி என்ற பட்டமும்,

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனுக்கு திருப்பணிச் செம்மல் என்ற விருதும், கோண்டா வில் பஞ்சமூர்த்தி குமரனுக்கு நாதஸ்வர கலாநிதி என்ற விருதும் வழங்கப்பட்டது. தருமை ஆதீன குருமகா சந்நிதானம் சிறிலசிறி மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த சுவாமிகள் இந்த விருதுகளை வழங்கினார்.

(அ)

# பொ. மாணிக்கவாசகத்தின் 45ஆம் நாள் நினைவஞ்சலி!





வவுனியா, மே 28

ஊடகப்பேராளுமை பொன்னையா மாணிக்க வாசகத்தின் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு வவுனியா நகரமண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜினசேன ரத்துகமகே மலர்மாலை அணிவிக்க வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் அஞ்சலிச் சுடரை ஏற்றியதுடன் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மலரஞ்சலி செலுத்தி ஒளித்தீபம் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. இதன்போது "ஊடகவியலில் மாணிக்கவாசகம்" எனும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜினசேன ரத்துகமகே சிறப்புரை நிகழ்த்தினார். "கலை பண்பாட்டு வளர்ச்சியில் மாணிக்கம்" எனும் தலைப்பில் வவுனியா வடக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபனும்,

"மக்கள் சேவையில் மாணிக்கவாசகம்" எனும் தலைப்பில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமாரும் "வாசகர் பார்வையும் அனுபவ பகிர்வும்" எனும் தலைப்பில் ஐயம்பிள்ளை யசோதரனும் கருத்துரைகளை வழங்கினர்.

அதனைத்தொடர்ந்து பிரமுகர் வரிசையில் மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்க நாதன், தமிழ் மத்திய மகாவித்தியாலய பாடசாலை முதல்வர் அ.லோகேஸ்வரன், மூத்த ஊடகவியலாளர் அ.நிக்சன், தமிழரசுக் கட்சியின் இளைஞரணி தலைவர் க. சிவதர்சன்ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர், பொது மக்கள், சமூகஆர்வலர்கள், அரசியல் தரப்பினர்,சகோதர மொழி ஊடக நண்பர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -79

# ‘பெண்கள் சேவா சங்கம்’ - 1902இல் அமைக்கப்பட்ட முதலாவது பெண்கள் அமைப்பு

**கணபதி சர்வானந்தா**

எழுத்து வரலாறும் தொல்லியலும் என்ற முகநூல் பக்கத்திலே “ படித்ததில்.” என்று தலைப்பிட்டு ஒரு பதிவைக் கண்டேன். அது யாழ்ப்பாணத்தில் பிறந்த பெண்ணொருவர் காந்தியவாதியாகவும், பெண் விடுதலைவாதியாகவும், இதழியலாளராகவும், இந்தியாவில் அரசியல்வாதியாகவும் வாழ்ந்த வரலாறு பற்றியது. இன்றைய தலைமுறையினர் பலருக்குத் தெரியாத விடயம்.

1884 - 1971 ஆண்டு காலப் பகுதியில் வாழ்ந்து பெண் விடுதலை பற்றிப் பேசி அவர்களுக்கு எனப் பல அமைப்புகளை உருவாக்கியவர் என்ற வகையில் அவர் முதன்மை பெறுகிறார். அவர் பெயர் மங்களம்மாள் மாசிலாமணி. அவர் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் தியாகப் பணி புரிந்தவர் என்ற பெருமைக்குரியவர். யாழ்ப்பாணம் ஓட்டுமடப் பகுதியில் உள்ள பீ.ஏ. தம்பி லேனுக்கு நான் எனது இலக்கிய நண்பன் ராதேயனைப் பார்க்கப் பல முறை சென்றிருந்தாலும் அந்த வீதியின் பெயருக்கு இந்த மங்களம்மாள் மாசிலாமணி அம்மையாரின் தாய் வழிப்பாட்டனார் பெயர் தான் சூட்டப்பட்டிருக்கிறதென்ற விடயத்தை அறிந்திருக்கவில்லை. அதனை அறிய இப் பதிவு எனக்கு உதவியிருக்கிறது.

இனி படித்ததில்... என்ற தலைப்பின் கீழ் வந்த பதிவு பற்றி...!

யாழ்ப்பாணத்திலுள்ள ஓட்டுமடம் பகுதிக்கு நான் செல்லும் போதெல்லாம் ‘பீ.ஏ.தம்பி ஒழுங்கை’ என்ற வீதியால் செல்வதுண்டு. அப்பொழுதெல்லாம் அந்த வீதிக்கு அந்தப் பெயர் வந்த காரணத்தை அறிந்திருக்கவில்லை. ஆனால் மங்களம்மாளின் வாழ்க்கை வரலாற்றைப் படித்த பின்னர்தான் அதை அறிந்து கொண்டேன். அந்த வீதியின் பெயருக்கு உரியவரின் பெயர் கதிரவேலுப்பிள்ளை. அவர் மங்களாம்மாளின் தாய்வழிப் பாட்டனார். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவர் ஒரு வழக்கறிஞர் என்பதுடன், அந்தக் காலத்தில் மிகச் சிலரே அரிதாகப் பெற்றிருந்த பீ.ஏ. பட்டத்தையும் பெற்றிருந்தார். அதன் காரணமாக, மக்கள் அவரை “பீ.ஏ. தம்பி” என அழைத்தனர். அதன் காரணமாகவே அந்தப் பெயர் அவர் வாழ்ந்த வீதிக்குச் சூட்டப்பட்டது.

மங்களம்மாள் மாமனாரான பொன்னம்பலபிள்ளையின் ஒரே மகனான மாசிலாமணிப்பிள்ளையை திருமணம் செய்தார். மாசிலாமணிப்பிள்ளை அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ‘தேசாபிமானி’ என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அத்துடன் அவர் இலங்கையிலும் இந்தியாவிலும் பல பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். ஒரு கட்டத்தில் மாசிலாமணிப்பிள்ளை இந்தியா சென்று அங்கு வாழத்தொடங்கினார். மங்களம்மாளும் கணவருடன் கூடச் சென்றார். அங்கு இருந்த காலத்தில் கணவரின் ஆலோசனையின் பேரில் மங்களம்மாள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்து செயல்பட்டார்.

காங்கிரஸ் கட்சியில் இணைந்திருந்த நேரத்தில் 1924இல் கோவில்பட்டியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பெண்கள் அரங்கிற்கு மங்களம்மாளே தலைமை தாங்கினார். 1927இல் காந்தியின் முன்னிலையில் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டின் போதும் மங்களம்மாளும் வரவேற்புக் குழுவில் இருந்ததுடன், பெண்கள் அரங்கத்தின் வரவேற்புரையையும் இவரே நிகழ்த்தினார்.

1926இற்கு முன்னர் பெண்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கக்கூடாது என்ற சட்டம் இந்தியாவில் இருந்தது. அது நீக்கப்பட்ட பின்னர் சென்னை மாநகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் எழும்பூர் வட்டாரத்தில் போட்டியிட்ட நீதிக்கட்சித் தலைவரான நாயுடுவை எதிர்த்து காங்கிரஸ் கட்சி சார்பில் மங்களம்மாள் போட்டியிட்டார். அவர் அத்தேர்தலில் வெற்றி பெறாவிட்டாலும் யாழ்ப்பாணத்தில் பிறந்த பெண்ணொருவர் போட்டியிட்டமை எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது.

மங்களம்மாள் இந்தியாவில் இருந்த காலத்தில் ‘தமிழ் மகள்’ என்ற பெயரில் பெண்களுக்கான மாத இதழ் ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார். யாழ்ப்பாணம் திரும்பி வந்த பின்னரும் அந்த இதழைத் தொடர்ந்து நடத்தினார். சுமார் 40 ஆண்டு காலம் அந்த இதழ் வெளிவந்தது. 1971இல் அவர் தமது 85ஆவது வயதில் இறக்கும் போது கடைசி இதழ் முற்றுப்பெறாமல் இருந்தது. அவர் இறந்த பின்னர் வெளிவந்த அந்த இதழில் அவரது படத்தை அட்டையில் தாங்கியிருந்ததுடன், அவரைப் பற்றிய இரண்டு கட்டுரைகளும் பிரசுரமாகியிருந்தன.

மங்களம்மாள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் சமூகத்தினதும் பெண்களினதும் முன்னேற்றத்துக்காக பல அமைப்புகளை உருவாக்கிச் செயற்பட்டிருக்கிறார். அந்த வகையில் 1902ஆம் ஆண்டு மங்களம்மாள் தனது 18ஆவது வயதில் வண்ணார்பண்ணையில் ஆரம்பித்த ‘பெண்கள் சேவா சங்கம்’ என்ற அமைப்பே தமிழ் பெண்கள் மத்தியில் அமைக்கப்பட்ட முதலாவது பெண்கள் அமைப்பாகக் கருதப்படுகிறது. 12 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த சங்கத்தில் பின்னர் 50 உறுப்பினர்கள் வரை சேர்ந்திருந்துள்ளனர். இச் சங்கம் பற்றிய அறிமுகக் குறிப்பொன்றில், “இச் சங்கம் மதசார்பற்றதாய், தமிழ் மகளிருக்குப் புதிய அறிவையும், தன்னம்பிக்கையையும் ஊட்ட வல்லதாய், பெண் விடுதலைக்கான முதலாவது அடியை எடுத்து வைப்பதாய்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மங்களம்மாள் இந்தியாவிலிருந்து வந்த பின்னர் 1932ஆம் ஆண்டு ‘மகளிர் தேசிய சேவைச் சங்கம்’ (வண்ணார்பண்ணை) என்ற பெயரிலும் அமைப்பொன்றை உருவாக்கிச் செயற்பட்டிருக்கிறார். இச்சங்கத்தின் நிர்வாகக் குழுவில் யாழ்ப்பாண முன்னாள் அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தா அவர்களினது மனைவி பெயரும் காணப்படுகின்றது. ‘தமிழ் மகளிர் கழகம்’ என்ற இன்னொரு அமைப்பிலும் மங்களம்மாள் முக்கிய பங்கு வகித்துச் செயற்பட்டிருக்கிறார். தீண்டாமை ஒழிப்பு, பெண் சமத்துவம் போன்ற நோக்கங்களுக்காகச் செயற்பட்ட இக்கழகத்தின் குறிப்பு ஒன்றில் ‘பாரம்பரிய கலைகலாச்சாரங்கள் குன்றாது மலர்ச்சியடைய இக்கழகம் செயற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

மங்களம்மாள் தனது பணிகளுக்காக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இருந்த ஏழை முதல் பணக்காரர் வரையான பல வீடுகளுக்கும் நேரடியாகச் சென்றுள்ளார். தனது காலத்தில் தான் ஈடுபட்ட சகல நடவடிக்கைகள் குறித்தும் சேகரித்த ஆவணங்களை மூன்று பெட்டிகளில் பாதுகாத்து வைத்திருந்தார். ஆனால் அவர் இறந்த பின்னர் அவர் வாழ்ந்த வீடு புதுப்பித்துக் கட்டப்பட்ட பொழுது அந்த ஆவணங்கள் கவனிப்பாரற்று அழிந்து போய்விட்டன. அது ஒரு சோகமான விடயமாகும். அவை இருந்திருக்குமாயின் அவர் சமூகத்துக்கு ஆற்றிய பணிகளின் மகத்துவம் மேலும் தெரிய வந்திருக்கும்.

தமிழ் பாசிசவாதிகளுக்காகவும், சினிமாச் சில்லறைகளுக்காகவும் விழாவெடுக்கும் நமது இன்றைய தமிழ் சமூகம் இத்த கைய தியாகசீலர்களை மறந்துவிட்டதுதான் நமது துரதிர்ஷ்டமாகும். •

# இந்தவார ராசிபலன் 28.05.2023 - 03.06.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 14
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : நவமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சுக்கிரன், சனி நன்மைகளை வழங்குவர். துர்கை வழிபாடு குடும்பத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கும். கடந்த வாரத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். உங்கள் விருப்பம் எளிதாக நிறை வேறும். புதிய முயற்சி அனுகூலமாகும். பூர்வீக சொத்தில் இருந்த பிரச்சனை முடிவிற்கு வரும். வெள்ளி கிழமை மதியம் முதல் உங்கள் எண்ணம் நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். முயற்சிகளில் வெற்றி காண்பீர். எதிர்பார்த்த வரவுகள் வரும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ]

சுக்கிரன், செவ்வாய், கேது உங்களுக்கு நன்மைகளை வழங்குவர். மகா லட்சுமியை மனதில் எண்ணி செயல்பட மகிழ்ச்சி அதிகரிக்கும். கடந்த வாரத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். துணிச்சலாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். மறைமுகமாக தொல்லை கொடுத்தவர்கள் விலகி ச்செல்வர். தொழிலில் முன்னேற்றமும், விரும்பியதை வாங்கும் நிலையும் உண்டாகும். முயற்சிக்கேற்ற பலன்களை இந்த வாரம் அடைவீர்கள். இதுவரை இருந்து வந்த பிரச்சனைகளை இல்லாமல் செய்வீர்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குரு, ராகு, சனி நன்மைகளை வழங்குவர். வெங்கடாஜலபதியை மனதில் எண்ணி செயல்பட சங்கடம் நீங்கும். முயற்சி நிறை வேறும், திங்கள் முதல் உங்கள் செயல்களி ல் எதிர்பார்த்த நன்மகளை அடைவீர்கள். வேலையில் இருந்த நெருக்கடிகள் விலகும். ஒரு சிலருக்கு புதிய வேலைஅமையும். உங்கள் அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். எதிர்பார்த்தவற்றை அடை வதற்க கடுமையாக போராடி சா திப்பீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற் சியில் முன்னேற்றம் உண்டு.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

புதன், சூரியன் சுக்கிரன் நன்மைகளை வழங்குவார். சந்திர பகவானை மனதில் நினைத்து செயல்பட நன்மை அதிகரிக்கும். லாப சூரியனால் உங்கள் செயல்கள் வெற்றியா கம். வழக்கு உங்களுக்கு சாதகமாகும். அரசுவழி எத ர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். நீங்கள் ஈடுபடும் செ யல்கள் வெற்றியாகும். எதிரபார்த்த வரவுகள் வந்து சேரும். திங்கள் செவ்வாயில் செலவு அதிகரிக்கும். ஒரு சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கேது, குரு, சூரியன், சுக்கிரன் நன்மைகளை வழங்குவர். சூரிய வழிபாடு தடைகளை விலக்கும். கடந்த வார நெருக்கடி நீங்கும். திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர். அரசு வழி செயல்களில் ஆதாயம் உண்டாகும். புதி ய முயற்சியி ல் அனுகூலம் ஏற்படும். உங்கள் செல்வா க்கு உயரும். நெருக்கடி நீங்கி நன்மைகளை அடையும் வாரம் இது. தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். கமிஷன் ஏஜென்சி லாபம் தரும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

சனி, புதன், செவ்வாய் நன்மைகளை வழங்குவர். மீனாட்சி சுந்தரேஸ்வரரை மனதில் எண்ணி செயல்பட நன்மை அதிகரிக்கும். நேற்றுவரை இருந்த நெருக்கடி நீங்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். எதிர்ப்பு விலகும். புதிய முயற்சி பலிக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவே றம். வீட்டில் சுப நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புண்டாகும். இந்த வாரம் உங்களுக்கு யோகமான வாரமாகும். வெள்ளிக்கிழமை உங்கள் செயல்களில் தடை , தாமதம் உண்டாகும். அதன்பின் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி ஆதாயமாகும். வாய்ப்புகள் தேடி வரும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குரு, சுக்கரன் நன்மைகளை வழங்குவர். குருபகவானை வணங்கி வழிபட வளமுண்டாகும். உங்கள் முயற்சி நிறைவேறும் வாரம் இது. வியாபாரத்தில் இருந்த தடைகள், குடும்பத்தில் உண்டான குழப்பம் விலகும். எதிர்பார்த்த வரவுகளும் தகவலும் வரும். சனிக்கிழமை நிதானம் அவசியம். குரு அருளால் உங்கள் செயல்கள் எளிதாக வெற்றியாகும். பொருளாதர தடை விலகும். நண்பர்கள் வழியே நன்மை அதிகரிக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

ராகு, புதன் நன்மைகளை வழங்குவர். நவகிரக வழிபாடு நன்மைகளை அதிகரிக்கும். வாரம் முழுவதும் உங்கள் முயற்சி பலிதமாகும். துணிச்சலுடன் செயல்பட்டு நி னை தததை சாதிப்பீர்கள். தொழிலில் உண்டான பிரச்சனைகளை எதிர்கொ ண்டு லாபம் காண்பீர்கள். உண்மையின் வழியில் சென்று நினைத்ததில் வெற்றி பெறுவீர். பணவரவும் ஆதாயங்களும் உண்டாகும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

சனி , குரு, சூரியன், கேது நன்மைகளை வழங்குவர். கபாலீஸ்வரரை மனதில் எண்ணி வழிபட சங்கடம் போ கம். பெரும்பாலான கிரகங்கள் சாதகமாக இருப்பதால் உங்கள் செயல்கள் நிறைவேறி எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். ஒரு சிலருக்கு விரும்பிய மாற்றம் ஏற்படும். ஐந்தாமிட குரு உங்கள் செல்வாக்கை அதிகரிப்பார். ஆறாமிட சூரியனால் அரசு வழியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சந்திரன் நன்மைகளை வாரி வழங்குவார். சனீவரரை மனதில் எண்ணி செயல்பட முன்னேற்றம் உண்டாகும். மனம் மகிழும்படியான சம்பவம் நடந்தேறும். ஞாயிறு திங்கள் செவ்வாயில் உங்கள் விருப்பம் நிறைவேறும். புதிய முயற்சிகள் வெற்றியாகும். புதன் வியாழனில் எதிர்பார்த்த பணம் வந்து சேரும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிக்கும் வாரம் இது. அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

ராகு, சுக்கிரன், செவ்வாய் நன்மைகளை வழங்குவர். அனுமானை வழிபட நன்மை அதிகரிக்கும். முதல் இரண்டு நாட்களும் உங்கள் விருப்பம் நிறைவேறும். ஞாயிறு முதல் செயல்களில் வேகம் இருக்கும். வருமானத்திற்குரிய வழி தெரியும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர். உடல் நலனில் கவனம் செலுத்துவது நன்மை தரும். ஜென்ம சனியால் நெருக்கடி உண்டாகும் என்றாலும் மூன்றாமிட ராகு ஆறாமிட செவ்வாயால் உங்கள் முயற்சி நிறை வேறும். உடல்நிலையி ல் இருந்த பாதிப்பு விலகும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

குரு, சூரியன் நன்மையை வழங்குவர். வீரட்டேஸ்வரரை மனதில் எண்ணி செயல்பட சங்கடம் தீரும். குடும்ப ஸ்தான குருவால் உங்கள் நிலையில் மாற்றம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். கொடுத்த வாக்கை காப்பற்றுவீர்கள். அரசு வழியில் இருந்த சங்கடம் விலகும். உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். வேலை வாய்ப்பு என நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். ஒரு சி லர் பணிபுரி யும் இடத்திலிருந்து வேறி இடத்திற்கு மாற்றலாகுவீர்கள். உறவு, நட்புகளி டம் ஏற்பட்ட பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றை சரி செய்வீர்கள். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும்.

# கர்நாடகா தேர்தல் வெற்றி: காங்கிரஸின் சாதனையா அல்லது மோடி மீதான வெறுப்பா?



சென்னை மடல்

-பகவான் சிங்-

வணக்கம். கடந்த சில வாரங்களாக என் ‘ஈழநாடு’ நண்பர்களை நான் சந்திக்க இயலவில்லை. என் மனைவியின் உடல்நலக் குறைவு காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எங்கள் நலம் விரும்பும் நண்பர்களின் வலுவான பிரார்த்தனைகளால் அவர் வீடு திரும்பி, உடல் நலம் தேறிவருகிறார். வரும் நாட்களில் மேலும் பல நல்ல உள்ளங்களின் பிரார்த்தனைகளும் சேர்ந்து, இன்னும் விரைவாக அவர் உடல் நலம் தேறுவார் என்று நம்புகிறேன்.

நமது கடந்த உரையாடலில், தமிழ்நாட்டின் அண்டை மாநிலமான கர்நாடகத்தில் நடைபெற்ற முக்கியமான சட்டமன்றத் தேர்தல் குறித்து உரையாடினேன். ஆட்சிக்கு எதிரான பொதுவான மனப்போக்கு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, லஞ்ச ஊழல், அனைத்திற்கும் மேலாக, உட்கட்சிப் பூசல்கள், ஜாதி வேறுபாடுகள் ஆகிய காரணங்களால் பாஜக முதல்வர் பஸவராஜ் பொம்மை, ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வது கடினம் என்று அப்போதே கூறியிருந்தேன்.

மே 13 அன்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, பொம்மை மிக மோசமான தோல்வியைச் சந்தித்தார். பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாஜகவின் பல பெரும் தலைவர்கள் டில்லியிலிருந்து வந்து அனல் பறக்கும் பிரச்சாரம் மேற்கொண்டபோதும், மொத்த 224 இடங்களில் 135 (60வீதம்) இடங்களை வென்று அறுதிப் பெரும்பான்மையுடன் காங்கிரஸ் வெற்றி பெற்றது. 2018 சட்டமன்றத் தேர்தலில் 104 இடங்களை வென்ற பாஜக இப்போது 66 இடங்களை மட்டுமே கைப்பற்றியிருக்கிறது. அப்போதும்கூட, பெரும்பான்மைக்குத் தேவையான 113 இடங்கள் பாஜகவிடம் இல்லாத நிலையிலும், காங்கிரஸ் - மதச்சார்பற்ற ஜனதா தளம் கூட்டணியிலிருந்து சில கட்சித் தாவல்களைச் சாதித்து ஆட்சி அமைத்தது.

மோடியின் பிம்பத்தைச் சிதைக்க விரும்பாத பொம்மை, மாநில பாஜகவையே தேர்தல் தோல்விக்குப் பொறுப்பாக்கினாலும், எதிர்க்கட்சிகள் இத்தோல்வியை மோடிக்கு எதிரான பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தின. காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஜெய்ராம் ரமேஷ், “இந்த வெற்றி, காங்கிரஸுக்கு ஆதரவான தெளிவான வெற்றி என்பதுடன், இது பாஜகவுக்கு எதிரானது என்பதை விட, பிரதமருக்கு எதிரானது. காரணம், பாஜகவின் பிரச்சாரம் என்பது முழுவதும் பிரதமரால் கட்டமைக்கப்பட்டது. பிரச்சாரம் முழுவதும் பிரதமரின் சாலை ஊர்வலங்கள், பிரதமரின் உரைகள், பிரதமரின் காணொலிச் செய்திகள் என, கர்நாடகத்தில் பாஜக பிரச்சாரம் என்பது பிரதமருடைய, பிரதமரால், பிரதமருக்காக என்றே இருந்தது. மற்ற அனைவரும் ஓரம் கட்டப்பட்டனர்” என்று கூறினார்.

ஆட்சியமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மை பெற்றிருந்தாலும், காங்கிரஸ் கட்சி குழப்பத்தில்தான் இருக்கிறது. சித்தராமையா முதல்வர் பதவியில் சுகமாக அமர்ந்திருக்கவில்லை. காரணம், தேர்தல் முடிவுகள் வெளியானதும், அவரது போட்டியாளர் சிவகுமார், கட்சியின் பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு, தான் முதல்வராவதற்கே இருப்பதாக பகிரங்கமாக அறிக்கை விடுத்ததுடன், மாநில காங்கிரஸுக்குள் கலகத்தை ஏற்படுத்தி, சித்தராமையாவை ஆட்சியிலிருந்து இறக்க, நேரம் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

இருப்பினும், சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா இவர்களை உள்ளடக்கிய காந்தி குடும்பமும் காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கர்கேவும் (கர்நாடகத்தைச் சேர்ந்த இவர், தனது காந்தி குடும்ப விசுவாசம் காரணமாக, அவர்களால் கட்சித் தலைமைப் பதவிக்குக் கைகாட்டப்பட்டவர்) சித்தராமையாவையே முதல்வர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தனர். காரணம், கட்சியில் அவர் மூத்தவர் என்பதும், முன்னரே முதல்வர் பதவியை வகித்திருக்கிறார் என்பதும் உட்கட்சி ஆட்சிக் கவிழ்ப்பு சகஜமாகிவிட்ட இந்தக் காலத்தில், முழு ஐந்தாண்டு கால ஆட்சியைத் தக்க வைத்திருந்த முந்தைய வரலாறு அவருக்கு இருக்கிறது என்பதுமாகும்.

சிவகுமார் துணை முதல்வராக இருப்பார் என்றும், இரண்டரை ஆண்டு காலம் முடிந்த பிறகு பதவிப் பரிமாற்றம் நடந்து, அவர் முதல்வராவார் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், இரு தலைவர்களிடையே பரஸ்பரம் சந்தேகம் நிலவி வருகிறது. மேலும், சித்தராமையாவின் தளபதிகள், முப்பது மாத ஆட்சிக்குப் பிறகு, சிவகுமாரின் கீழ் துணை முதல்வராக சித்தராமையா செயல்பட மாட்டார் என்றும், அவர் பதவி விலகமாட்டார் என்றும் அறிக்கைகள் வெளியிட்டனர்.

மே 20 அன்று சித்தராமையா முதல்வராகவும் சிவகுமார் துணை முதல்வராகவும் பதவியேற்றபோது, 34 அமைச்சரவை உறுப்பினர்களில் 10 பேர்தான் பதவியேற்றனர். மீதமுள்ள 24 பேரும் சனிக்கிழமைதான் பதவியேற்றனர். அதுவும், சித்தராமையா - சிவகுமார் இடையேயான மோதலில், டில்லியிலிருந்து காந்தி குடும்பமும் கர்கேவும் மத்தியஸ்தம் செய்த பின்னர்.

தனது தேர்தல் வெற்றியைக் களிப்புடன் கொண்டாடவேண்டிய கர்நாடக காங்கிரஸ், கட்சி, மாநிலம், அதன் மக்கள் இவர்களின் நலனுக்காகத் தமது தனிப்பட்ட அகம்பாவத்தை விடமுடியாத இந்த இரு தலைவர்களின் மோதலில் சிக்கித் தவிக்கிறது. இதுதான் அரசியல், இதுதான் ஜனநாயகம்.

காங்கிரஸின் இந்தக் குழப்ப நிலையால் குதூகலமடையவேண்டிய பாஜக தனது மோசமான தேர்தல் தோல்வி காரணமாக இந்த ஆனந்தத்தை அனுபவிக்க இயலவில்லை. 224 மொத்த இடங்களில் 100 இடங்களையாவது பாஜக பெற்றிருந்தால், அதன் தலைவர்கள், இம்முறை வெறும் 19 இடங்களை மட்டுமே பெற்றுள்ள மதச்சார்பற்ற ஜனதா தளத்திலிருந்து உறுப்பினர்களை வாங்கி, நிச்சயம் ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டிருப்பார்கள். முன்னாள் பிரதமர் தேவகௌடா தலைமையிலான மதச்சார்பற்ற ஜனதா தளம் கர்நாடக அரசியலில் பெரும் பங்கு வகித்து வந்திருந்தது. தேவகௌடா, அவர் மகன் குமாரசாமி இருவருமே முதல்வர் பொறுப்பில் இருந்துள்ளனர். 2018இல் 18.36 வாக்கு சதவிகிதம் பெற்றிருந்த இக்கட்சி 2023இல் 13.3 சதவிகிதம் வாக்குகளையே பெற்றுள்ளது. இக்கட்சியின் வலுவான கோட்டைகளில் சிலவற்றை பாஜக கைப்பற்றியுள்ளது.

## அடுத்த ஆண்டின் பொதுத் தேர்தல் இந்த ஆண்டிலேயே நடைபெறலாம்?

தென் மாநிலங்களில் பாஜக ஆட்சியில் இருந்த ஒரே மாநிலமாதலால், மே மாத கர்நாடகத் தேர்தலில் வெல்வது பாஜகவுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. அடுத்த மே மாதம் நாடாளுமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்று, மூன்றாவது முறை ஆட்சியமைக்க எண்ணும் மோடிக்கு இது ஒரு பேரிடிதான். மோடி, அவரது சர்வவல்லமை படைத்த உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர், ஆர் எஸ் எஸ் தலைவர்களுடன் இணைந்து, இந்த கர்நாடகத் தேர்தல் தோல்விக்குத் தக்க பதிலடி கொடுக்க, வியூகங்களை வகுக்கும் என்றும், உட்கட்சிப் பிரச்னைகள், ஜாதிக் கணக்குகள் மற்றும் தேர்தல் நோக்கிய செயல்பாடுகளில் வழிகாட்டும் மற்ற சமூக விவகாரங்களின் நிர்வாகம் குறித்த பயனுள்ள பாடங்களைக் கற்கும் என்றும் நான் எதிர்பார்க்கிறேன். இந்தியாவின் சில முக்கியமான மாநிலங்களில் தோல்வியைச் சந்தித்த ஓராண்டு காலத்துக்குள்ளாகவே, அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம் மாநிலங்களில் பெருவெற்றி பெற்ற தனது கடந்த காலச் சாதனைகளிலிருந்து பாஜக ஊக்கம்பெறலாம். உதாரணமாக, 2018இல் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் கர்நாடக மாநிலங்களில் சட்ட மன்றத் தொகுதிகளில் பாஜகவைக் காட்டிலும் காங்கிரஸ் அதிக இடங்களை வென்றது. ஆனால், அடுத்த ஆண்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய பிரதேசத்தின் மொத்த 29 இடங்களில் 28ஐயும் ராஜஸ்தானில் 25இல் 24ஐயும் கர்நாடத்தில் 28இல் 25ஐயும் பாஜக வென்றது.

மோடி மற்றும் பாஜகவுக்குச் சாதகமான இன்னொரு விஷயம், எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மை. எதிர்க் கட்சித் தலைவர்களில் பலர், மோடிக்கு எதிரான 2024 பாராளுமன்றத் தேர்தலில், காங்கிரஸ் தலைமையின் கீழ் செயல்பட விரும்பவில்லை. அதில் பலர், இப்போதைய கர்நாடக வெற்றியும் காங்கிரஸின் சாதனை என்று ஏற்றுக்கொள்வதற்கு மாறாக, அந்தத் தேர்தல் முடிவு, மோடிக்கு எதிரான மக்களின் வெறுப்பைத்தான் காட்டுகிறது என்கிறார்கள். டில்லியில் நடைபெறவுள்ள புதிய பாராளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவைப் புறக்கணிக்க விடுக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ் தலைமையிலான அழைப்பைப் புறக்கணிக்க, அந்த பாஜக எதிர்ப்புத் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஆனால், ராகுல்தான் இந்த வெற்றியின் ‘ஹீரோ’ என்கிறது காங்கிரஸ். காரணம், கடந்த செப்ரெம்பர்-ஒக்ரோபர் மாதங்களில் 22 நாட்கள், தனது ‘பாரத் ஜோடோ யாத்திரை’யின்போது கர்நாடகத்தின் பல மாவட்டங்களின் 500 கி. மீட்டருக்கும் அதிகமாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் ராகுல் காந்தி. கர்நாடகத் தேர்தலில் மோடியின் பிம்பத்தைச் சிதைத்த ராகுலே அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காவிக் கட்சிக்கு எதிரான கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் தகுதி பெற்றவர் என்ற ரீதியில் தனது வியூகத்தை காங்கிரஸ் ஏற்கெனவே வகுக்கத் தொடங்கிவிட்டது. ராகுலின் யாத்திரையில் அவர் பயணம் செய்த தொகுதிகளில் கட்சி எப்படி மேம்பட்ட வெற்றியைப் பதிவு செய்துள்ளது என்பது குறித்த ஓர் அறிக்கையை காங்கிரஸின் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ளார்.

“கர்நாடகத்தில் பாரத் ஜோடோ யாத்திரையின் நேரடியான தாக்கம் இப்படியிருக்க, மறைமுகமாக, கட்சியின் ஒற்றுமைக்கும், தொண்டர்களின் ஊக்கத்துக்கும் கர்நாடகத் தேர்தலுக்கான களத்தைத் தயார் செய்வதற்கும்கூட ராகுலின் யாத்திரை உதவியுள்ளது. அந்தப் பயணத்தின்போது கர்நாடக மக்களுடன் ராகுல் உரையாடியதன் அடிப்படையில்தான் எங்கள் தேர்தல் அறிக்கை மற்றும் வாக்குறுதிகள் முடிவுசெய்யப்பட்டன” என்று ஜெய்ராம் ரமேஷ் ட்வீட் செய்திருந்தார்.

காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து, தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு. க. ஸ்டாலின் உட்பட, பல கூட்டணிக் கட்சிகள், நாடாளுமன்றக் கட்டடத்தை ஜனாதிபதி திரௌபதி முர்மு மூலம் திறக்கச் செய்யாமல், பிரதமர் மோடி திறந்து வைக்கவிருப்பதையடுத்து இவ்விழாவைப் புறக்கணிக்க அறைகூவல் விடுத்துள்ளனர். இந்திய பாராளுமன்றத்தை உள்ளடக்கிய, 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மையத்தை, மோடியின் சுயவிளம்பரத் திட்டமாக எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

ஆனால், எதிர்க்கட்சிகள் வீசும் இந்தக் கற்கள் குறித்து நரேந்திர மோடி சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக, அண்மையில் காஷ்மீரில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின் போது, இந்தியப் பிரதமர் முதல் வரிசையில் இல்லாததையும், உலகத் தலைவர்கள் இவருடன் உரையாடவில்லை என்பதையும் சித்தரிக்கும் சில புகைப்படங்களை மோடி - பாஜக எதிர்ப்பு ஊடகங்களும் எதிர்க்கட்சித் தலைவர்களும் பகிர்ந்து பரிகசித்தனர். ஆனால், மாநாட்டைக் கூட்டியிருக்கும் நாடான இந்தியா, தனது விருந்தினர்கள் தங்களுக்குள் சுதந்தரமாக அளவளாவ வாய்ப்பளித்து, தனக்கு முன்னிலை அளிப்பதை மோடி தவிர்த்திருக்கிறார்.

அண்மையில் சிட்னியில் (செவ்வாய், மே 23) உட்புற விளையாட்டரங்கம் ஒன்றில் 20 ஆயிரம் இந்திய வம்சாவளியினர், இந்திய பிரதமரை வரவேற்கக் கூடியிருந்ததையும் அங்கு நிலவிய ஆரவாரத்தையும் அப்போது அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி ஆல்பனீஸ் மோடியை ‘த பாஸ்’ என்று அழைத்ததையும் குறித்து எதிர்க்கட்சியினர் பொருமிக்கொண்டிருக்கின்றனர்.

அடுத்த ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சியை வெற்றியை நோக்கி இட்டுச் செல்வதில் இந்த ‘பாஸ்’ தொடர்ந்து முன்னிலை வகிப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். தனக்கு எதிரான கட்சிகளின் ஒற்றுமைக்கு அதிக அவகாசம் இல்லாத வகையில், வரும் டிசம்பரில், முன் கூட்டியே தேர்தலை நடத்த வாய்ப்புள்ளது என்று அரசியல் மற்றும் ஊடக வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது. அண்மையில் 2000 ரூபாய் நோட்டுகளைப் புழக்கத்திலிருந்து அகற்றும் அவரது முடிவும்கூட, எதிர்க்கட்சிகள் தேர்தலுக்காகப் பதுக்கி வைத்திருக்கும் இந்த உயர் மதிப்பு நோட்டுகளை மதிப்பிழக்கச் செய்யும் உத்தியே என்றும் கூறப்படுகிறது.

நான் நிறைய உரையாடிவிட்டேன், இருந்தும், நீண்ட நாட்களாக நாம் சந்திக்காததால்,

இன்னும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன. விரைவில் சந்திப்போம். வணக்கம்.

●

# ‘அறகலய’ செயற்பாட்டாளர்களுக்கு எதிரான அவதூறுப் பிரசாரங்கள்



வீரகத்தி தனபாலசிங்கம்



கடந்த வருடத்தைய அறகலய மக்கள் கிளர்ச்சியை போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், விபச்சாரம் செய்பவர்கள், முறைகேடான பாலியல் பழக்க வழக்கமுடையவர்கள் என்று பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுகின்ற சமூக விரோத கும்பலின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்ட ஒரு தவறான போராட்டமாக காண்பிக்கும் நோக்குடன் அரசாங்க அரசியல்வாதிகள் அவதூறு பரப்பும் செயல்களில் ஏற்கெனவே ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். அண்மைய நாட்களாக அவர்களில் சிலர் அத்தகைய செயல்களை தீவிரப்படுத்தியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

சில தினங்களுக்கு முன்னர் ஓரிரு குழந்தைகள் அனாதரவாக விடப்பட்ட சம்பவங்கள் குறித்து செய்திகள் வெளியாகின. ரயில் பாதையிலும் குழந்தையொன்று கண்டெடுக்கப்பட்டது. அதையடுத்து அறகலய செயற்பாட்டாளர்கள் முறைகேடாக நடந்துகொண்டதால் தங்களுக்கு பிறக்கும் குழந்தைகளை தண்டவாளத்தில் விட்டுச்செல்கிறார்கள் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார். நடமாடும் விபச்சார விடுதியை நடத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர் முக்கியமான அறகலய செயற்பாட்டாளர் என்று கூறும் செய்திகள் வெளியாகியிருந்தன.

**மக்கள் கிளர்ச்சிக்கு வெளிநாட்டுச் சதியே காரணம் என்றும் சமூகவிரோத சக்திகளே அறகலயவை வழிநடத்தியதாகவும் அவதூறு பரப்பும் அரசியல்வாதிகள் தங்களது தவறான ஆட்சிமுறையின் விளைவான பொருளாதார நெருக்கடியின் துன்பங்களை தாங்கிக்கொள்ள முடியாமல் வீதிகளில் இறங்கிய மக்களையே உண்மையில் அவமதிக்கிறார்கள்.**

களுத்துறையில் ஹோட்டல் ஒன்றுக்கு வெளியே 16 வயது யுவதி இறந்து கிடந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவரை அந்த மாவட்டத்தின் அறகலய பிரதம அமைப்பாளர் என்று முன்னாள் அமைச்சர் ரோஹண அபேகுணவர்தன கூறினார்.

அறகலயவின்போது சடங்கு ஒன்றைச் செய்த மாந்திரீகர் மின்னல் தாக்கி மரணமடைந்தார். இன்னொருவர் ரயில் மோதிப் பலியானார். வேறு ஒருவர் மனநோயாளியாகி அலைந்து திரிகிறார். பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி



அத்துக்கோரள கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் சிறையில் மரணமடைந்தார் என்று கூறிய அபேகுணவர்தன இவர்கள் எல்லோருக்கும் இந்த பிறப்பிலேயே தண்டனை கிடைத்துவிட்டது என்று ஒரு வக்கிரமான திருப்தியை வெளியிட்டார்.

அறகலயவில் பங்கேற்றவர்களுக்கு எல்லாம் தண்டனை கிடைத்துவருகிறது என்ற அவரின் கூற்றின் தர்க்கத்தின்படி பார்த்தால் இன்னும் சில மாதங்களில் நாட்டு சனத்தொகையில் ஒரு கணிசமான எண்ணிக்கையானவர்கள் உயிருடன் இருக்கவாய்ப்பில்லை என்றாகிறது.

அறகலயவை இலங்கை வரலாறு காணாத மக்கள் எழுச்சி என்று வர்ணித்த ஊடகங்கள் கூட அதற்கு களங்கம் கற்பிக்கும் அரசியல்வாதிகளின் பிரசாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் காண்கிறோம்.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த அரசியல்வாதிகளை பொறுப்புக்கூறவைப்பதற்கு நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படாமல் இருக்கும் நிலையில், தகுதியற்ற ஒரு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் விரட்டியடித்த மக்கள் கிளர்ச்சி தொடர்பில் ஒரு புறத்தில் சதிக்கோட்பாடுகள் புனையப்பட்டுக்கொண்டிருக்கும் அதே வேளை மறுபுறத்தில் அறகலய செயற்பாட்டாளர்களை ஒரு சமூக விரோத கும்பலாக காண்பிக்கும் நோக்குடன் அவதூறுப் பிரசாரங்கள் தீவிரப்படுத்தப்படுகிறது.

அறகலயவின்போது கொழும்பு காலி முகத்திடலில் கரைபுரண்ட மக்கள் வெள்ளம் தவறான ஆட்சி முறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து முறைமை மாற்றத்தைக் கோரிநின்ற இலங்கைச் சமூகத்தின் உலகறிந்த ஒரு சின்னமாகும். சமூகத்தின் சகல பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் அங்கு வந்து தங்கள் ஆதரவை வழங்கினார்கள். சமூக விரோத சக்திகளும் கூட அங்கு ஊடுருவியிருக்கக்கூடும். ஆனால் அதை பொதுமைப்படுத்த முடியாது. ஆட்சியதிகார வர்க்கத்தை ஆட்டங் காணச் செய்த அந்த மாபெரும் மக்கள் போராட்டத்தை விரும்பத்தகாத சக்தி களின் ஒரு திரட்சி என்று மக்களை நம்ப வைக்கலாம் என்று இலங்கையின் வர லாறு முன்னென்றுமே கண்டிராத படு மோசமான ஊழல் அரசாங்கத்தில் அங் கம் வகித்த அரசியல்வாதிகள் நினைத்து விடக்கூடாது. தங்களது ஆட்சிமுறை யின் மோசமான தவறுகளே மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்தது என்பதை இந்த அரசியல்வாதிகள் இன்னமும் கூட ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

ராஜபக்சாக்களின் ஆட்சியின் தோல்விக்கு பொறுப்பானவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களுக்கு மக்கள் கிளர்ச்சி பற்றிய பீதி எப்போதும் இருக்கவே செய்யும். அறகலய கிளர்ச்சி படைபலம் கொண்டு ஒடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்கு பின்னரான இலங்கை அரசியல் முன்னரைப் போன்று இருக்கப் போவதில்லை. நாட்டு மக்கள் இப்போதைக்கு ஒரு கிளர்ச்சிக்கு தயாரில்லாமல் இருக்கலாம். ஆனால் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கும் மக்களின் கண்கள் முன்னாலேயே தாங்கள் செயற்படவேண்டியிருக்கும் என்பதை அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கப்பெற்றதை அடுத்து பொருளாதார மறுசீரமைப்பு என்று கூறிக்கொண்டு ஜனாதிபதியும் அரசாங்கமும் அண்மைய மாதங்களாக முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் மக்களின் பொருளாதார இடர்பாடுகளில் ஒப்பீட்டளவிலான ஒரு தளர்வை ஏற்படுத்தியிருக்கின்ற போதிலும், சனத்தொகையில் அதிகப்பெரும்பாலானவர்கள் வாழ்க்கைச் செலவை சமாளிக்கமுடியாமல் தொடர்ந்தும் திணறிக்கொண்டேயிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் மேரிலாண்ட் மாநிலத்தில் உள்ள ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதார நிபுணரான பேராசிரியர் ஸ்டீவ் ஹேங்க் நாடுகளின் பொருளாதார நிலைவரங் களை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் மதிப்பீடு செய்கின்ற துன்பக் குறியீட்டு (Annual Misery Index) வரிசை யில் 2022 இல் மிகுந்த துன்பம் கொண்ட முதல் 15 நாடுகளில் இலங்கை 11 வது இடத்தில் இருக்கிறது.



157 நாடுகளின் பொருளாதார நிலைவரங்களை மதிப்பிட்டு அவர் தயாரித்த அந்த பட்டியலில் சிம்பாப்வே, வெனிசூலா, சிரியா, லெபனான், சூடான், ஆர்ஜென்டீனா, யேமன், உக்ரெய்ன், கியூபா, துருக்கி, இலங்கை, ஹெய்டி, அங்கோலா, ரொங்கோ மற்றும் கானா ஆகிய நாடுகளே மக்கள் மிகுந்த துன் பத்தை அனுபவிக்கும் நாடுகளாக காணப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கி, உலக சுகாதார நிறுவனம், மற்றும் உணவு, விவசாய நிறுவனம் ஆகியவற்றின் அண்மைய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இலங்கை தற்போது மிகவும் வேதனையான நிலைவரத்தை எதிர்நோக்குகிறது.

மத்திய வங்கி இறுதியாக வெளியிட்ட அறிக்கையில் உள்ள விபரங்களின் படி நாட்டு சனத்தொகையில் 40 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் கல்விக்கும் சுகாதாரத்துக்கும் செலவிடும் தொகையை கடுமையாக குறைத்துக் கொண்டுவிட்டார்கள். உணவுக்கான செலவினத்தின் சுமையே இதற்கு காரணமாகும். இதனால் கல்வி முறை கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. சிறுவர்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மீது அக்கறை காட்டுவதற்கு பெரும்பாலான குடும்பங்களினால் இயலாமல் இருக்கிறது. சிறுவர்கள் மந்தபோசாக்கிற்கு இரையாவதால் நாளடைவில் பாரதூரமான சமூக - பொருளாதார பிரச்சினைகள் தோன்றும் ஆபத்து இருக்கிறது.

தற்போது நாட்டில் உள்ள ஐந்து வயதுக்கும் குறைவான சிறுவர்களில் 43 சதவீதமானவர்களும் 14 இலட்சம் பாடசாலை சிறுவர்களும் மந்தபோசாக்கினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பிரச்சினை அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவை, மற்றும் நுவரேலியா மாவட்டங்களில் மிகவும் கடுமையானதாக இருக்கிறது. இந்த மாவட்டங்களில் உள்ள பாடசாலை சிறுவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு உகந்த உணவு கிடைப்பதில்லை. அதேவேளை சிறுவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் மந்தபோசாக்கினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த இரு வருடங்களாக உணவு மற்றும் நானாவித பொருட்களுக்கான குடும்பத்தின் சராசரி செலவினம் 75 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. கணிசமான எண்ணிக்கையில் நடுத்தர வர்க்க குடும்பங்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுவிட்டன. ஏற்கெனவே வறுமை நிலையில் இருந்த குடும்பங்கள் மோசமான வறுமையில் மூழ்கிவிட்டன. சிறுவர்கள் மாத்திரமல்ல பாலூட்டும் தாய்மார்களும் கர்ப்பிணிகளும் கூட மந்தபோசாக்கினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளிலும் ஏழு குழந்தைகள் அவற்றின் ஐந்தாவது பிறந்ததினத்தைக் காண உயிருடன் இருப்பதில்லை. 2021 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் 12.7 சதவீதமானவர்களே வறுமைப்பட்டவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தனர். ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாக 2022 ஆம் ஆண்டில் வறுமைப்பட்ட குடும்பங்கள் 26 சதவீதமாக அதிகரித்தன. இவ்வருடம் இது 37 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

உலகில் பணவீக்கத்தில் நான்காவது இடத்திலும் சிறுவர்கள் மத்தியிலான மந்தபோசாக்கில் ஆறாவது இடத்திலும் இலங்கை இருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் மக்கள் மீண்டும் கிளர்ச்சியில் இறங்கக்கூடும் என்ற பீதி அரசியல்வாதிகளுக்கு நிச்சயமாக ஏற்படவே செய்யும். மீண்டும் ஒரு அறகலயவுக்கு இடமளிக்கக்கூடாது என்பதில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் உறுதியாகவே இருக்கிறார்கள். சிறிய ஒரு ஆர்ப்பாட்டத்தைக் கூட அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் பொலிசாரையும் படையினரையும் பயன்படுத்தி அரசாங்கம் அடக்குகிறது.

மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்து கிளர்ச்சிக்கான சூழ்நிலைகளை

(09ஆம் பக்கம் பார்க்க)

# கௌபீசணம் இல்லாததை மறந்து வேட்டியைக் கழற்றினால் என்னாகும்?

பனங்காட்டான்

இலங்கையின் இப்பிரச்சனைக்கு எழுபது வயதாகிறது. சிங்களவர் ஆளும் இனமாகவும், தமிழர் ஆளப்படும் இனமாகவும் எழுதாத சட்டத்தை முன்வைத்து உருவான நடைமுறையே இனவாதத்தின் தோற்றுவாய்.

தமிழருக்கு எதிரான இனவாதத்தின் பெற்றோராராக இலங்கையை ஆட்சி புரிந்த - புரியும் அனைத்து சிங்களக் கட்சிகளின் தலைவர்களையும் குறிப்பிடலாம். தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், தனிச்சிங்கள சட்ட அமுலாக்கம், களனிப் பாதயாத்திரை, பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் என்று ஆரம்பமான இனவாதம் முள்ளிவாய்க்காலில் முடிந்துவிடவில்லை.

ஜெனிவாவில் பல தீர்மானங்கள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டதாயினும் அவற்றை முறியடித்து வந்த சிங்கள ஆட்சி பீடங்கள், சர்வதேசத்தை நிராகரித்து தம்மிஷ்டப்படி தமிழரை அடக்கியாளும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் போர்க்கால படைத்துறை அதிகாரிகளுக்கான பயணத்தடை, போரை வழிநடத்திய அரசியல் தலைவர்கள் மீதான தடை என்பவற்றோடு காரியங்கள் நின்றுவிடவில்லை. சில நாடுகளில் இனப்படுகொலையை முன்னிறுத்தி பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்விடயத்தில், அரசியல் கட்சி வேறுபாடின்றி கனடிய அரசாங்கங்கள் நிறைவேற்றும் பிரேரணைகள் கவனத்துக்குரியவை.

கனடாவின் பிரதான மாகாணமாக விளங்குவது ஒன்ராறியோ. கனடாவில் வாழும் சுமார் மூன்று லட்சம் தமிழரில் எழுபது வீதத்துக்கும் அதிகமானவர்கள் இங்குதான் உள்ளனர். ஒன்ராறியோ மாகாண சட்டமன்றத்தில் தேர்தல் மூலம் தெரிவான இரண்டு தமிழர் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளனர்.

ஒன்ராறியோ மாகாண சட்டமன்றத்தில் ஒரு பிரேரணை அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவை பெற்று நிறைவேறி சட்டமாகியது. இப்பிரேரணையை முன்மொழிந்தவர் ஸ்காபரோ - றூஜ்பார்க் தொகுதி மக்கள் பிரதிநிதி விஜய் தணிகாசலம். மே மாதம் 18ம் திகதிக்கு முன்னரான ஒரு வாரத்தை தமிழின அழிப்பு கல்வி வாரமாக இச்சட்டம் பிரகடனம் செய்துள்ளது.

இலங்கை அரசின் சகல வளங்களையும் பெற்று இயங்கும் அவர்களின் ஆதரவாளர்கள் இச்சட்டத்தை எதிர்த்து ஒன்ராறியோ உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர் சிங்களத் தரப்பினர். எவ்வாறாவது தமிழின அழிப்பு என்பதை ஒன்ராறியோ சட்டப்புத்தகத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்பதே இவர்களது குறிக்கோள். இதற்கான மேன்முறையீட்டுச் செலவுக்கு சிங்கள தேசமே நிதி வழங்குவது மறைப்புக்கு அப்பாற்பட்டது.



மாகாண மட்டத்திலான இனஅழிப்புச் சட்டத்தை எதிர்த்து சிங்கள தேசம் போராடிக் கொண்டிருக்கையில் கடந்த வருடம் (2022) கனடிய மத்திய நாடாளுமன்றம் ஒரு மனதாக பிரேரணையொன்றை நிறைவேற்றியது. "ஒவ்வொரு வருடமும் மே மாதம் 18ம் திகதியை தமிழின அழிப்பு நாளாக நினைவு கொள்வதை இந்தச் சபை ஏற்றுக்கொள்கிறது" என்று இப்பிரேரணை வாசகம் அமைந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக இந்த வருடம் ஜனவரி மாதம் பத்தாம் திகதி கனடிய அரசு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச, கோதபாய ராஜபக்ச உள்பட நால்வருக்கு பயணத் தடையை விதித்தது. மகிந்தவும் கோதபாயவும் மனிதகுலத்துக்கு எதிரான போரை இறுதிவரை வழிநடத்தியவர்கள்.

அமெரிக்கா ஏற்கனவே ராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கும் மேலும் சில படைத்தளபதிகளுக்கும் பயணத் தடை விதித்தது. கடற்படைத் தளபதியாகவிருந்த வசந்த கரணகொடவுக்கு சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கா தடை விதித்தது. அமெரிக்க தடைகளுக்கு எதிராக இலங்கை அரசு எதனையும் செய்ய முடியாதுள்ளது. ஆனால், தடை விதிக்கப்பட்ட சவேந்திர சில்வாவும், வசந்த கரணகொடவும் தாங்களோ தங்கள் குடும்பத்தினரோ அமெரிக்கா செல்ல விசாவுக்கு விண்ணப்பிக்கவில்லையென்று தெரிவித்து, தங்கள் மீதான தடையை அர்த்தமற்றது என்பதுபோல் காட்டி தங்களை கதாநாயகர்களாக காட்சி கொடுக்க முனைந்துள்ளனர்.

ஆனால், கனடிய பிரதமர் இனப்படுகொலையை சுட்டி விடுத்த முள்ளிவாய்க்கால் 18 அறிக்கை சிங்கள தேசத்தை சற்று அசைத்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க அவரது வழமையான பாணியில் எதுவுமே தெரியாததுபோல (புரியாதவர்போல அல்ல) தம்மைக் காட்டுகிறார். பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் ரணில் பாணியில்தான்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தமக்கான ஒரு கடமையாக இலங்கையிலுள்ள கனடிய தூதுவரை அழைத்து இலங்கை அரசின் அதிருப்தியை தெரிவித்துள்ளார். புதுவருடப் பிறப்பு, கிறிஸமஸ், தீபாவளி கொண்டாட்ட நாட்களில் ஜனாதிபதி, பிரதமர், கட்சித் தலைவர்கள் விடுக்கும் வாழ்த்துச் செய்திகள் போன்ற மாமூலான ஒன்றுதான் அமைச்சர் அலி சப்றியின் அதிருப்தி அறிக்கை.



கனடிய பிரதமர் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று குறிப்பிட்டுள்ளதால், இலங்கை முன்னெடுக்கும் நல்லிணக்க முயற்சிகளுக்கு அது தடையாக அமைவதாக அமைச்சர் அலி சப்றி குறிப்பிட்டிருப்பது வேடிக்கையான விடயம். பொறுப்புக்கூறல், சர்வதேச நீதி விசாரணை பொறிமுறை என அனைத்தையுமே இலங்கை தொடர்ந்து



**இலங்கையின் இனப்படுகொலையையும் இனவாத, மதவாத நடவடிக்கைகளையும் விமர்சித்து கனடிய பிரதமர் ரூடோ விடுத்த அறிக்கையை சிங்கள மக்கள் தெரிந்து கொள்ளக்கூடாதென்பதற்காக கொழும்பின் பிரதான ஊடகங்கள் இருட்டடிப்பு செய்தன. ஆனால், விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் ரூடோவைக் கண்டித்து விடுத்த அறிக்கைகளுக்கு அதிமுக்கிய இடமளிக்கப்பட்டதால் ரூடோவின் அறிக்கை ஊடாக சர்வதேசத்தின் நிலைப்பாடு என்ன என்பது அம்பலமாகியுள்ளது.**

நிராகரித்து வருவதாலேயே ஜெனிவா அடுத்தடுத்து இலங்கை மீது தீர்மானங்களை நிறைவேற்றி வருகிறது. இவ்விடயத்தில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் மிக முக்கியமானது கனடா.

"இலங்கையில் எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானத்தையும் மீளிணக்கத்தையும் அடைவதற்கு இன்றியமையாத அம்சங்களான மதம், நம்பிக்கை, பன்மையியல் ஆகியவற்றின் சுதந்திரத்தை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதில் கனடா உலக நாடுகளுக்கு தலைமைத்துவம் வழங்கியுள்ளது" என்ற கனடியப் பிரதமரின் அறிக்கையின் வாசகத்தை அமைச்சர் அலி சப்றி கவனித்திருந்தால், இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ரூடோவின் அறிக்கை தடையாக அமையுமென்று குறிப்பிட்டிருக்கமாட்டார்.

கனடிய பிரதமரின் அறிக்கைக் கெதிராக கொழும்பிலுள்ள கனடிய தூதரகத்தின் முன்னால் சிறுதொகையினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவரான விமல் வீரவன்ச தமது பங்குக்கு ஒன்றை கூறியுள்ளார்: கனடாவில் பூர்வீக குடிமக்களை இனப்படுகொலை செய்த நாள் ஜூன் 21ம் திகதி. அன்றைய நாள் கனடிய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளார் (கொழும்பிலா அல்லது கனடாவிலா என்று குறிப்பிடவில்லை).

"கனடா மிகப்பெரிய நாடு. அங்கு போதிய நிலவசதி உண்டு. எனவே தமிழருக்கு அங்கு ஓர் ஈழத்தை அமைத்துக் கொடுக்கலாம்" என்று பிரதமர் ரூடோவுக்கு இலவச ஆலோசனை வழங்கியுள்ளார் முன்னாள் கடற்படை அதிகாரியும், தற்போது நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர.

கனடாவில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பூர்வீக குடிகளுக்கு எதிரான இனரீதியான தாக்குதல்களுக்கு பிரதமர் ரூடோ பல தடவை பகிரங்க மன்னிப்பு கோரியதும், அவர்களின் புனர்வாழ்வுக்காக கோடிக்கணக்கான டாலர்களை ஒதுக்கி வருவதையும் விமல் வீரவன்சவும், சரத் வீரசேகரவும் அறியாதிருப்பது வெட்கக்கேடானது.

இனவாதத்தை ஊட்டி வளர்த்து அதிலிருந்து விடுபட முடியாதுள்ள இலங்கை இப்போது மதவாதத்தையும் இணைத்து ஊதி வளர்த்து வருகிறது. இவ்வாறான தொடர் செயற்பாடுகளை கண்டித்த கனடியப் பிரதமர் அறிக்கையை இலங்கையில் வாழும் சிங்கள மக்கள் அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக இதனை கொழும்பின் பிரதான ஊடகங்கள் மறைத்தன. ஆனால், விமர் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோரின் ரூடோவுக்கு எதிரான அறிக்கைகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து, சர்வதேசம் இலங்கையை எவ்வாறு பார்க்கின்றது என்பதை அப்பட்டமாக தெரியப்படுத்தியுள்ளன.

ஏற்கனவே, கௌபீசணத்தை இழந்து நிற்பவர் அதனை மறந்து வேட்டியைக் கழற்றினால் என்னாகும்?

# 'அறகலய' செயற்பாட்டாளர்களுக்கு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாமல் செய்வதென்பது அதிகார வர்க்கத்தினால் சாதிக்கமுடியாத ஒன்று. பதிலாக அடக்குமுறையின் ஊடாக கிளர்ச்சி மூளாமலிருப்பதை உறுதி செய்வதிலேயே அவர்கள் முழுமூச்சாக செயற்படுவார்கள்.

இன்று வீதிகளில் அறகலய இல்லாமல் இருக்கலாம். ஆனால் விலைவாசி காரணமாக ஒவ்வொரு வீட்டின் சமையலறையிலும் ஏதோ ஒரு வகையில் அறகலய நிகழ்ந்துகொண்டயிருக்கிறது. பொருளாதார இடர்பாடுகளில் காணப்படுவதாக கூறப்படும் தளர்வின் பயனை பெரும்பாலும் வசதியுடைய குடும்பங்களினாலேயே அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறது.

மக்கள் கிளர்ச்சிக்கு வெளிநாட்டுச் சதியே காரணம் என்றும் சமூகவிரோத சக்திகளே அறகலயவை வழிநடத்தியதாகவும் அவதூறு பரப்பும் அரசியல்வாதிகள் தங்களது தவறான ஆட்சிமுறையின் விளைவான பொருளாதார நெருக்கடியின் துன்பங்களை தாங்கிக்கொள்ள முடியாமல் வீதிகளில் இறங்கிய மக்களையே உண்மையில் அவமதிக்கிறார்கள்.

மீண்டும் ஓர் அறகலய மூளாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான வழிவகைகளை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு அமைச்சர்கள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்ததாக சில தினங்களுக்கு முன்னர் செய்தி.வெளியாகியது. ஓர் அரசியல் புரட்சி ஒன்றின் பரிமாணங்களை எடுத்த மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்த காரணிகளை ஆணைக் குழுவை நியமித்துத்தான் அறிந்து கொள்ளவேண்டுமோ என்ன?

# அகழ்வாராச்சியை அநுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் மேற்கொண்டால்

## தமிழர் அரசோச்சிய வரலாறும் நன்கு தெரியவரும்!

**அனந்த பாலகிட்ணர்**

இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் தற்சமயம் வரலாற்றுத்தடயங்களைத் தேடி வடக்கே பல இடங்களில் அகழ்வாரச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் புதிய பௌத்த விகாரைகளையும் வடக்கே அமைப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது.

இத்தகைய பின்னணியில் வரலாற்றுத் தகவல்களை நன்கு ஆராய்ந்து அநுராதபுரத்திலும் பொலநறுவையிலும் தொல்பொருள் திணைக்களம் நேர்த்தியான அகழ்வாராச்சிகளை மேற்கொண்டால் சோழர் காலத்தில் தமிழர்கள் அரசோச்சிய வரலாறும் நன்கு புலனாகும்.




சோழ வம்சத்தை சேர்ந்த எல்லாள மன்னன் நேர்மையான நல்லாட்சிக்குப் பெயர் பெற்றவர். சிங்கள மன்னரான துட்டகைமுனுவால் தோற்கடிக்கப்பட்ட போதிலும் மிகவும் மரியாதையோடு துட்டகைமுனு மன்னரால் சிறப்பிக்கப் பட்டவர் எல்லாள மன்னர்.

இன்றுங்கூட பொலன்னறுவையில் சோழர் கால தடயங்களை அங்கு கட்டப்பட்டுள்ள சிவாலயங்கள் மற்றும் அவற்றில் சிகிலமடைந்துள்ள பல சிற்பங்கள் மூலமாகவும் அறிந்து கொள்ள முடியும்.

பௌத்த மதம் என்பது சிங்கள மக்களுக்கு மட்டுமே போதிக்கப்பட்டது போலவே இலங்கையிலுள்ள அரைவேக்காடான பௌத்த குருமார் பலர் கருதுகின்றனர்.

ஆனால் பௌத்த மதம் மானிட குலத்துக்கு புத்த பகவானால் போதிக்கப் பட்டதாகும்.

தமிழிலுள்ள ஐம்பெரும் காவியங்களில் குண்டலகேசி, மணிமேகலை, சிப்பதிகாரம் ஆகியவை பௌத்த மதத்தைப் பின்னணியாகக் கொண்டவையாகும்.

வடக்கே பௌத்த விகாரைகளை அமைக்கும் நடவடிக்கை என்பது புத்த பகவானின் போதனைகளை மதிப்பதற்குப்பதிலாக அவற்றை கொச்சைப்படுத்துவதாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

சோழ மன்னர்கள் இந்து - சைவர்கள். கட்டடக்கலை, நீர்ப்பாசனம், போன்றவற்றில் உயரிய தன்மைகளைப்பேணியவர்கள். பலமிக்க கடற்படை, தரைப் படை என்பவற்றோடு நாடுகள் பலவற்றை இந்தோனேசியாவரை வியாபித்தவர்கள். இருந்தபோதிலும் ஏனையோரது மத உணர்வுகளை அவர்கள் மதித்திருந்தார்கள்.

தமிழின் பெருமை எத்தகையது என்பதையும் சைவ சமயம் எவ்வளவு தூரம் தொன்மை வாய்ந்ததென்பதையும் இந்தியாவில் திறக்கப்படுகின்ற புதிய பாராளுமன்ற கட்டடத் தொகுதி மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

இன்றைய இந்திய பிரதமர் பாராளுமன்றில் நல்லாட்சியின் சின்னமாக வைக்கவுள்ள செங்கோல் நந்திச்சின்னத்தை மையமாக முதன்மைப்படுத்தியதாகவும் கோளறு பதிகத்திலுள்ள ஒரு பாடலையும் கொண்டதாக இருக்கின்றது.

புதிய இந்திய பாராளுமன்றத்தில் வைக்கப்படவுள்ள செங்கோல் வெறுமனே நல்லாட்சியின் சின்னமாக மட்டும் விளங்கவில்லை. ஓர் உயர்ந்த குடியாட்சியை பிரதிபலிப்பதாகவும் அமையவுள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஹிந்தி மொழி பேசுபவராக இருந்தாலும் ஒரு சிறந்த தமிழ் பற்றாளனாகவே

> **தமிழின் பெருமை எத்தகையது என்பதையும் சைவ சமயம் எவ்வளவு தூரம் தொன்மை வாய்ந்ததென்பதையும் இந்தியாவில் திறக்கப்படுகின்ற புதிய பாராளுமன்ற கட்டடத் தொகுதி மூலமாக அறிந்து கொள்ள முடியும்.**

தும்மை இனங்காட்டியுள்ளார். சில மாதங்களுக்கு முன்னர் சீனத்தலைவர் இந்தியா வந்திருந்தபோது அவருக்கு வரலாற்று ரீதியான இடங்களை காண்பிப்பதற்கு பிரதமர் மோடி தேர்ந்தெடுத்த இடம் பல்லவர் கால கட்டடங்களைக்கொண்டிருந்த மாமல்லபுரம் சுற்றுலா பிரதேசமே என்பது குறிப்பிடத் தக்கது.




எனவே தற்போது இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டடத்திலும் இந்தியா சுதந்திரமடைந்தபோது இந்தியாவின் முதல் பிரதமர் நேருவுக்கு தமிழகத்தின் ஆதீன பீடாதிபதி ஒருவரினால் வழங்கப் பட்ட செங்கோலே முக்கிய இடம் வகிக்கவுள்ளது.

கூடவே இத்தடவை இந்திய புதிய பாராளுமன்ற கட்டடத்திறப்பு விழாவில் தமிழக ஆதீனங்களைச்சேர்ந்த பீடாதிபதிகளும் பங்கேற்று வேதபாராயணங்களை ஓதவிருப்பது குறிப்பித்தக்க விடயமாகவே இருக்கின்றது.

தமிழ் மீதும் தமிழர்கள் மீதும் வட இந்திய அரசியல்வாதிகளின் பற்றென்பது பன்னெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. இந்தியாவின் முதல் இந்தியரான தேசாதிபதி, தமிழரான ராஜகோபாலச்சாரியார் என்பது குறிப்பிடத் தக்கது.

அத்துடன் இந்திரா காந்தி பிரதமராக வருவதற்கு தமது காங்கிரஸ் கட்சி மூத்த அங்கத்துவத்திலிருந்தும் விலகி இடமளித்தவர் கர்ம வீரர் காமராஜர் என்பது குறிப்பிடத்தக்கது.





எனவே இந்தியாவின் ஜனநாயக விழுமியங்களை பிரதிபலிக்கும் அழகிய நவீன வசதிகளைக்கொண்ட கட்டடத் தொகுதியாக மட்டுமல்ல. இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் பிரதிபலிக்கும் ஒரு நிர்மாணமாகவே புதிய பாராளுமன்ற கட்டிடத்தொகுதி விளங்கவுள்ளது.

இந்த வகையில் உள்நாட்டு யுத்தங்களால் சின்னாபின்னப்பட்ட நாடுகள் பல தற்போது தம்மை பொருளாதார ரீதியாக கட்டி எழுப்பி வருவதைக் காண முடியும். 1955ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டு வரை இரு தசாப்த காலம் யுத்தத்தினால் துவண்டு போயிருந்த வியட்நாம் தற்போது அதிசயிக்கத்தக்க பொருளாதரா வளர்ச்சியைக் கண்டுவருகின்றது.

2009ஆம் ஆண்டு இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தமும் முடிவுக்கு வந்த போது இலங்கையில் புதிய கைத்தொழில் கட்டடங்கள் மேலெழுந்து இலங்கை பொருளாதாரம் சிறப்படையும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கையில் புதிய பொருளாதார நடவடிக்கைகள் மேம்படும் என்ற எதிர்பார்ப்பு கானல் நீராக மாறி அனைத்துமே அதள பாதாளத்தில் மீளவும் வீழ்வது போலவே அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் வடக்கே இடம்பெறும் தொல் பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் விளங்குகின்றன.

# இலங்கையில் ஆணைக்குழுக்களின் சுதந்திரம் முடக்கப்படுகின்றதா?

இலங்கை அரசியலில் ஆணைக்குழுக்கள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களின் செயற்பாடுகள் இன்றுஅதிகளவில் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருவதை அவதானிக்க முடிகிறது. அரசாங்கம்முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஆணைக்குழுக்கள் இணங்கிச் செல்லும்போது அல்லது செயலற்றுஇருக்கும்போது அவை எதிர்த் தரப்பினரின் குற்றச்சாட்டுகளுக்கு உட்படும் அதேவேளைமுரண்படும்போது அவை ஆளுந்தரப்பினரின் குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதுடன்அதன் தொடர்ச்சியாக ஆணைக்குழு ஒன்றின் தலைவரை தகுதிநீக்கம் செய்யுமளவுக்கு இன்றுபாராளுமன்றம் சென்றுள்ளதையும் காணமுடிகின்றது. ஆணைக்குழுக்களின் செயற்றிறன் என்பது அவற்றின் உருவாக்கம், அவற்றிற்கான உறுப்பினர்களின் நியமனம், சுயாதீனமாக இயங்குவதற்கானஅரசாங்கத்தின் ஒத்துழைப்பு போன்ற பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. நடைமுறையில், தாம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது ஆணைக்குழுக்கள் தமக்கு விசுவாசமுள்ள நாய்களாக இருக்கவேண்டும் என எதிர்பாக்கும் அரசியல்வாதிகள் எதிர்த்தரப்பில் இருக்கும்போதுஅவ்வாணைக்குழுக்கள் அரசாங்கத்துக்கு எஜமானர்களாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். எந்தவொரு ஆட்சியாளரும் ஆணைக்குழுக்கள் ஜனநாயக ரீதியில் சுதந்திரமாகவும் செயற்றிறனுடனும்இயங்குவதைவிட தமது செயற்பாடுகளுக்கு ஒத்தூதவேண்டும் என்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றனர்.இதனைக் கருத்திற்கொண்டே தமக்கு விசுவாசமானவர்களை அக்குழுக்களுக்கான உறுப்பினர்களாக நியமிப்பதில் குறியாக இருந்து வருவதுடன்தேவையேற்படுமிடத்து அவற்றை முடக்கவும் எத்தனிக்கின்றனர்.

ஆணைக்குழுக்கள் எனப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் எல்லா ஆணைக்குழுக்களும் ஒரேவகையானவை அல்ல. அவை வெவ்வேறான நோக்கங்களுக்காக வெவ்வேறு அடிப்படைகளில் உருவாக்கப்படுகின்றன. அதனால் அவற்றின் கட்டமைப்புகளும் அதிகாரங்களும் வேறுபடுகின்றன. அந்தவகையில் இலங்கை அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறான சுதந்திரஆணைக்குழுக்கள், அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் பாராளுமன்றத்தினால் அல்லது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் எனப் பல ஆணைக்குழுக்கள் காணப்படுகின்றன.அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்திற்கமைய தேர்தல்,பொதுச்சேவை,பொலிஸ்,கணக்காய்வு, மனித உரிமைகள், இலஞ்சஊழல்,நிதி, எல்லை நிர்ணயம், கேள்வி கோரல் என ஒன்பது விடயங்களுககான சுயாதீனஆணைக்குழுக்கள் உள்ளன. இந்த ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள்,அரசியலமைப்புப்பேரவையின் விதந்துரைப்பிற்கமைய ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர்.இதேபோலகுறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் பாராளுமன்றம் தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்திவிசேட சட்டங்களை ஆக்குவதனூடாக ஆணைக்குழுக்களை உருவாக்குகின்றது.சர்ச்சைக்குள்ளானபொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு போன்றனஅவ்வாறானவையே. இதேபோல நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிச்சேவை ஆணைக்குழுபோன்ற ஆணைக்குழுக்களை ஜனாதிபதியால் உருவாக்க முடிகிறது. இவற்றைவிட காலத்துக்குக்காலம் ஏற்படும் நிகழ்வுகள், பிரச்சினைகள் தொடர்பாக விசாரணை ஆணைக்குழுக்களும் உருவாக்கப்படுகின்றன. திருத்தங்களையும் உள்ளடக்கிய 1948 ஆம் ஆண்டு விசாரணைஆணைக்குழுச் சட்டத்திற்கமைவாகவும், 1978ஆம் ஆண்டு விசேட ஜனாதிபதி விசாரணைஆணைக்குழுச் சட்டத்திற்கமைவாகவும் விசாரணை ஆணைக்குழுக்கள் உருவாக்கப் படுகின்றன. நல்லிணக்க ஆணைக்குழு, உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு போன்றன இவ்வாறானவையே. இவற்றில் பெரும்பாலானவை காலத்தைக்கடத்துதல்,அழுத்தங்களிலிருந்து தப்பித்தல் போன்றவற்றுக்காகவே ஆட்சியாளர்களால்உருவாக்கப்படுகின்றன என்பதை அவை தொடர்பான அண்மைக்கால அனுபவங்களிலிருந்து நாம்புரிந்து கொள்ள முடியும்.

ஒரு நாட்டினுடைய மக்களின் அடிப்படையான ஜனநாயக உரிமைகளை இயன்றவரை பேணிப்பாதுகாப்பதே சுயாதீன ஆணைக்குழுக்களின் முதன்மை நோக்கமாக உள்ளது. குறிப்பாகநிறைவேற்றுத்துறையினரின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு கடிவாளமிடுவதன் மூலம்விடயத்துடன் தொடர்புபட்ட குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவை


இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
Public Utilities Commission of Sri Lanka

முயற்சிக்கின்றன. ஒருநாட்டில் சட்டவாக்கம், நிறைவேற்றம், நீதி என்ற மூன்று அதிகாரப் பிரிவுகளுக்கிடையில் சமநிலையையும் இணைந்து செல்வதையும் உறுதிப்படுத்தும் வகையில் அந்நாட்டின் அரசியலமைப்பில்ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கப்பாலும் நடைமுறை விடயங்களில் ஆட்சித் துறையினரின்அதிகார மீறல்கள், உரிமை மீறல்கள், முறைகேடுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்தவும், ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கவும் தேவையான அதிகாரங்களைக் கொண்டு ஆணைக்குழுக்கள் உருவாக்கப் பட்டுள் ளன. உதாரணமாக அரச ஊழியர் ஒருவரின் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு போன்றவற்றில் முறைகேடுகள் இடம் பெறின் பொதுச்சேவைஆணைக்குழுவினூடாக நிவாரணம் பெறமுடியும். இதுபோன்ற அல்லது வேறுவகையில் ஒருவரின்அடிப்படை உரிமை மீறப்படும்போது மனித உரிமை ஆணைக் குழுவை அணுகித் தீர்வு காண முடியும். இவற்றின் மூலம் அரசின் மீதான மக்களின் நம்பிக்கையையும் வளர்க்க அவை முயலுகின்றன எனலாம். இவ்வாறு சுயாதீன ஆணைக் குழுக்கள் ஆட்சியாளர்க்குக் கடிவாளமிடும் அதிகாரங்களைச்சட்டரீதியாகக் கொண்டிருப்பதால்



அவை ஆட்சியாளர்களுக்கு உவப்பானதாக இருப்பதில்லை. இதன்காரணமாக சுயாதீன ஆணைக் குழுக்களை அல்லது அவற்றின் பணிகளை பலவீனப்படுத்துவதற்குஆட்சியாளர்கள் தமது அரசியல் பலத்தை அல்லது சட்டத்தில் காணப்படக்கூடிய ஓட்டைகளை தமக்குச் சாதகமாக மாற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.அரசியலமைப்புத் திருத்தங்கள், ஆமாம் சாமிகளை உறுப்பினர்களாக நியமித்தல், உறுப்பினர்களை விலைக்கு வாங்குதல், உறுப்பினர்களிடையே முரண்பாட்டைத் தோற்றுவித்தல்,உறுப்பினர்களை அச்சுறுத்தல், ஆணைக்குழுக்களின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முட்டுக்கட்டை போடுதல், இவ்வாறான உத்திகள் பலனளிக்காதவிடத்து. பாராளுமன்றத் தீர்மானங்கள் மூலம் தலைவரை அல்லது உறுப்பினர்களை அகற்றுதல் போன்ற பல்வேறுகைங்கரியங்களில் ஆட்சியாளர்கள் இறங்குகின்றனர்.


இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள 1978ஆம் ஆண்டுக் குடியரசு அரசியலமைப்பிற்குமேற்கொள்ளப்பட்ட 21 திருத்தங்களில் பொரும்பாலானவை நாட்டு நலனுக்கானவை என்பதைவிட ஆட்சியாளரின் தனிப்பட்ட நலனுக்கானவை என்பதுவே அரசியல் ஆய்வாளர்களின் பொதுவானகருத்தாக உள்ளது. அந்தவகையில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை வலுவிழக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் ஆட்சியாளர்கள் அரசியலமைப்பில் புகுத்தத் தவறவில்லை. இதற்குமிகப்பொருத்தமான எடுத்துக்காட்டாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்க்ஷவினால்அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 18ஆவது திருத்தம் அமைகிறது. இத்திருத்தத்தின் மூலம் ஏலவேஇருந்த அரசியலமைப்புப் பேரவைக்குப் பதிலாகப் பாராளுமன்றப் பேரவை கொண்டு வரப்பட்டது. முன்னைய அரசியலமைப்புப் பேரவையானது பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அதற்கு வெளியிலிருந்து தெரிவு செய்யப்படும் துறைசார் புலமையாளர்களையும் கொண்டிருந்ததுடன் தலைவர் உட்பட ஆணைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு



கந்தையா அருந்தவபாலன்

செய்யும் அதிகாரத்தையும் கொண்டிருந்தது. ஆனால் 18ஆவது திருத்தத்தின்மூலம் இந்த நியமன அதிகாரங்களை ஜனாதிபதி தனது நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து தன்னிச்சையாகத் தனக்கு வேண்டியவர்களையும் தனது முன்னெடுப்புகள்எல்லாவற்றுக்கும் தலையாட்டக் கூடியவர்களையும் நியமனஞ் செய்ததன் மூலம் ஆணைக்குழுக்களின்சுயாதீனத் தன்மை முழுமையாக அகற்றப்பட்டது. மைத்திரி-ரணில் ஆட்சிக்காலத்தில்அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் அரசியலமைப்புப்பேரவையும் அதன் அதிகாரங்களும் புதுப்பிக்கப்பட்டாலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலிருந்தான புலமைசார் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாக மட்டுப்படுத்தப் பட்டது. ஜனாதிபதி கோட்டாபயவின் குறுகிய ஆட்சிக் காலத்தில் மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்கள் உறங்கு நிலைக்குத்தள்ளப்பட்டதுடன் அரசியலமைப்பு ரீதியாக மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான அவரது விருப்பம் நிறைவேறாமலேயே சென்று விட்டார்.

தற்போது ரணில் விரும்பினால்கூட அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலை இல்லாததால் வேறு வழிகளின் மூலம் ஆணைக் குழுக்களின் சுயாதீனத்தன்மையை அவர் முடக்க முனைவதை நாம் அவதானிக்க முடியும். ஆடசியாளர்களுக்கு தற்போது இடஞ்சலாக இருப்பவைதேர்தல் ஆணைக்குழுவும், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுமே. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்வெற்றிக்கனியைச் சுவைப்பதற்குக் களநிலைமைகளை தனக்குச் சாதகமாகச் செதுக்கிவரும்ரணிலுக்கு அதற்கு முன்னரான எந்தத் தேர்தலும் அவருக்கு எதிரான நிலைமைகளையே உருவாக்கும்என்பதால் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த பகீரதப் பிரயத்தனம் செய்துவரும் தேர்தல்ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு பலவழிகளிலும் தடைகள் போடப்படுகின்றன. தேர்தல் ஏற்பாடுகளுக்கான நிதியை விடுவிக்காமை, பாதுகாப்பு வழங்காமை, நிறுவனத் தலைவர்களின்ஒத்துழையாமை போன்ற பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருவதுடன் தேர்தல் ஆணைக்குழுஉறுப்பினரிடையே பிரிவினைகளைத் தோற்றுவிப்பதன் மூலமும் ரணில் தனது இலக்கை நோக்கிமுன்னேறிவருகிறார் எனக் கூறமுடியும். இதில் ரணில் ஒவ்வொரு படியாக முன்னேற முன்னேற தேர்தல்ஆணைக்குழுவின் சுயாதீனம் பலபடிகள் ஒரேயடியாக கீழ்நோக்கி விழுகிறது என்பதுதான் யதார்த்தம். உயிர் பிரியும் நிலையிலிருந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன்மூலம்ஒட்சிசன் வழங்கிவரும் ரணில் அதனைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கு அந்நிதியத்தின் தாளத்துக்குஆடியே ஆகவேண்டிய இக்கட்டான நிலை. ரணில் ஆடுவதற்கு தயாராக இருந்தாலும்பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுத் தலைவர் பக்கப்பாட்டு பாடத் தயாராக இல்லாததால் அக்குழுவின்உறுப்பினர்களிடையிலும் பிரிவினையை ஏற்படுத்தியதுடன் இறுதியில் பாட்டுக்காரனான ஜனகரத்நாயகவையும் சட்டரீதியாக ரணில் தூக்கியெறிந்துவிட்டார்.இதில் நகைமுரண் என்னவெனில்முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகவின் பதவியைப் பறிப்பதில் முனைப்புக் காட்டியவிமல்வீரவன்ஸ போன்றவர்கள் ஜனக ரத்நாயகவின் பதவியைப் பறிப்பது ஜனநாயக விரோதம் எனக் கூறியதும், இதே ஜனக ரத்நாயக பிரதம நீதியரசரின் பதவிப்பறிப்புக்கு உடந்தையாகச் சாட்சிவழங்கியதும் தான்.இங்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ரணிலுக்கும் உள்ள ஒரே வேறபாடு மஹிந்தஅரசியலமைப்பு மாற்றங்களினூடகச் செய்தவற்றை ரணில் தனது நரி மூளையினூடாகச் செய்கிறார்என்பதே. ஆனால் இருவரதும் நோக்கமும் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை முடக்குவது என்றஒன்றேயாகும். இவற்றிலிருந்து மக்கள் பெறும் படிப்பினை என்னவெனில் ஆட்சியாளர்கள் விரும்பினால்மட்டுமே சட்டங்கள் மற்றும் நீதித்துறையால் ஒரு நாட்டில் மக்களின் ஜனநாயக உரிமைகள்பாதுகாக்கப்பட முடியும் என்பதாகும்.



## ஜூலையில் துருவநட்சத்திரம்

கௌதம் மேனன் இயக்கத்தில் விக்ரம், ஐஸ்வர்யா ராஜேஷ், ரித்து வர்மா, சிம்ரன், திவ்யதர்ஷினி உள்ளிட்டோர் நடித்துள்ள படம் 'துருவ நட்சத்திரம்'. படம் தொடங்கும் முன்பே டீசர் வெளியிட்டு படத்துக்கான எதிர்பார்ப்பை அதிகமாக்கினர். ஆனால், 5 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் படம் உருவாகி வந்தது. நிதி பிரச்னை உள்ளிட்ட பல சிக்கலால் இந்த படம் வெளியீட்டில் தாமதமாகி வந்தது. ஒருவழியாக இந்த ஆண்டு படம் வெளியாக உள்ளது. ஜூலை 14இல் இந்தப் படத்தை திரைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளனர்.



## கார்த்தியுடன் கீர்த்தி

'ஜப்பான்' படப்பிடிப்பு தள்ளிப் போனதால் சில வாரங்களுக்கு முன்னர் நளன் குமாரசாமி இயக்கும் படத்தின் படப்பிடிப்பில் இணைந்தார் கார்த்தி. அந்த நேரத்தில் நாயகி முடிவாகாமல் இருந்ததால் கார்த்தியின் சம்பந்தப் பட்ட காட்சிகளை மட்டும் படமாக்கினார்கள்.

இப்போது நாயகியாக கீர்த்தி ஷெட்டி ஒப்பந்தமாகியிருக்கிறார். பாலாவின் 'வணங்கான்' படத்திலிருந்து சூர்யா விலகியதால், கீர்த்தியும் விலகினார். இந்நிலையில் கார்த்தியின் படத்தில் நடிக்கவிருக்கிறார் கீர்த்தி.



## 4 நாயகிகளின் படம்

ரகுல் ப்ரீத்தி சிங், நிவேதா பெத்துராஜ், மேகா ஆகாஷ், மஞ்சிமா மோகன் இணைந்து நடித்துள்ள படம 'ப்பூ'. இந்த படத்தை அறிமுக இயக்குநர் விஜய் இயக்கி உள்ளார். ஜி. வி.பிரகாஷ் இசை அமைத்துள்ளார்.

இது ஒரு பேய் படம். இந்த படம் நேற்று ஓடிடி தளத்தில் வெளியானது. திரையரங்க வெளியீட்டுக்காக உருவான படம் திடீரென ஓடிடி தளத்தில் வெளியானது ஏன் என்று தெரியவில்லை. முதலில் தமிழ், தெலுங்கில் மட்டும் வெளியான இந்த படம் பின்னர், ஹிந்தி, மலையாளம், கன்னட மொழிகளில் வெளியாகிறது.

## அஞ்சலி 50

ராம் இயக்கிய கற்றது தமிழ் என்ற படத்தில் அறிமுகமானவர் அஞ்சலி. அதன் பிறகு அங்காடித் தெரு, எங்கேயும் எப்போதும், மங்காத்தா உள்பட ஏராளமான படங்களில் நடித்துள்ளார்.

திரையுலகில் அவர் நடிக்க வந்து 17 ஆண்டுகள் ஆகும் நிலையில் இப்போது தனது 50ஆவது படத்தில் ஒப்பந்தமாகி இருக்கிறார் அஞ்சலி.






## மீண்டும் அயலான் கூட்டணி

சிவகார்த்திகேயன் நடிக்கும் 'அயலான்' படம் தீபாவளிக்கு வெளியாகிறது. வேற்றுகிரகவாசி ஒருவர் பூமிக்கு வருகை தருவதை பின்புலமாக வைத்து வித்தியாசமாக செய்திருக்கும் முயற்சி இது.

படத்தைப் பார்த்த சிவகார்த்திகேயன் ரொம்பவும் குளிர்ந்துபோய் அதன் இயக்குநர் ரவிக்குமாருக்கு பரிசாக இன்னொரு படமும் கொடுக்க முடிவெடுத்துவிட்டார். கமல்ஹாசன் தயாரிக்கும் படத்துக்குப் பிறகு, ரவிக்குமார் படத்துக்குத்தான் நேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார் சிவகார்த்திகேயன்.




**திரைப்படம் - தீராக் காதல்**
**தயாரிப்பு - லைக்கா புரொடக்ஷன்ஸ்**
**இயக்கம் - ரோகின் வெங்கடேசன்**
**இசை - சித்துகுமார்**
**நடிப்பு - ஜெய், ஐஸ்வர்யா ராஜேஷ், ஷிவதா, அம்ஜத்**

திருமணத்துக்கு பிறகு, திருமணத்துக்கு முன் இருந்த, பிரிந்த காதல் மீண்டும் வாழ்க்கையின் குறுக்கே வந்தால் என்பதை இதற்கு முன்பும் தமிழ் திரையில் பார்த்திருக்கிறோம். இந்தக் காலத்து ரசிகர்களுக்கு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், சில்லுனு ஒரு காதல், ராஜா ராணி, 96 போன்ற படங்களைச் சொல்லலாம். இந்தப் படமும் அப்படியான ஒரு படம்தான், கொஞ்சம் நெருடல் - கொஞ்சம் யதார்த்தமாக நிறைய காதலுடன் கொடுத்து ரசிக்க வைத்திருக்கிறார் இயக்குநர் ரோகின் வெங்கடேசன்.

காதலித்து பிரிந்து போனவர்களுக்கு, காதலிக்கு நிம்மதியில்லாத வாழ்க்கை அமைந்தால் எப்படியிருக்கும்? காதலனுக்கு நிம்மதியான வாழ்க்கை அமைந்தால் எப்படியிருக்கும். பிரிந்தவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் சந்திக்க நேர்ந்தால் அவர்களின் பழைய காதல் என்ன ஆகும், அவர்களின் திருமண வாழ்க்கை பாதிப்படையுமா, அடையாதா என்பதை மிகவும் பக்குவமாகக் கையாண்டிருக்கிறார் இயக்குநர்.

ஜெய், ஐஸ்வர்யா ராஜேஷ் கல்லூரியில் படித்த போது காதலித்தவர்கள். எட்டு வருடங்களுக்குப் பிறகு அவரவர் பணி நிமிர்த்தம் மங்களூர் சென்றபோது மீண்டும் சந்திக்கிறார்கள். சில நாட்கள் இருவரும் தங்களது பழைய காதல் ஞாபகங்களுடன் சுற்றுகிறார்கள். ஜெய் அவரின் மனைவி ஷிவதா, மகள் ஆகியோரைப் பற்றியும் ஐஸ்வர்யா அவரின் கொடுமைக்கார கணவர் அஜ்மத் பற்றியும் பகிர்ந்து கொள்கிறார்கள். இனி மீண்டும் சந்திக்க வேண்டாம் என சொல்லி ஜெய் சென்னை வந்துவிடுகிறார். ஐஸ்வர்யா அவரின் வீட்டுக்கு செல்ல அங்கு அவரின் கணவர் அம்ஜத்துடன் கடும் சண்டை நடக்க வீட்டை



விட்டு வெளியேறுகிறார். அதோடு ஜெய் வீட்டின் எதிரிலேயே குடி வருகிறார். தன்னோடு வந்துவிடுமாறு ஜெய்யை வற்புறுத்துகிறார். இதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இருவரும் அவரவர் வாழ்க்கையில் வேறொருவரைத் திருமணம் செய்து கொண்ட பிறகு மீண்டும் சந்தித்தாலோ, பேசினாலோ இந்த சமூகம் அவர்களை கள்ளக் காதலர்கள் என்றே சொல்லும். அப்படி ஒரு சொல்லை படம் பார்க்கும் ரசிகர்களும் சொல்லிவிடக்கூடாதென கவனமாக காட்சிகளுடன், வசனங்களுடன் படத்தை நகர்த்தியிருக்கிறார் இயக்குநர்.

"ராஜா ராணி" படத்தின் சூர்யா கதாபாத்திரத்தின் நிறைவான நடிப்பை மீண்டும் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியருக்கிறார் ஜெய். அவ்வளவு நேசித்த காதலியை அத்தனை வருடங்களுக்குப் பிறகு பார்க்கும் போது வரும் மகிழ்ச்சியை, அவருடன் திரும்பவும் சுற்ற கிடைத்த வாய்ப்பை, அந்த உணர்வை நமக்குள்ளும் கடத்துகிறார். பின்னர் தனது மனைவி, மகள்தான் பெரிது என முன்னாள் காதலி ஐஸ்வர்யாவைப் பார்ப்பதைத் தவிர்க்கும் ஓர் இயல்பான கணவனாக, அப்பாவாக ரசிக்க வைக்கிறார். உச்சக்கட்ட காட்சியில் அவர் பேசும் அந்த வசனம் அவரின் கதாபாத்திரத்தின் ஒட்டு மொத்த குணாதிசயத்தை ஒரே வரியில் சொல்லிவிடுகிறது.

ஜெய்யின் முன்னாள் காதலியாக ஐஸ்வர்யா ராஜேஷ். ஜெய் மீது அவருக்குள் புதைந்து கிடக்கும் காதலை ஒவ்வொரு காட்சியிலும் வெளிப்படுத்துகிறார். இடைவேளைக்குப் பின்பு வரும் சில காட்சிகள் அவரைக் கொஞ்சம் வில்லியாகக் காட்ட முற்படுகிறதோ என ஒரு அதிர்ச்சி உண்டானாலும், போகப் போக அதையும் அடுத்தடுத்த காட்சிகளால் சரி செய்துவிடுகிறார் இயக்குநர். ஆண்களின் காதல் வலிகளை மட்டுமே அதிகம் காட்டியுள்ள தமிழ் திரையில் ஒரு பெண்ணின் காதல் வலி எப்படியிருக்கும் என்பதை உணர்வுபூர்வமாக தன் நடிப்பில் ஐக்கியப்படுத்தியுள்ளார் ஐஸ்வர்யா ராஜேஷ்.

ஜெய்யின் மனைவியாக ஷிவதா. ஒரு பாசமான, பாந்தமான மனைவியாக அவ்வளவு இயல்பாய் நடித்துள்ளார். பாசமான கணவன் கொஞ்சம் தடம் மாறிப் போகிறாரோ என்ற சந்தேகம் அவருக்கும் வருகிறது. அது தெரிந்ததும் அவர் வெடித்துப் பேசுவது அவர் மீதான பரிதாபத்தை அதிகரிக்கிறது. சில காட்சிகளே வந்தாலும் கொடுமைக்கார கணவனாக கோபப்பட வைக்கிறார் அம்ஜத். ஜெய், ஷிவதாவின் மகளாக வரித்தி விஷால், ஜெய்யின் நண்பனாக அப்துல் லீ ஆகியோரும் அவரவர் கதாபாத்திரங்களில் நிறைவாக நடித்திருக்கிறார்கள்.

உட்புறக் காட்சிகளுக்கான ஒளிப்பதிவில் ரவிவர்மன் நீலமேகம் காட்சிகளின் தாக்கத்தை ஒளி வடிவில் வெளிப்படுத்துகிறார். சுரேந்தர்நாத்தின் வாழ்வியல் சார்ந்த வசனங்கள் ஆங்காங்கே ரசிக்க வைக்கின்றன. சித்துகுமார் பின்னணி இசையில் கொஞ்சம் சமாளித்தாலும், பாடல்களில் ஏமாற்றியிருக்கிறார். இம்மாதிரியான படங்களுக்கு ஓரிரு சுப்பர் ஹிட் பாடல்கள் மிக அவசியம்.

ஏற்கெனவே, பார்த்த சில படங்களின் காட்சிகள் ஞாபகப்படுத்திவிட்டுப் போகின்றன. மற்ற நடிகர்களை விடவும் ஐஸ்வர்யா ராஜேஷ் கதாபாத்திரத்தின் ஆதிக்கம் அதிகம் இருக்கிறது. படம் இப்படித்தான் முடியும் என்று இடைவேளைக்குப் பிறகே உள்ளுக்குள் ஓட ஆரம்பித்துவிடுகிறது.

# காவலனான டோனி

இந்த தொடரில் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றுவிட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முக்கிய தூண் மதீஷ பத்திரண தான். இந்த தொடரின் சிறந்த பந்துவீச்சாளர் என சொல்லும் அளவுக்கு கடைசிகட்ட ஓவர்களில் கலக்கியிருந்தார் மதீஷ. இளம் வீரரான பத்திரணவின் இந்த எழுச்சிக்கு டோனியும் ஒரு முக்கியமான காரணம் என அவருக்கும் பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

“இலங்கை ரசிகர்களே உங்களுக்காக ஒரு வைரத்தை டோனி பட்டைத்தீட்டிக் கொண்டிருக்கிறார்” என வர்ணனையாளர் ஹர்ஷா போக்லே குறிப்பிட்டிருந்தார்.

டோனியும் தொடர்ந்து பத்திரணவின் பந்துவீச்சை வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் பாராட்டி வந்தார். இலங்கை கிரிக்கெட் சபைக்கு பத்திரண குறித்து அறிவுரை கொடுத்தார். வளர்ப்பு மகன் போல பத்திரணவை டோனி பார்த்துக்கொள்கிறார் என இணையத்தில் மீம்ஸ்களும் பறந்தன.

இந்நிலையில் மதீஷ பத்திரணவின் குடும்பத்துடன் டோனி எடுத்துக்கொண்ட ஒளிப்படத்தை சமூக வலைதளத்தில் பதிவிட்டிருக்கிறார் அவரின் சகோதரி விஷூகா பத்திரண. அதில், “மதீஷ இப்போது தேர்ந்த கைகளில் இருக்கிறார். அவரைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். எப்போதும் அவருடன் நான் இருப் பேன்” என டோனி எங்களிடம் சொன்னார்” எனக் கூறியிருக்கிறார்.

“இப்படியான விஷயத்தை நாங்கள் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை” என இந்தச் சந்திப்பு குறித்து கூறியிருக்கிறார் அவர். இன்றிரவு நடக்கும் இறுதிப்போட்டியில் ஆடும் சென்னை அணியின் முக்கிய துருப்பு சீட்டாக பத்திரண இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.





# தேசமா...? பணமா...?

இருபது - 20 கிரிக்கெட் லீக்குகளின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் தென்னாபிரிக்கா கிரிக்கெட் வாரியம் அதன் எஸ். ஏ. 20 டி20 லீக்கை வெற்றிகரமாக நடத்திமுடித்தது. இதே நேரத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தில் இன்ரர்நஷனல் ரி -20 போட்டிகளை நடத்தியது எமிரேட்ஸ் கிரிக்கெட் கிரிக்கெட் சபை.

இந்த ஜூலை மாதம் அமெரிக்காவில் மேஜர் லீக் கிரிக்கெட் என்ற புதிய இருபது -20 லீக் தொடங்கவிருக்கிறது. இப்படியான சூழலில், வீரர்கள் இதுபோன்ற லீக்குகளில் ஆட, தங்களின் தேசிய கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்திலிருந்து விலகி கழக அணிகளுடன் முழுநேர ஒப்பந்தம் செய்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். அப்படி இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்திலிருந்து விலகியுள்ளார் ஜசன் றோய்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு இப்படி ஒரு விசயம் நடக்கப்போகிறது எனச் சொல்லியிருந்தால் யாருமே நம்பியிருக்கமாட்டார்கள். ஆனால், ரி-20 லீக்குகளின் இந்த அபார வளர்ச்சியும், அதில் புழங்கும் பணமும் மொத்தமாக அனைத்தையும் புரட்டிப்போட ஆரம்பித்திருக்கிறது. கடந்த ஆண்டு ட்ரெண்ட் போல்ட் இதே போன்று நியூசிலாந்து கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்திலிருந்து விலகியிருந்தார். ஜசன் றோய் இப்போது அதே பாதையை எடுத்திருக்கிறார்.

இதனிடையே, இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்திலிருந்து விலகுவது பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் ரீஸ் டாப்லியும் சமீபத்தில் மாறிவரும் கிரிக்கெட் சூழல் பற்றி மனம் திறந்திருந்தார். “சிறுவயதில் என்னிடம் கேட்டிருந்தால், இங்கிலாந்துக்காக 100 டெஸ்ட் போட்டிகள் ஆட வேண்டும் என்று சொல்லியிருப்பேன். ஆனால், இன்று என்னிடம் கேட்டால் எத்தனை ஐ. பி. எல். ஆட முடியுமோ அத்தனை ஆடி விட வேண்டும் எனச் சொல்வேன். வெள்ளைப்பந்து மற்றும் கழக கிரிக்கெட்டில் சாதிக்க வேண்டும் என நினைப்பது இனி வெட்கப்படக் கூடிய விசயம் இல்லை என நினைக்கிறேன்” எனக் கூறியிருந்தார் அவர்.

ஹதேசத்துக்காக ஆடுவதைவிட பணம் பெரிய விசயமா?“ என ஜசன் றோய் குறித்து பலரும் இணையத்தில் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

இதனிடையே, மாறிவரும் இந்தச் சூழலில் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியமும் ஒப்பந்தங்களை மாற்றியமைப்பதில் தீவிரம் காட்டி வருகிறதாம். இதில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற பணம் படைத்த கிரிக்கெட் சபைகள் தங்கள் முக்கிய வீரர்களை எப்படியாவது தக்கவைத்துவிடும். ஆனால், மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா போன்ற மற்ற கிரிக்கெட் சபைகளுக்கு அது பெரும் சவாலாகவே இருக்கப் போகிறது என்கிறார்கள் கிரிக்கெட்

# ஸ்ரார் சுப்பர் ஸ்ரார் ஆனது எப்படி?


ஷூப்மன் கில் அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் கலக்கினார், ஒருநாள் கிரிக்கெட்டில் அதிரடி இன்னிங்ஸ்களை ஆடி ஸ்ரார் அந்தஸ்து பெற் றார். ஆனால், இப்போது ஐ. பி. எல். 2023 தொடரின் மூலம் சுப்பர் ஸ்ரார் வீரர் என்ற அந்தஸ்துக்கு உயர்ந்துள் ளார்.

16 போட்டிகளில் 851 ஓட்டங்களை இதுவரை எடுத்துள்ளார். இந்தத் தொடரில் அதிக ஓட்டங்களை எடுத்தவராக ஷூப்மன் கில் முடிவடைவார். 851 ஓட்டங்களில் 78 பௌண்ட்ரிகள், 33 சிக்ஸர்கள். அதிலும் நடப்பு தொடரில் இவர் அடித்த சிக்சர்கள் கடந்த 2 தொடர்களில் இவர் மொத்தமாக அடித்த சிக்ஸர்களை விடவும் அதிகம்.

இதற்கு முன்னர் அவர் நின்று ஆடும் வீரராகவே கருதப்பட்டார், ஆனால், இந்தத் தொடரில் அவரின் பாத்திரமே வேறு என்றாகிவிட்டது. அன்று வெய்ன் பர்னெலை சிக்ஸ் விளாசி சதம் எடுத்ததோடு பெங்களூரை இறுதிக்கு முந்தைய சுற்றிலும் இறுதிக்கான தகுதி சுற்று இரண்டாவது போட்டியிலும் மும்பையையும் வெளியேற்ற ஷூப்மன் கில்லே காரணமானார்.

பொதுவாக சச்சின், கோலி போன்றோர் ரிஸ்க் எடுத்து ஆடப் பயப்படுவார்கள். ஆனால், ஷூப்மன் கில் ரிஸ்க் எடுக்கத் தயங்காதவர். கிரிக் இன்போ இணையதளத்தின் புள்ளி விவரங்களின்படி இந்த ஐ. பி. எல். தொடரில் ஷூப்மன் கில் 75 முறை பந்தைத் தூக்கித்தான் அடித்துள்ளார்.

ஆகவே, ஷூப்மன் கில்லின் இந்தப் புதிய மாற்றம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராகக் கைகொடுக்கலாம்.



# இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழா



இன்று ஞாயிற்றுக்கிழமை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டடத்தை திறந்து வைக்கிறார். இன்று விநாயக் தாமோதர் சாவர்க்கரின் 140வது பிறந்த ஆண்டு தினம். இந்தியாவின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் இறுதிச் சடங்கும் இந்த நாளில்தான் நடைபெற்றது.

சாவர்க்கரைச் சூழ்ந்துள்ள சர்ச்சைகள் காரணமாக, புதிய நாடாளுமன்ற கட்டடத்தை திறப்பதற்கு மத்திய அரசு அவரது பிறந்தநாளைத் தேர்ந்தெடுத்தது கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

அந்தமான் செல்லுலர் சிறையில் கைதியாக இருந்தபோது பிரிட்டிஷ் அரசிடம் மன்னிப்புக் கேட்டதற்காக சாவர்க்கர் விமர்சிக்கப்படுகிறார், அதே நேரத்தில் மகாத்மா காந்தியைக் கொல்லும் சதித்திட்டத்தில் சாவர்க்கரின் பங்கு இருப்பதாக எழுந்துள்ள கேள்விக்குறி முற்றிலுமாக இன்னும் தீர்க்கப்படவில்லை என்று பல வரலாற்றாசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்கள் கருதுகின்றனர்.

புதிய பாராளுமன்ற கட்டட திறப்பு விழா பற்றிய செய்தி வெளியானதும் மகாத்மா காந்தியின் கொள்ளுப் பேரன் துஷார் காந்தி, “வி.டி. சாவர்க்கரின் பிறந்தநாளான மே 28 அன்று புதிய நாடாளுமன்ற கட்டடத்தை பிரதமர் திறந்து வைக்கிறார். கட்டடத்திற்கு “சாவர்க்கர் சதன்” என்றும் மத்திய மண்டபத்துக்கு “மன்னிப்பு அறை” என்றும் அவர் பெயரிடவேண்டும்.” என்று டிவிட்டரில் பதிவிட்டார்.

காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ், இந்த பதவியேற்பு விழாவை “நமது எல்லா நிறுவக தந்தைகள் மற்றும் தாய்மார்களின் முழுமையான அவமதிப்பு” என்று கூறினார். மேலும், “இது காந்தி, நேரு, படேல், போஸ், அம்பேத்கர் போன்ற தலைவர்களின் முழு மறுப்பு” என்றும் அவர் குறிப்பிடடார்.

அரசியலமைப்பு தினம் என்பதால் 2023ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி புதிய பாராளுமன்ற திறப்பு விழாவுக்கு ஏற்ற நாளாக இருந்திருக்கும் என்று திரிணமூல் காங்கிரஸ் எம்பி சுகேந்து சேகர் ராய் ட்வீட் செய்துள்ளார். “ஆனால் இது சாவர்க்கரின் பிறந்த நாளான மே 28 அன்று செய்யப்பட உள்ளது. இது எவ்வளவு பொருத்தமானது?” என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய நாடாளுமன்ற கட்டடத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கப் போவது குறித்தும் கேள்விகள் எழுந்துள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தின் படி, புதிய நாடாளுமன்றத்தை குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் அல்லது இரு அவைகளின் தலைவர்களில் ஒருவரால் திறக்கப்பட வேண்டும் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

“குடியரசுத்தலைவரை நாடாளுமன்றத்தை திறந்து வைக்க அழைக்காதது அல்லது விழாவிற்கு அழைக்காதது, நாட்டின் மிக உயர்ந்த அரசியலமைப்பு பதவியை அவமதிக்கும் செயலாகும். நாடாளுமன்றம் ஆணவத்தின் செங்கற்களால் ஆனது அல்ல, அரசியலமைப்பு மதிப்புகளால் ஆனது,” என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தனது ட்விட்டர் பதிவில் கூறியுள்ளார்.

மறுபுறம் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் புரி காங்கிரஸை குறிவைத்து, “1975 ஆகஸ்டில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி நாடாளுமன்ற இணை கட்டடத்தை திறந்து வைத்தார். பின்னர் 1987 இல் பிரதமர் ராஜீவ் காந்தி நாடாளுமன்ற நூலகத்தை திறந்து வைத்தார். உங்கள் (காங்கிரஸ்) அரசின் தலைவர் திறந்து வைக்கலாம் என்றால், எங்கள் அரசின் தலைவர் ஏன் அதை செய்யக்கூடாது?” என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவை காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க முடிவு செய்துள்ளன.

புறக்கணிப்புக்கான காரணங்களை கூட்டறிக்கையில் விளக்கிய எதிர்க் கட்சிகள், “புதிய நடாளுமன்ற கட்டடத்தை பிரதமர் மோடி திறந்துவைப்பதாக எடுத்துள்ள முடிவும், அந்த நிகழ்வில் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவை முற்றிலுமாக ஒதுக்கி வைத்திருப்பதும் கடும் அவமானம் மட்டுமல்ல, நமது ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதல் என்றும் இதற்கு சரியான பதிலடி கொடுக்கப்பட வேண்டும்” என்றும் கூறியுள்ளது. ●

## முக்கிய சாராம்சம்

- 65,000 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய நாடாளுமன்ற கட்டடத்தின் கட்டுமானம் 2021 ஜனவரியில் தொடங்கியது.
- இது 971 கோடி ரூபாய் (இந்திய) செலவில் கட்டப்பட்டுள்ளது.
- மக்களவையில் 888 எம்.பி.க்களும், மாநிலங்களவையில் 384 எம்.பி.க்களும் அமர முடியும்.
- புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் கூட்டு அமர்வில் 1,272 உறுப்பினர்கள் அமர்வதற்கான ஏற்பாடு.
- மக்களவையின் வடிவமைப்பு தேசிய பறவையான மயில் மற்றும் மாநிலங்களவையின் வடிவமைப்பு தேசிய மலர் தாமரையின் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

---




## வியுக்தியார் பதில்கள்

**ஜி.கிருசாந்தன் சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியுடன் பேசி உரிய நடவடிக்கை எடுங்கள் என்று புதிய ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ள அவைத்தலைவர் சீவீகே சிவஞானம் ஐயா, இரணைமடுவில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதாக இருந்தது ஆனால் தற்போது அது சாத்தியமற்ற விடயமாகிவிட்டது என்றும் கூறியிருக்கிறாரே. யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான குடிதண்ணீரைக் கொண்டு வரக்கூடிய நடவடிக்கையை ஆளுநர் உடன் செயற்படுத்த வேண்டும் என்கிறார் அவர். ஆளுநர் செய்வாரா?

**வியுக்தியார்:** இரணைமடுவிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவருகின்ற திட்டத்திற்கு உலக வங்கி இரண்டாயிரம் கோடி ரூபாவை வழங்க இருந்தபோது அவரும் மாகாணசபையில் அவைத் தலைவராகத்தானே இருந்தார். அவரது கட்சிக்காரர் அதற்கு தடையாக இருந்தபோது தனது கட்சிக்காரரையே அதற்கு சம்மதிக்க வைக்க முடியாதவர், இப்போது ஆளுநரிடம் கையேந்துவது ஏன் என்று தெரியவில்லை. ஆளுநர் என்ன செய்வது ஜனாதிபதி சொல்வதை செய்கின்ற அவரால் அதனைச் செய்யமுடியுமா என்பது தெரியவில்லை. சீவீகே ஐயா, இந்தக் கோரிக்கையை ஜனாதிபதிடமே விடுத்திருக்கலாமே.

---

**எஸ். சதீஸ்குமார், பொகவந்தலாவ, ஹற்றன்.**

**கேள்வி:** சஜித் பிரேமதாஸவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடுவதற்கு ஐக்கிய மக்கள் கூட்டணி இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என குறித்த கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்

தெரிவித்திருக்கிறாரே. அப்படியெனில் அவரை வேட்பாளராக்குவதில் அவர்களுக்கும் நம்பிக்கை இல்லை என்பதுதானே அதன் அர்த்தம்?

**வியுக்தியார்:** அட நீங்கள் வேறு. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரேமதாஸவே இன்னமும் றெடி இல்லையாமே. அவர் பின்வாங்குவதால்தான் அவரது விசுவாசிகள் அவர்தான் எங்கள் வேட்பாளர் என்று திரும்பத்திரும்ப தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் ஜனாதிபதி தேர்தல் அறிக்கப்படும்போது இன்றிருக்கும் பொருளாதார நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் ரணில் வெற்றி பெறுவார் என்பது உறுதியாகிவிடும். அதனால்தான் சஜித்துடன் இருக்கும் பலர் ரணில் பக்கம் போகாமல் காத்திருக்கின்றனர். தேர்தல் அறிவிக்கப்படுகின்றபோது நிலைமை மாறிவிட்டால் பிரச்சினையாகிவிடுமே என்பதால் அவர்கள் அவசரப்படாமல் இருக்கிறார்கள். நிலைமை ரணிலுக்கு சாதகமாக தொடர்ந்து இருந்தால் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் சஜித் கட்சியிலிருந்து மாத்திரமல்ல, மனோ, ஹக்கீம் போன்றவர்களும் அணி மாறிவிடுவார்கள் தானே. அதனைத்தான் மனோ இப்போது பூடகமாக சொல்லியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

---

**க.சர்வானந்தன், இணுவில்.**

**கேள்வி:** பாரம்பரிய தமிழ்த் தலைவர்கள் தமது அதிகாரத்தை இழந்தபோது இனவாதத்தை விதைத்தனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்திருக்கிறாரே?.

**வியுக்தியார்:** அவர்கள் அதிகாரத்தை இழந்தபோது இனவாதத்தை விதைத்தார்கள். ஆனால் இவரோ ஆரம்பத்திலிருந்தே அதிகாரத்திற்கு வருவதற்காக அல்லவா இனவாதத்தை விதைத்து வருகிறார்.

---

**எஸ். சுதர்மன், திமிலத்தீவு, மட்டக்களப்பு.**

**கேள்வி:** பல வருடங்களாக நடத்தப்படாது இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலை உடன் நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து

வருகின்றது என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் அறிய வருகின்றது என்று ஒரு செய்தியை ஈழநாடுவில் பார்த்தேன். இந்தியா எவ்வளவுதான் அழுத்தம் கொடுத்தாலும் இலங்கை மசியாது போல அல்லவா இருக்கின்றது?

**வியுக்தியார்:** அழுத்தம் என்றால் என்னவென்பது தெரியவில்லை. ஒருவர் உடல் நோவில் இருந்தால், மசாஜ் சென்டருக்குப்போனாலும் நொகின்ற உடலில் அழுத்துவார்களே அதுபோலத்தான் இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுகின்றதோ தெரியவில்லையே. ஒரு பில்லியனைக் கொடுக்க முதல் கொழும்பு துறைமுகத்தின் ஒரு முனையத்தை அம்பானிக்கு எடுத்துக் கொடுத்த அழுத்தத்தைப்போல, அல்லது கடன் மறுசீரமைப்பிற்கு சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதம் அனுப்புவதற்கு முன்னதாக மன்னாரில் காற்றாலை மின் உற்பத்திக்கு அனுமதி எடுக்க அழுத்தம் கொடுத்தது போல மாகாணசபைக்கு தேர்தல் நடாத்துவதற்கும் அழுத்தம் கொடுத்திருந்தால் எப்போதோ தேர்தல் நடந்திருக்குமே.

# இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்.....

கிறிஸ்டி நல்லரெத்தினம்



சார்லிக்கு இன்று என் மீது கோபம். அவன் தட்டில் வைத்த எதையும் இன்று சாப்பிடவில்லை. தினமும் நான் கொடுக்கும் அந்த உலர்ந்த கொடிமுந்திரியைக்கூட தொடவில்லை என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். அதுதான் அவன் 'பேஃவரிட்" ..... அதைக்கூட..... காலையில் இருந்து 'உர்ர்ர்..... உர்ர்ர்" என்று ஏதோ விசித்திர சத்தம் வேறு எழுப்பிக்கொண்டேயிருந்தான்.

காலையில் எழுந்ததுமே சார்லிக்கு அருகில் சென்று 'ஹலோ சார்லி' என்பேன். பதிலுக்கு 'ஹலோ' என்று விட்டு கூட்டின் வாசலுக்கு அருகில் வந்து அமர்ந்து கொள்வான். கூட்டின் கதவுகளை அகலத் திறந்து, ஒரு தொட்டில் இருந்து மழலையை தூக்கும் தாயின் கவனத்துடன், மிகப் பவ்வியமாக சார்லியை என் விரல்கள் மூடிக்கொள்ளும். அவனின் பஞ்சுபோன்ற மிருதுவான இறகுகள் என் விரல்களுக்கு ஒரு இதமான மென்மையை அறிமுகப்படுத்தும். என் பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக் கும் இடையே உருவாகும் அந்த இடைவெளியில் அவன் தலையை வெளித்தள்ளி குறுகுறுவென தலையை பல கோணங்களில் திருப்பி ஒரு புதிய உலகைக் கண்டு கொண்ட ஒரு மாலுமியின் வியப்புமிகுந்த கண்டடைதல் அங்கு நடந்தேறும்.

என் விரல்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு மெதுவாய் என் கை வழி ஏறி தோளில் அமர்ந்து கொண்டு என் காதின் ஓரங்களை தன் கூரிய அலகுகளால் கவ்வி விடுவிப்பான். இந்த சீண்டல் பல நிமிடங்களுக்கு நடந்தேறும். எஜமானுக்கு வலி ஏற்படுத்தாத 'செல்லச் சீண்டல்' அது. அவனது அன்பின் அடர்த்தியின் அளவுகோல் அது.

எல்லைகள் மீறும் போது "சார்லி!!" என நான் எழுப்பும் அழுத்தமான குரலை புரிந்துகொள்ளும் உணர்தல் அவனுக்கு எப்போதும் உண்டு. அவன் உடனே எனது காதை விடுவித்து தன் கால்களை பின்வாங்கி கழுத்தில் இருந்து பின் நகர்ந்து தோளின் ஓரத்தில் அமர்ந்து தன் கழுத்தைத் திருப்பி 'கோபமா?' எனும் பாணியில் என்னை நோக்கி என் அடுத்த கட்டளைக்கு காத்து நிற்பான். "வட்ஸ் றோங் வித் யூ?" எனும் என் சொற்களை அவன் புரிந்து கொண் டதாய் எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அப்படி கடிந்து கொண்டதில் எனக்கு ஒரு திருப்தி. ஒரு எஜமானுக்குரிய அதிகாரத்தை உரிய நேரத்தில் பாவித்துவிட்டதால் பிறந்த திருப்தி அது. புறக்கணிக்கப்பட்ட அத்துமீறல்கள் அங்கீகரிக்கப்பட்ட அத்துமீறல்களாய் மாறிவிடக்கூடாது என்பதில் எனக்கு இருந்த கவனம் பற்றி சார்லிக்கு அக்கறையில்லை.

சார்லிக்கு இறகுகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது கத்தரித்து குட்டையாக்கிவிடுவதனால் அவனால் அதிக தூரம் பறக்க முடியாது. வீட்டினுள்ளேயே ஒரு சுற்று பறந்துவிட்டு தன் கூட்டின் மேல் வந்து அமர்ந்து விடுவான். இந்த ஹால் தான் அவன் உலகம். அவனுக்கு உண்ண உணவும் இருக்க இடமும் அமைத்துக்கொடுத்த என்னால் அவனுக்கு வேண்டிய சுதந்திரத்தை மறுக்கவேண்டியதாயிற்கு. நான் மட்டுமா கொடியவன்? மானுடனை மகிழ்விக்க வளர்க்கப்படும் எல்லாப் பிராணிகளும் தம் சுதந்திரத்தை இழந்துதானே வாழ்ந்தாகவேண்டும். சுதந்திர வாழ்க்கையே ருசிக்காமல் வாழ்ந்து மடியும் இந்த ஜீவன்கள் தாம் இழந்தது என்னவென்றே உணரமல் வாழ்ந்து மறைவதுதான் அதிலும் கொடுமை!

சார்லிக்கு அந்த சுதந்திர வாழ்க்கையென்றால் என்னவென்று நிச்சயம் தெரிந்திருக்கும். கூட்டினுள் இருந்து கொண்டே ஜன்னல் கண்ணாடியூடாக வெளியே வேலி யில் வந்தமரும் புறாக்களையும், காகங்களையும் சார்லி நிச்சயம் பார்த்திருக்கிறான். அவற்றை கண்டவுடன் விசித் திரமான ஒலிகளை எழுப்பிக் கொண்டே கூட்டினுள் பறந்து உள்ளே அவன் விளையாடுவதற்காக கட்டியிருந்த சிறிய வெள்ளி மணியை கொத்தி ஓசை எழுப்புவான். அல் லது உள்ளே தொங்கும் ஓலையால் பின்னிய மீன் வடிவ அலங்காரத்தை கொத்தி சின்னா பின்னப்படுத்துவான். அவனது விடுதலைப் புரட்சியின் வீரியத்தின் எல்லைகள் இவ்வளவே. வெளியே வந்தமர்ந்த பறவைகள் இது பற்றி அலட்டிக் கொள்ளாமல் தம் சிறகுகளை விரித்து அவற்றை சுத்தம் செய்து, ஓடுபாதையில் தரித்திருக்கும் விமானத் தைப் போல், அடுத்த பயணத்திற்கான ஆயுத்தங்களை செய்துகொண்டிருக்கும். ஜோடியாய் வந்தமர்ந்த கிளிகள் ஒன்றையொன்று கொஞ்சிக் கொண்டே தம்மை சுத்தம் செய்வதில் கண்ணாயிருக்கும். பரந்த வானமே அவைகளுக்கு எல்லை. விண்ணைக் கிழித்து உயரப்பறந்து வீட்டின் கூரைகள் தாண்டி எங்கும் போவோம் எனும் சுதந்திரத்தை சுவைக்கும் காட்டுப்பறவைகள் அல்லவா அவை!

திருமணமான புதிதில் ராதிகா வேண்டும் என்று கேட்டதால் வாங்கிய கிளிதான் சார்லி. இதற்கு சார்லி என்று பெயர் சூட்டியதே ராதிகாதான். சார்லி தென் அமெரிக்க காடுகளில் வாழும் மஞ்சள் நிறம் கலந்த சென்நிற மார் புள்ள பச்சைக் கிழி வர்க்கத்தைச் சேர்ந்தது.

காலையில் எழுந்ததும் 'ஹலோ சார்லி.....குட் மோர்னிங் சார்லி' எனும் ராதிகாவின் அழைப்புகளை முதலில் அலட்சியம் செய்த சார்லி நாளடைவில் 'ஹலோ" எனும் பதத்தை மட்டும் கற்றுக்கொண்டான். பாதி வெற்றி கண்டதில் ராதிகாவிற்கு ஒரே குதுாகலம்!

சார்லியின் கூடு பெரியது. அவன் பார்வையில் அது அவனின் 'வன் ரூம் எப்பாட்மென்ட்'. மேல்தட்டில் அவனுக்கு வேண்டிய எல்லா விளையாட்டுப்பொருட்களும் தொங்கும். எல்லாம் பனை ஓலையிலும் முற்றிக் காய்ந்த அறுகம் புல்லை திரித்து செய்தவை. பிளாஸ்டிக் பொருட்கள் தவிர்க்கப்பட்டன. அவை அவன் மெல்லிய அலகுகளை சிதைத்துவிடும் என்பதால் இந்த ஏற்பாடு.

கீழ் தட்டில் தொங்கும் ஒரு சிறு கிண்ணத்தில் சார் லிக்கு வேண்டிய தானியங்களும் மறு கிண்ணத்தில் பழ வகைகளும் காய்கறிகளும் நறுக்கி வைக்கப்படும். குடிநீர் வைக்க மூன்றாம் கிண்ணம். அங்கு குறுக்கே போடப்பட்டிருக்கும் ஒரு மரப்பாலம்தான் சார்லியின் மலசலகூடம். இந்த இடபேதங்கள் சார்லிக்கு நன்கு புரிந்தவை.

என் தோளில் ஐந்து நிமிடங்கள் அமர்ந்த பின் அவனைத் தூக்கி இந்த மரப்பாலத்தில் வைத்த உடனே தனது 'கடன்களை" சட்டென முடித்து விட்டு அடுத்த உலாவிற்கு ரெடியாகிவிடுவான். ஒவ்வொரு ஐந்து, பத்து நிமிடத்திற்கு ஒருமுறை வெளியேற்றாவிட்டால் என் தோள் தான் அவன் கழிப்பிடம். நேரம் தப்பினால் என் தோளில் கழித்துவிட்டு 'சொன்னேனோ இல்லையோ' என்பதைப்போல் என்னை பார்த்த நாட்களும் உண்டு.

சார்லி எங்கள் வீட்டிற்கு வந்த புதிதில் இருந்ததோ வேறு ஒரு கூடு. பெரிய விசாலமான ஒன்று அது. ஒரு மாதமாவது அதில் இருந்திருப்பான். ஆனால் சார்லியின் போக்கு அப்போது இன்று போல் இல்லை. எப்போதும் கூச்சலிடுவான். என்னையும் ராதிகாவையும் கண்டால் மருண்டு ஒரு எதிரியை கண்ட பாவனையில் போருக்கு தயாராகும் ஸ்பாட்டனைப்போல் எம்மை தாக்க தயார் நிலையில் இருப்பான். ஏன் இந்த ஆரேக்ஷம்? புரியவில்லை.

ராகவன்தான் எங்களுக்கு ஒரு இரட்சிப்பு தேவதையாய் ஒரு தீர்வை சொல்லிவைத்தான்.

என்னுடன் கல்லூரியில் படித்த ராகவன் மிருக வைத்தியத்துறையில் பயின்று அதிலும் பறவைகள் பிரிவில் சிறப்பு தேர்ச்சி வேறு பெற்று கண்டியில் பிறைவேற் கிளினிக் வைத்து நடத்துகிறான். 'காப்பாற்று நண்பா" என்று காலில் விழ இவனை விட வேறு யார் இருக்க முடியும்?

சார்லியின் இந்த 'சங்கே முழங்கு' போர் மனப்பான்மைக்கு தீர்வைக்காண எனது முதல் போன் அழைப்பிலேயே அழுது வடிந்தேன்.

'ஐ மஸ்ட் சீ த பெஃலோ......நான் பார்க்காம ஒண்ணுமே சொல்லமுடியாது .....அடுத்த வாரம் வீட்டுக்கு வரட்டுமா?..... ஒரு வாரம் உன்னால உயிர் வாழ முடியுமா?"

'எஸ்... எஸ்....ப்ளீஸ் கம் ராகவா.....காத்திருப்பேன் நண்பா."

சார்லி வீட்டிற்கு வந்த நாள் முதல் சமையல் கட்டிலும் மாற்றங்கள் செய்யவேண்டியதாயிற்று. சார்லியை எமக்கு விற்றவனே எமக்கு சில விதிமுறைகளை சொல்லிவைத்தான். நாங்கள் இருந்த இரண்டு அறை 'டவுன் ஹவுஸ்" என்பதால் ஹாலை அடுத்து இருந்த 'டானா" போன்று நீண்ட பகுதிதான் சமையலறை. சார்லியின் கூடு இருந்த இடத்தில் இருந்து அதிக தூரமில்லை. எனவே எண்ணைப் புகை, மற்றும் ராதிகா தாளித்து சமைக்கும் போது எழும்பும் அந்த காரமான கடுகு, வெள்ளைப்பூடு மணம் போன்றவை சார்லியின் மென்மையான சுவாச இழையங்களுக்கு கேடு என்று சொல்லிவிட்டான். இனியென்ன.....வீட்டில் தாளிப்பும் அவுட்!

'சார்லி இல்லேண்ணா விதம்விதமா கடுகு சீரகம் எல்லாம் போட்டு சமைச்சு தருவேனோ இல்லையோ டார்லிங்" எனும் ராதிகாவின் கொஞ்சலுக்கு இது நிச்சயம் வழிவகுத்தது என்பது என்னவோ உண்மை!

அடுத்த வாரமே ராகவன், சொன்னதுபோல், ஒரு ஞாயிறு மாலையில் கையில் ஒரு சிறு பழக்கூடையுடன் விஜயம் செய்யத் தவறவில்லை. ஒரு பச்சைநிற டீ சேர்ட்டில் ஒரு மிருக வைத்தியன் என்ற அடையாளங்கள் எதுவும் இன்றி கல்லூரி மாணவனைப்போல் தோன்றிய ராகவன்..... நலம் விசாரிப்பு, மூன்று கப் காப்பி, சிறு சுயசரிதை பரிமாற்றங்களின் பின்.....

'ஓகே, லெட் மி சீ மை பேஷண்ட்" என்றபடி சார்லியின் கூட்டைத் திறந்து மெதுவாக அவனை கைகளில் கிடத்தி அவன் சிறகுகளை விரித்து பரிசோதித்து பின் அவன் கால், அலகு போன்றவற்றையும் உன்னிப்பாக நோக்கிவிட்டு மீண்டும் சார்லியை கூட்டினுள் விடுவித்தான் ராகவன்.

ராதிகாவும் நானும் ஆப்பரேஷன் தியேட்டரின் முன் கவலை மிகுந்த ஆவலுடன் டாக்டரின் அந்த வார்த்தைக் காய் காவல் நிற்கும் சினிமா அம்மாக்களைப் போல் ராகவனின் முகத்தை நோக்குகிறோம்.

'பயப்படறதற்கு ஒன்றும் இல்லை மை டியர் பிஃரண்ட்......ஹி இஸ் ஓகே!"

'அப்படினா? ஏன் இந்த சத்தம்... ஆர்பாட்டம்...என்னையும் ராதிகாவையும் ஒரு எதிரி மாதிரி?"

ராவகன் சிரித்தபடி 'பிழை சார்லியுடையது இல்லவே இல்லை.....இட் இஸ் யூ பீப்பிள்....உங்க தவறு நண்பனே."

'எங்க தவறா?' ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறோம்.

'எஸ்....ஜஸ்ட் லுக்... சார்லியின் கூட்டில் அவன் உட்காரும் அந்த தடி பாருங்க."

இருவரும் கூட்டைப் பார்க்கிறோம்.

எந்த தடியை ராவகன் சொல்கிறான் என்று எமக்கு புரியவில்லை.

'திஸ் வண்..... உயரத்தில் கூட்டின் குறுக்காய் போகிறதே.....தட் ஸ்டிக்."

'ஓ.....ஆம் அதை ராதிகா 'சர்லியின் சிம்மாசனம்' என்று கேலியாக சொல்வாள். அவனுக்கு பிடித்த உயரமான இடம் அது.....அதில் இருந்து கொண்டுதான் எங்கள் மீது வசைபாடுவான். ஹிஸ் பேஃவறிட் பிளேஸ்.'

'ஏன் சார்லியின் 'பேஃவறிட் பிளேஸ்' அது என்று சொல்லட்டுமா?....பறவைகளுக்கு பொதுவாக தமது ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் காண்பிக்கும் பரிமாணங்களில் ஒன்றுதான் உயரம். தான் ஒரு உயரமான இடத்திலோ அல்லது மரத்திலோ அமரும்போது மற்ற பறவைகளை விட, ஏன் மற்ற அனைத்து உயிரினங்களை விட, உயர் ஸ்தானத்தில் இருப்பதாய் தான் எண்ணிக்கொள்ளும். பருந்தும், ராஜாளியும் கூட ஒரு காட்டில் உள்ள மிகவும் உயர்ந்த மரத்தின் உச்சிக் கிளையில் அமர்ந்து கொள்ளும். இது அதற்கு ஒரு திடநம்பிக்கையும் ஒரு வீராப்பையும், எதையும் 'நீ ஒரு பதர்' அப்படீங்கிற நோக்கில் பார்க்கும் கர்வமனப்பான்மையையும் அளிக்கும்."

'புரிகிறது ராவகா....ஆனால் அதற்கும் சார்லியின் இந்த 'ராஜபாட்' நடத்தைக்கும் சம்மந்தம்?"

'இருக்கு மை டியர் பிஃரண்ட்.....ஜஸ்ட் லுக் அட் ஹிஸ் கேஜ்......சார்லியின் கூட்டைப் பார்.... உயரத்தைப் பார்.... உங்கள் இருவரின் உயரத்தை விட கூடு உயரமோ இல்லையோ? சார்லி தன், வேஃவரிட் ஸ்போட் என்று நீங்கள் இருவரும் சொன்ன இடத்தில் அமர்ந்து உங்களை அதிகாரம் செய்கிறான். அவன் தன்னை ஒரு கிளியாக அல்ல, ஒரு பருந்தாகவே பார்க்கிறான். அவ்வளவே.....அவனை அந்த இடத்தில் வைத்ததே நீங்கள்தான். உங்க கம்பெனி சீ.ஈ.ஓ உங்க ஆபீஸ்ல மொட்டை மாடியில் இருந்து அதிகாரம் செய்கிறாரோ இல்லியோ? அதுவே இது!"

'ஓ! புரிகிறது ராகவா, சார்லியை நாங்கள்தான் ஒரு உயர்ஸ்தானத்தில் வைத்து அவனுக்கு அந்த தலைக்கனத்தை அறிமுகப்படுத்திவிட்டோம். தன்னுள் மறைந்திருந்த இந்த அதிகார பலத்தை எம்மீது பாவிக்க நினைத்ததால் வந்த வினை இது என்பதை உணரத்தவறி விட்டோம்.

தங்யூ மை ஃபிரண்ட். உயிர் காப்பான் தோழன்னு சும்மா சொல்லலியே!

சரி, சார்லியின் இந்த நடத்தைக்கு காரணத்தை கண்டு பிடித்தாயிற்று. தீர்வையும் சொல்லுங்கள் மந்திரியாரே!"

'இதற்கு ஒரே தீர்வு : சார்லியின் கூட்டின் உயரத்தை குறைத்தாகவேண்டும். வேறு கூடு வாங்க வேண்டிய அவசியமில்லை. இந்தக் கூட்டின் உயரத்தையே அட்ஜெஸ்ட் செய்து விடு. ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள், உங்கள் இருவரின் உயரத்திற்கு கீழ்தான் சார்லியின் 'சிம்மாசனம்' இருக்க வேண்டும். நீங்கள்தான் எஜமான்'......நொட் சார்லி....புரிகிறதா மை ஃபிரெண்ட் ?"

'ஒரு உயிரினத்தின் நடத்தையில் அதன் பரிமாணம் எத்தனை முக்கிய பங்கை வசிக்கிறது என்பதை புரியாமல் இருந்துவிட்டோம் ராவகா. சார்லியை நாம் அது இயற்கையாய் வளர்ந்த சுற்றாடல் இருந்து தனிமைப்படுத்திவிட்டாலும் அதன் உள்மனதில் உறங்கிக் கொண்டிருந்த சமூக அடுக்கின் பரிமாணங்களைப் பற்றி மறந்துவிட்டோம். நாமே சார்லியை சிம்மாசனத்தில் அமர்த்திவிட்டு எமக்கு அவன் அடிபணிய வேண்டும் என எதிர்பார்த்தது எத்தனை மூடத்தனம்? பறவைகளுக்கும் மனோதத்துவ ரீதியான அணுகுமுறை தேவை என்பதை உணர்த்தி விட்டாய் நண்பா!"

'பரிமாணங்கள் பறவைகளுக்கு மட்டுமல்ல...... மனிதர்களையும் நாம் உயர் ஸ்தானத்தில் வைத்து பூஜிக்கும்போது அவர்கள் தம்மை மறந்து எம்மை ஆழ நினைப்பதை நாம் கண்முன்னே காண்கிறோமே" என்ற ராகவனின் வார்த்தைகள்தான் எத்தனை உண்மையானவை!

அவன் வார்த்தைகளை அங்கீகரிப்பதைப்போல் அடுத்த அபார்ட்மெண்டில் இருந்த வானொலி அந்த மாலையின் அமைதியை கலைத்தது.....

'இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே....." ■

# உலகை உலுக்கிய சீன தியனன்மென் சதுக்க படுகொலை! சீன மாணவர்களின் போராட்டத்தை அடக்கிய கொடூரம்:

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

சீனாவில் 1989 மே இறுதி நாட்களில் ஜனநாயக உரிமை கேட்டுப் போராடிய மாணவர்கள் ஏராள மானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட இடம் தான் தியனன்மென் சதுக்கம் ஆகும்.

**1989 தியனன்மென் சதுக்க போராட்டம்**

தியனன்மென் என்ற பெயரை உலகம் இன்னும் அதிர்ச்சியோடு நினைவுகூர்வதற்கு இந்தப் போராட்டமும், அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு சீன அரசு கையாண்ட வழிமுறைகளால் எண்ணற்றவர்கள் கொல்லப்பட்டதும்தான் காரணம்.



சீனாவின் தியனன்மென் சதுக்கப் படுகொலை வரலாற்றில் உலகை அதிரவைத்த படுகொலையாக இன்னமும் கருதப்படுகிறது. இந்த தியனன்மென் சதுக்கம் சீனாவில் சொர்க்கத்தின் அமைதியின் வாயில் என்றும் அழைப்பர்.

சீன தலைநகரம் பெய்ஜிங்கின் நடுப் பகுதியில் அமைந்துள்ள தியனன்மென் சதுக்கம் 100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இச்சதுக்கம் உலகில் மிகப் பெரிய நகர்ப்புற சதுக்கமாகவும் சீனப் பண்பாட்டில் ஒரு முக்கியமான இடமாகவும் உள்ளது.

1989இல் சீனாவின் தலைநகரம் பெய்ஜிங்கில், திய னன்மென் சதுக்கத்தில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் சீன தொழிலாளர்களும், கல்லூரி மாணவர்களும், இப் போராட்டத்தை தலைமை தாங்கினர். 1989இல் ஏப்ரல் 15 முதல் ஜூன் 4 வரை இப் போராட்டங்கள் நடந்தன.

> தனி ஒரு போராட்டக்காரர் டாங்கி வரிசையை மறித்து நிற்பதைக்காட்டும் காட்சி அது. 20ஆம் நூற்றாண்டின் ஒரு முக்கிய புகைப்படமாகவும் இது கருதப்படுகிறது. சீனத் தலைநகர் பெய்ஜிங் தியனன்மென் சதுக்கத்தில் 34 ஆண்டுகளுக்கு முன் பெரும் போராட்டத்தின் படுகொலை களத்தின் வரலாற்றை என்றும் நினைவுபடுத்தும் ஒரு முக்கிய புகைப்படமாகும்

**மாணவர் போராட்டம் எப்படி உருவாகியது?**

1989 ஆண்டில் மேம்பட்ட அரசியல் உரிமைகள் கோரி போராட்ட மோகம் மாணவர் மத்தியில் எழுந்தது. அத்துடன் முக்கிய அரசியல் தலைவரும், பொருளாதார, அரசியல் மாற்றங்களை ஆதரித்தவருமான ஹூயோபாங்கின் இறப்பு போராட்டக்காரர்களை தூண்டியது.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் எதிரிகளால் கட்சியின் உயர் பதவியிலிருந்து அவர் ஏற்கனவே நீக்கப்பட்டிருந்தார். 1989 ஏப்ரல் மாதம் ஹூவின் இறுதிச் சடங்கின்போது ஆயிரக்கணக்கானோர் கூடினர். அவர்கள் சீனாவில் பேச்சுரிமை கோரினர். கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் வலியுறுத்தினர்.

அதற்கு அடுத்த வாரம் போராட்டக்காரர்கள் தியானென்மென் சதுக்கத்தில் கூடினர். இந்தப் போராட்டத்தில் சுமார் 10 லட்சம் பேர் வரை கூடியதாக கணிக்கப்படுகிறது. முதலில் அரசாங்கம் போராட்டக்காரர்களுக்கு எதிராக எந்த ஒரு நேரடி நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எவ்வாறு எதிர்வினையாற்றுவது என்பதில் சீன அரசுன் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது. சிலர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். சிலர் பெரிதாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்க வேண்டாம் என்றனர்.

சீனப் பொதுவுடமைக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் அரசியல் கொள்கைகளுக்கும் எதிராக மாணவர்கள் போராட்டம் செய்தனர். பெய்ஜிங்கில் தியனன்மென் சதுக்கத்தில் முக்கியமான போராட்டங்கள் நடந்தன. ஆனாலும் சாங்காய் போன்ற பல்வேறு சீன நகரங்களிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தன.

இந்த வன்முறையுக்கு பிறகு சீன அரசு பல மக்களை கைது செய்ததுடன், வெளிநாடு செய்தி ஊடகங்களை தடையும் செய்தது. சீன அரசு செய்த வன்முறையையும் ஊடகம் மீது தடை செயலையும் பல்வேறு நாடுகள் அப்போது கண்டனம் செய்தன.

பின்னைய ஆதாரங்களின்படி, சீனாவிற்கான பிரித்தா னிய தூதுவர் ஆலன் டொனால்டு 2017-ஆம் ஆண்டில் வெளியிட்ட ஆவணங்களின்படி, இப்போராட்டத்தில் 10,000 பேர் பலியானதாக தெரிவித்துள்ளார்.

**டெங் சியாவோ பிங் பொருளாதார சீர்திருத்தம்**

1989 ஆம் ஆண்டு தியனன்மென் சதுக்க எதிர்ப்புக்கு வழிவகுத்த பல காரணிகள் இருந்தன. ஆனால் இந்த பல காரணங்களில் முக்கியமாக, சீனாவின் பெரிய பொருளாதார சீர்திருத்தங்களுக்கான டெங் சியாவோ பிங் 1979 திறப்பும் ஒன்றாகும்.

அத்துடன் மாவோயிச கம்யூனிச கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்த ஒரு நாடு மற்றும் கலாச்சாரப் புரட்சியின் கொந்தளிப்பில் திடீரென்று அதிக சுதந்திரத்தை அனுபவித்தது. சீன பத்திரிகை அவர்கள் முன்பு ஒருபோதும் மறைக்க முடியாத பிரச்சினைகள் குறித்து வெளியிடத் தொடங்கியது. மாணவர்கள் கல்லூரி வளாகங்களில் அரசியலை விவாதித்தனர்.

இந்த சோக நிகழ்வான தியனன்மென் சதுக்க எதிர்ப்புக்கள் உருவாக நான்கு மூல காரணங்களும் உள்ளன. சீனாவில் முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் வளர்ந்து வரும் பொருளாதார செழிப்புக்கு வழிவகுத் தன. பல வணிகத் தலைவர்கள் அன்றைய தலைவர் டெங் சியாவோ பிங்கின் வழிநடத்தலை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டனர்.

அடுத்த முக்கிய காரணியாக அதிக பணவீக்கம் கருதப்பட்டது. இதனால் விவசாய பிரச்சினைகளை மோசமாக்கியதுடன், நாட்டின் பணவீக்கம், 28 வீதமாக உயர்ந்தது.

**சீன கம்யூனிஸ்ட் கட்சி ஊழல்**

மற்றய முக்கிய காரணியாக சீன கம்யூனிஸ்ட் கட்சி ஊழல் ஆகும். 1980 களின் பிற்பகுதியில், கட்சித் தலைமையின் ஊழலால் மக்கள் விரக்தி அடைந்தனர். உதாரணமாக, பல கட்சி தலைவர்களும் அவர்களது குழந்தைகளும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சாதாரண மக்களுக்கு அனைத்தும் தடைசெய்யப்பட்டிருந்தன.

1980களில் சீனாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி சில தனியார் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு முதலீடுகளுக்கும் அனுமதி வழங்க தொடங்கியது. அப்போது சீனாவில் பெரிய மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.




அதேவேளை இந்த புதிய சீர்திருத்தங்கள் வேகமாக மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஒரு தரப்பும், நாட்டை கடுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்து கொள்ள வேண்டும் என்று கூறும் கடும்போக்குவாதிகள் மறு தரப்பும் என சீன கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இருவிதமான வேறுபாடுகள் முகம் காட்டின.



**டாங்கிகளை எதிர்த்த நபரின் புகழ்பெற்ற புகைப்படம்**

இறுதியில் கடும்போக்காளர்கள் வென்றனர். பெய்ஜிங்கில் மே மாத இறுதியில் பாதுகாப்பு சட்டம் அமலுக்கு வந்தது. ஜூன் 3 மற்றும் 4ஆம் தேதிகளில் தியனன்மென் சதுக்கத்தை நோக்கி அரச படைகள் சென்றன. அந்தப் பகுதியை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர படையினர் துப்பாக்கிச் சூடு நடாத்தி போராட்டக்காரர்களை கைது செய்தனர்.

ஜூன் மாதம் 5ஆம் தேதி, சதுக்கத்தில் இருந்து வெளியேறிய ராணுவ டாங்கி வரிசை முன், இரண்டு கைப்பைகளை வைத்து கொண்டு சாமானியராகத் தோன்றிய ஒரு மனிதர் மறித்துக்கொண்டு நின்றார். அதன்பின் அவர் இரண்டு படையினரால் இழுத்து தள்ளப்பட்டார். அந்த நபருக்கு பிறகு என்ன ஆனது என்பது தெரியவில்லை. ஆனால் அந்தக் காட்சியைப் பதிவு செய்த புகைப்படம், அந்தப் போராட்டத்தின் அடையாளமாக டாங்கிகளை எதிர்த்த மனிதரின் படம் மாறியது.



**போராட்டத்தில் கொல்லப்பட்ட எண்ணிக்கை?**

இந்தப் போரட்டத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. முதலில் 200 பொதுமக்களும், பாதுகாப்பு படையை சேர்ந்த சில டஜன் பேரும் உயிரிழந்ததாக சீன அரசு 1989ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் தெரிவித்தது.

ஆனால், நூற்றுக் கணக்கானோர் முதல், பல்லாயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று வெவ்வேறு கணிப்புகள் வெளியாயின. சீனாவுக்கான பிரிட்டனின் தூதர் ஆலன் டொனால்ட் அனுப்பிய தகவல் பறிமாற்றம் ஒன்றில், இந்த சம்பவத்தில் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டிருந்தது.

சீன மக்களுக்கு இங்கு என்ன நடந்தது என்பது முழு மையாக தெரியுமா என்பதும் ஐயமே. அத்துடன் தியனன்மென் சதுக்கத்தில் என்ன நடந்தது என்பது சீனாவில் அதிகம் பேசப்படக் கூடிய ஒரு விஷயமன்று. இப் படுகொலை தொடர்பான இணையப் பதிவுகள் அரசால் உடனுக்குடன் நீக்கப்பட்டுவிடும்.

தற்போதைய தலைமுறையினருக்கு தியனன்மென் சதுக்கம் குறித்து அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏன் எனில் போராட்டம் நடந்தபோது பிறந்திருக்காத இன்றைய தலைமுறையினருக்கு இப்படுகொலை பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதும் உண்மையே. •

# கிழக்கு மாகாண ஆளுநரின் எண்ணக்கருவில் ‘தூய்மையான கடற்கரை’ வேலைத்திட்டம்







நிந்தவூர், மே 28

கிழக்கு மாகாண புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் எண்ணக் கருவிலும், ஆலோசனையிலும் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட “தூய்மையான கடற்கரை” எனும் கடற்கரை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் பெரு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நேற்று காலை திருகோணமலை அலஸ் தோட்டம் தொடக்கம் சல்லிக்கடற்கரை பகுதி வரை உள்ள கடற்கரை பகுதிகளை சுத்தப்படுத்தும் சிரமதானம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ. பார்த்தீபன், பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் தனேஸ்வரன், கடல் மற்றும் பாதுகாப்பு சூழல் திணைக்கள முகாமையாளர் எஸ். சிறிபதி உட்பட்ட கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்கள், உப்புவெளி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சமூக அமைப்புக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாகாண மட்டத்தில் பரவலாக முன்னெடுக்கப்பட்ட இந்த வேலைத் திட்டம், மாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளால், அவ்வப்பகுதி பிரதேச செயலகங்சகளின் பங்களிப்புடன் சிறப்புற முன்னெடுக்கப்பட்டது

கடற்கரைகளைச் சுத்தப்படுத்தும் இந்த பாரிய சிரமதான வேலைத் திட்டத்தில் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளூராட்சிச் சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆணையாளர்கள் மற்றும் செயாலரள்களின் பெரும்பங்களிப்புடன் வெற்றிகரமாகவும், பெரும் பயனளிப்பதாகவும் இந்த வேலைத்திட்டம் அமைந்தமை குறிப்பித்தக்கது.

மேலும் குறித்த புதிய ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவான கடற்கரையினைச் சுத்தப்படுத்தல் வேலைத திட்டத்தில், பிரதேச ரீதியான பொது அமைப்புக்கள் சமுர்த்திப் பிரிவினர் பயனாளிகள், விளையாட்டுக்கழகங்களின் உறுப்பினர்கள் பாதுகாப்பு தரப்பினர் உட்பட பெபாது மக்களும் பெரும் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர்.

புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானின் கிழக்கு மாகாண மட்டத்திலான மேற்படி முதலாவது வேலைத்திட்டம் பெரு வெற்றிகரமாக அமைந்தமை குறித்து பெரு மகிழ்ச்சியும், திருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் முக்கிய பிரதேச சபையான நிந்தவூர் பிரதேச சபையின் ஏற்பாட்டிலும், நிந்தவூர் பிரதேச செயலகத்தின் பங்களிப்புடனும் தூய்மையான கடற்கரை வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபைச் செயலாளர் திருமதி. ரி.பரமேஸ்வரன் தலைமையில் நிந்தவூர் கடற்கரைப் பூங்கா முன்றலில் இடம்பெற்ற மேற்படி கடற்கரை சுத்திகரிப்பு வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பைஸால் காசிம், பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லதீப் தலைமையில் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ. அன்வர் ஆகியோர் அதிதிகளாக்க கலந்து கொண்டதுடன்,

வேலைத்திட்ட சிரமதானப் பணிகளை ஆரம்பித்துவைத்து, சிரமதானத்திலும் பங்கு கொண்டனர்.

பெருமளவானோர் இத்திட்டம் வெற்றிகரமாக அமையப் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-06)






# சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து 4 மாதங்களில் 3102 முறைப்பாடுகள்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தகவல்

கொழும்பு, மே 28

**இலங்கையில் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் வன்புணர்கள், பாலியல் தொந்தரவுகள், உடல் ரீதியான பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து கடந்த நான்கு மாதங்களில் சுமார் 3 ஆயிரத்து 102 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.**

அதேபோல் கடந்த 2022 ஆம் ஆண்டு இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக 10 ஆயிரத்து 497 முறைப்பாடுகள் கிடைத்ததாக அதிகார சபையின் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் பிரிவின் பணிப்பாளர் சட்டத்தரணி சஞ்ஜீவனி அபேகோன் தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான செய்தியளிப்பு குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கும் நிகழ்ச்சி ஒன்றில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுவர்களுக்கு உடல் ரீதியாக கொடுக்கப்படும் துன்புறுத்தல்கள் தொடர்பாகவே கடந்த ஆண்டு அதிகமாக முறைப்பாடுகள் கிடைத்தன. இது சம்பந்தமாக 2 ஆயிரத்து 96 முறைப்பாடுகள் கிடைத்தன.

இதனைத் தவிர பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லாதமை தொடர்பாக ஆயிரத்து 231 முறைப்பாடுகளும், பிள்ளைகள் பராமரிக்கப்படாது கைவிடப்பட்டமை குறித்து 2 ஆயிரத்து 5 முறைப்பாடுகளும் கிடைத்தன.

பாரதூரமான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் பற்றிய 185 முறைப்பாடுகள் கிடைத்தன. பிள்ளைகளைப் பிச்சை எடுக்க வைப்பது குறித்து 249 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை சம்பந்தமாக 167 முறைப்பாடுகளும், சிறுவர்களுக்கு கொடுக்கப்படும் பாலியல் தொந்தரவுகள் பற்றிய 729 முறைப்பாடுகளும் கிடைத்தன.

சிறுவர்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் 25 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன - என்றார். (அ)



# யாழ். வந்த பஸ்ஸை பின்னால் பயணித்த வாகனம் மோதியது!

யாழ்ப்பாணம், மே 28

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ், மீசாலைப் பகுதியில் விபத்துக்குள்ளானது.

கிளிநொச்சி சாலைக்குச் சொந்தமான இந்த பஸ் நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து புறப்பட்டது. சாவகச்சேரி, மீசாலைப் பகுதியில் பயணிகளை இறக்கிக்கொண்டிருந்த போது, பின்னால் வந்த வாகனம் பஸ்ஸை மோதித்தள்ளியது.

இதில் பயணிகள் யாரும் காயமடையாதபோதும், பஸ் சேதமடைந்தது. (அ)

# உயர்கல்விக்காக வட்டியில்லா கடன்

## அமைச்சரவைக்கு முன்மொழிவு

கொழும்பு, மே 28

தனியார் பல்கலைக்கழக கல்விக்கு வட்டியில்லாக் கடனுதவி வழங்குவதற்கான யோசனை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தபோதிலும் அரச பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெறத் தவறிய ஐயாயிரம் மாணவர்களுக்காகவே இந்த வருடாந்த வட்டியில்லாக் கடனுதவி யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படஉள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் மேலதிக கல்வியைத் தொடர ரூ.900,000 வட்டியில்லா கடன் கிடைக்கும்.

கல்வி முடிந்ததும் இந்தக் கடனை வட்டி இல்லாமல் திருப்பிச் செலுத்த இரண்டு ஆண்டுகள் அவகாசம் வழங்கப்படவுள்ளது - என்றார். (அ)

# நாட்டில் 90 வீதமான பாடசாலைகளில் நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழல்!

கொழும்பு, மே 28

நாட்டின் 90 வீத பாடசாலைகளில் நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழல் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

டெங்கு நோய்க்குள்ளாவோரில் 25 வீதமானோர் பாடசாலை சிறுவர்கள் என சுகாதார நிபுணர் திஸ்னக தசநாயக்க சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக பாடசாலைகளை அண்மித்து டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களை தீவிரப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுவதாக அவர் வலியுறுத்தினார்.

நாளை திங்கட்கிழமை ஆரம்ப மாகவுள்ள சாதாரண தர பரீட்சைக்கு முன்னதாக, பரீட்சை மத்திய நிலையங்களை அண்மித்து விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் 61 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

அறநெறி பாடசாலைகள் மற்றும் சமய ஸ்தலங்களை அண்மித்த பகுதிகளில் இன்று விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்தார். (அ)

# மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் பன்றிகளுக்கு வைரஸ் நோய் பரவல்!

கொழும்பு, மே 28

மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் பன்றிகளுக்கு வைரஸ் நோய் பரவி வருவதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

பன்றிகளின் சுவாச மண்டலத்தில் ஏற்படும் இந்த வைரஸ் நோய் ரி.ஆர்.ஆர்.எஸ் என்ற பெயரால் அறியப்படுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்தார்.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட பன்றிகள் உயிரிழப்பதாகவும் நோய்க்கான தடுப்பூசிகளை உடனடியாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஹேமலி கொத்தலாவல குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த வைரஸ் மனிதர்களுக்கு பரவும் அபாயம் இல்லை என அவர் கூறினார்.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளில் அண்மையில் மாடுகளுக்கிடையே தோல் கழலை நோய் பரவியமை தொடர்பில் செய்திகள் வெளி



யாகியிருந்தன.

இந்த நிலையில், தற்போது குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளில் கால்நடைகள் தோல் கழலை நோய் அறிகுறிகளுடன் காணப்படுவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தின் ஹொரம்பாவ, நாரம்மல, கெக்குணகொல்ல, மெட்டியாவ, மிதியால, பண்டாரகொஸ்வத்த, பரகஹகொட்டுவ உள்ளிட்ட பகுதிகளில் மாடுகளிடையே தோல் கழலை நோய் பரவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நோய்த் தாக்கத்தினால் குறித்த பகுதிகளில் நூற்றுக்கும் அதிகமான மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை ஜனக ரத்நாயக்கவிடம் அறவிட முடிவு

கொழும்பு, மே 28

சுமார் ஒன்றரை மாதங்களாக மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதில் காலதாமதம் ஏற்பட்டதால், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரிடமிருந்து அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை மீளப்பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரி முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை முன்மொழிந்திருந்த நிலையில், ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அதனை பெப்ரவரி மாதத்தின் நடுப்பகுதிக்கு ஒத்திவைத்தார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் நட்டம் ஏற்பட்டுள்ளது. நட்டம் ஒன்றரை மாதங்களுக்கு 3,200 கோடி ரூபாவாகும். அதை ஜனக்க ரத்நாயக்க ஈடு செய்யவேண்டும் என மின்சாரம் மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, ஜனக்க ரத்நாயக்கவுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களம் சட்டவிரோத சொத்து சேகரிப்பு விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கைகள், கால்கள்,வாய் கட்டி ஜா-எலவில் ஒருவர் கொலை

## தொலைக்காட்சி பெட்டிக்காக நடந்த கொடூரம்

கொழும்பு, மே 28

ஜா-எல வெலிகம்பிட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் தனியாக வசித்து வந்த 84 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையொருவரே கொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக கந்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் கை, கால்கள், வாய் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி கொலைச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரின் மகள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இந்த கொலைச் சம்பவம் மே 22 முதல் மே 25 வரை நடந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பி.எஸ்.கங்காதரன் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஆவார். குறித்த நபரின் நான்கு பிள்ளைகளில் இருவர் வெளிநாட்டில் வசிப்பவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட நபர் 1992 ஆம் ஆண்டு முதல் இந்த வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

மில்லேனியம் சிற்றி அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் இறந்தவரின் மகள்களில் ஒருவர் கடந்த சில நாட்களாக தனது தந்தைக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தும் செய்தும் பதில் வரவில்லை. இதையடுத்து, கடந்த 25ஆம் திகதி தனது தந்தையின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அப்போது வீட்டின் முன் கதவும் மற்ற கதவுகளும் பூட்டப்பட்டிருந்ததாக பொலிஸாரிடம் கூறினார். வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதால், பொலிஸாருக்கு தகவல் அளித்த அவர், வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, வீட்டின் அறையில் தந்தையின் சடலம் இருப்பதைக் கண்டார்.

அறையின் தரையில் கை, கால்கள் கட்டப்பட்டு வாய் கட்டப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் தொலைக்காட்சிப் பெட்டி மாத்திரமே திருடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. (அ)

## சவேந்திர...

உரிமை ஆர்வலர்கள் சார்பில் இலங்கையின் மிக மோசமான யுத்தக்குற்ற வாளியான சவேந்திர சில்வாவுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்க வேண்டும் என கோரும் இந்த மனுவை சமர்ப்பிக்கின்றோம் என இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் வழக்கு தொடருதலுக்கான சர்வதேச நிலையம் தெரிவித்துள்ளது.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் என்ற நம்பகத்தன்மை மிக்க மனித உரிமை அமைப்பு சவேந்திர சில்வா குறித்த 50 பக்க ஆவணமொன்றைத் தயாரித்து 2020 ஜூலை மாதம் பிரிட்டிஸ் அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாக அறிகின்றோம் என சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகார பொது நலவாய அபிவிருத்தி அலுவலகத்தின் தடைகள் குறித்த பிரிவிடம் இந்த ஆவணங்களை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் சமர்ப்பித்துள்ளது. இந்த ஆவணம் 2020 ஜூலை 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏன் சவேந்திர சில்வாவை தடை செய்யலாம் எனத் தெரிவிக்கின்றது எனவும் இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் வழக்கு தொடருதலுக்கான சர்வதேச நிலையம் கூறியுள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் காலங்களில் சவேந்திர சில்வா 58 படைப்பிரிவின் தளபதியாக பணியாற்றியவேளை உயிர்வாழ்வதற்கான உரிமை உட்பட மீறப்பட்டமை உட்பட இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களில் சவேந்திர சில்வாவிற்கு உள்ள தொடர்பு குறித்து சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் ஆவணம் தெளிவாக தெரிவித்துள்ளது எனவும் அந்த சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

## பயங்கரவாத...

சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என விடுக்கப்படும் வேண்டுகோள்களையும் அரசாங்கம் புறக்கணித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் நியாயமற்ற முறையிலும் பாதுகாப்பற்ற முறையிலும் சிறுபான்மையினத்தவர்களை இலக்கு வைத்து பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“பயங்கரவாதத் தடைச் சட்டம் தன்னிச்சையான கைதுகள் மற்றும் விசாரணையின்றி நீண்டகாலக் காவலில் வைத்தல் ஆகியவற்றுக்கு உதவுகிறது. சித்திரவதை மற்றும் வற்புறுத்தலின் கீழ் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவது உட்பட எந்தவிதமான நியாயமான அல்லது உரிய செயல்முறை பாதுகாப்புகள் இல்லாமல், சிறுபான்மையினரை குறிவைக்க இந்த சட்டம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது” என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

“இந்த அரசாங்கம் ஒரு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வர எதிர்பார்க்கும் சூழலில், இது கவலையளிக்கும் முன்னேற்றங்கள் ஆகும். இது பயங்கரவாதச் செயலின் வரையறையை மேலும் விரிவுபடுத்த முயல்கிறது” என்று மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் அல்லது நம்பகமான சான்றுகள் இருந்தால், நியாயமான விசாரணைத் தரங்களைப் பயன்படுத்தி உடனடியாக அவர்கள் மீது குற்றச்சாட்டுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## ஓ.எல்.பரீட்சை...

ஜூன் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பரீட்சையில் 4, 72,553 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பாடசாலை மூலம் 3,94,450 பேர் தோற்றவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள 3,568 பரீட்சை மத்திய நிலையங்களுக்குமான வினாத்தாள்கள் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று நள்ளிரவு முதல் ஆரம்பமாகியது. பரீட்சைக்காக 40 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

விசேட தேவையுள்ள மாணவர்களுக்காக இரத்மலானை, தங்காலை ஆகிய பகுதிகளில் இரண்டு விசேட பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சிறைக் கைதிகளுக்காக பரீட்சை மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதேபோன்று, மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களுக்காக விசேட பரீட்சை மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இம்முறை சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் டெங்கு காய்ச்சலில் இருந்து பாதுகாப்பு பெற உடலை மறைக்கும் வகையில் பொருத்தமான ஆடைகளை அணிந்து பரீட்சை நிலையங்களுக்கு செல்லுமாறு பரீட்சைகள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பரீட்சார்த்திகளின் போக்குவரத்து வசதிகளுக்காக மாணவர்களுக்கான பஸ் சேவையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வார இறுதி நாட்களில் பரீட்சை நடைபெறுகின்றபோது, வார நாட்களில் முன்னெடுப்பது போன்று ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## யாழ்ப்பாணத்தை...

பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் அவர்கள் மண்டபம் அகதி கள் முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு மார்ச் 23இல் இருந்து இதுவரை தமிழகத்துக்கு 258 பேர் அகதிகளாக வந்துள்ளனர். (அ)

## லான்ட்மாஸ்டரில்...

உயிரிழந்தார் எனக் கருதப்படுகின்றது.

கைவேலிப் பகுதியில் வசிக்கும் குறித்த சிறுமி முன்பள்ளியிலிருந்து வீடு வந்தபோது அயல் வீட்டுக்காரர் விறகுடன் நின்ற லான்ட்மாஸ்டரை பின்னோக்கி எடுக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது சிறுமி லான்ட்மாஸ்டரின் பின்பக்கமாக வந்துள்ளதாக கருதப்படுகிறது.

சிறுமி நிற்பதை அறியாத அயல் வீட்டுக்கார், லான்ட்மாஸ்டரை பின்பக்கமாகச் செலுத்தி, மீண்டும் வீட்டுக்குள் செலுத்தியுள்ளார்.

வீட்டுக்குள் லான்ட்மாஸ்டரை திருப்பியபோதுதான், பின்னால் சிறுமி இரத்த வெள்ளத்தில் வீழ்ந்திருந்ததைக் கண்டார்.

சத்தம் கேட்டு அங்கு வந்த சிறுமியின் தாயாரும், மற்றொரு பெண்ணும் சிறுமியை தூக்கி வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டபோதும், சிறுமி தாயாரின் கைகளிலேயே உயிரிழந்தார்.

சிறுமியின் தலை, காது, கால்களிலிருந்து இரத்தம் வழிந்திருந்தது.

லான்ட்மாஸ்டரில் ஏற்றப்பட்ட விறகு தாக்கியதால் சிறுமி உயிரிழந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

லான்ட் மாஸ்டரின் உரிமையாளரான குடும்பஸ்தர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



கொழும்பு, மே 28

இலங்கையில் முதலீடு செய்வதற்கு புதிய முதலீட்டாளர்களுக்கான சாதகமான வர்த்தக சூழலை உருவாக்குவதற்கு அண்மைக்காலமாக பல முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் ஜப்பானிய முதலீடுகளுக்கான வாய்ப்புகள்" என்ற தொனிப்பொருளில் டோக்கியோவில் இடம்பெற்ற வர்த்தக வட்டமேசை கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புகளை விளக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் திறப்பதற்கும் எடுக்கப்பட்டுள்ள புதிய சீர்திருத்த வேலைத்திட்டம் மற்றும் அதற்கான தனது அர்ப்பணிப்பையும் வலியுறுத்தினார்.

அத்தியாவசிய பொருளாதாரப் பங்காளியாக ஜப்பானின் முக்கியத்துவத்தை இலங்கை அங்கீகரித்துள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் பல பரஸ்பர நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் மூலோபாய இருப்பிடம் மற்றும் திறமையான பணியாளர்கள் ஆகியவை ஜப்பானிய நிறுவனங்களுக்கு பிராந்தியத்தில் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான கதவுகளைத் திறக்கும் என ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜப்பான்-இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்துடன் சந்திப்பில் கலந்துகொண்டார்.

# கூரைமேல் ஏறி யாழ்.சிறை கைதி போராட்டம்



யாழ்ப்பாணம்,மே28

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் கூரைக்கு மேலேறி சிறைக் கைதி ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நேற்று சனிக்கிழமை பகல் வேளையில் ஆரம்பித்த குறித்த நபரின் போராட்டம் இரவாகியும் தொடர்ந்து வருகின்றது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து வேறு சிறைச்சாலைக்கு தன்னை மாற்றுமாறு கோரியே குறித்த கைதி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என தெரியவருகிறது.

## அச்சுவேலியில்...

இதன்போது இன்னொருவர் மீதும் குறித்த வாகனம் மோதி அவர் படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தை ஏற்படுத்தியவர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இதனையடுத்து அச்சுவேலி பொலிஸார் அவரை கைது செய்தனர்.

பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த சாரதியே இவ்வாறு விபத்தை ஏற்படுத்தி விட்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## வெள்ளப்பள்ளம்...

பிரகாரம் சம்பவ இடத்துக்குச் சென்று இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள அதிகாரிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாக குளம் எல்லை யிடப்படுவதை நிறுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

கமநல சேவைகள் திணைக்களத்தினரால் எல்லையிடப்பட்ட குளத்தை தனியார் ஆக்கிரமிப்பதனால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதி...

அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகளும் அறிவித்துள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இந்நிலையிலேயே தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரவை களமிறக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதென தெரியவருகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஒழுக்காற்று விசாரணைகளில் இருந்து மருத்துவர் ஷாபி சிஹாப்தீன் விடுதலை

## மீண்டும் குருநாகல் வைத்தியசாலையிலேயே நியமனம்



கொழும்பு, மே 28

சிங்கள தாய்மாருக்கு சட்ட விரோதமாக கருத்தடை செய்தார் எனப் பொய்யான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரசவ மற்றும் மகப்பேற்று வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் சுகாதார அமைச்சு முன்னெடுத்த ஒழுக்காற்று விசாரணைகளில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், வைத்தியர் ஷாபியை மீண்டும் குருநாகல் போதனா வைத்தியசாலையிலேயே நியமனம் வழங்கிக் கடமையில் இணைக்க சுகாதார அமைச்சு குருநாகல் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் வைத்தியர் ஷாபியை இவ்வாறு குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமைகளில் இணைத்துக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு மற்றும் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணைக் குழு ஆகியன வைத்தியர் ஷாபிக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுத்து கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி தமது அறிக்கையை சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தவிடம் கையளித்தது. அதன்படி அந்த அறிக்கையை அரச சேவைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சு அளித்த அறிக்கையை ஆராய்ந்த அரச சேவைகள் ஆணைக்குழு கடந்த 26 ஆம் திகதி கடிதம் ஒன்றை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த கடிதத்திலேயே வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீனை உடன் அமுலுக்கு வரும் வகையில் குருநாகல் வைத்தியசாலையில் பணியில் இணைக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஜயந்த தனபால காலமானார்



கொழும்பு, மே 28

இலங்கையின் மூத்த இராஜதந்திரி கலாநிதி ஜயந்த தனபால கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது 85 ஆவது வயதில் காலமானார்.

1998 ஆம் ஆண்டு முதல் 2003 வரை ஆயுதக் குறைப்பு விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் துணைச் செயலாளராக அவர் பணியாற்றி இருந்தார்.

மேலும் லண்டன், பீஜிங், வொஷிங்டன், புதுடில்லி மற்றும் ஜெனீவாவில் இராஜதந்திரப் பதவிகளை அவர் வகித்தார்.

2018-2020 வரை இலங்கையின் அரசியலமைப்புச் சபையின் உறுப்பினராக பணியாற்றிய அவர், சர்வதேச விருதுகள் மற்றும் கௌரவ கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் ஜனாதிபதியின் ஆலோசகராகவும் தனபால பணிபுரிந்தார்.

(அ)

# வீதி அபிவிருத்தி திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்!

கொழும்பு, மே 28

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தற்போது நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பகுதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்களை உடனடியாக மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதே அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோள் என அமைச்சர் பந்துல குறிப்பிட்டார்.

ஏற்கனவே மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பல வீதிகளை சீரமைக்காவிட்டால், எதிர்காலத்தில் மக்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்த முடியாது என இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

# சுகாதார உத்தியோகத்தர்களாக ஆயிரம் பேர் புதிதாக நியமனம்

கொழும்பு, மே 28

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் 1,000 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சின் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் வைத்தியர் ஜயசுந்தர பண்டார தெரிவிக்கையில்-

இலங்கையில் தாய் மற்றும் குழந்தை சுகாதார சேவைகளை விரிவுபடுத்துவதற்காக, உலக வங்கியின் ஆரம்ப சுகாதார அமைப்பு வலுவூட்டல் திட்டத்தில் மேலும் ஆயிரம் மாணவர் குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்ய நிதி ஒதுக்கப்படும்.

பயிற்சிக் காலத்தில் மாணவர் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பயிற்சிக் கொடுப்பனவை செலுத்துவதற்காக இந்த நிதி ஒதுக்கப்படுகிறது.

ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் உலக வங்கி திட்டத்தில் இருந்து ஏற்கனவே பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வரும் ஆயிரம் மாணவர் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிக் காலத்தில் உதவித்தொகை வழங்கப்படும்-என்றார்.

# மூலதனச் சந்தைப் புதிர் போட்டியில் முகாமைத்துவ பீடத்துக்கு 2 இடங்கள்!







யாழ்ப்பாணம், மே 28

இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் இணைந்து நடத்திய புதிர்ப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

“பல்கலைக்கழக மாணவர்களிடையே மூலதனச் சந்தை தொடர்பான அறிவினைப் விருத்தி செய்வதன் மூலம் முதலீட்டு நடவடிக்கைகளில் தேர்ச்சி பெறுதலும் எதிர்காலத்தை வடிவமைத்தலும்” என்ற தொனிப்பொருளில் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழு மற்றும் கொழம்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் என்பன இணைந்து நடாத்திய மூலதனச்சந்தைப் புதிர் போட்டி அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீட அரங்கில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் யாழ் பல்கலைக்கழகத்தின் 7 பீடங்களைச் சேர்ந்த 19 அணிகள் பங்குபற்றின. ஒவ்வொரு அணியும் 4 உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்தன.

பீடங்களுக்கு இடையிலான போட்டியில் முதலாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட ஏ அணியும், இரண்டாம் இடத்தை பொறியியல் பீட அணியும், மூன்றாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பி அணியும், பெற்றுக் கொண்டன.

பீடங்களுக்கிடையிலான போட்டியில் வெற்றியீட்டிய அணிகள் அடுத்த மாதமளவில் தேசிய ரீதியில் நடைபெறவுள்ள பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)

# விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 28

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

மேலும், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசார் பணியாளர் பற்றாக்குறை தொடர்பில் பல்கலைக்கழகங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள்களின் அடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பிரதமரின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக் கடிதங்களுக்கு அமைவாக பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க கூறினார்.

அமைச்சரவையின் அனுமதியின்படி, 2023 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை ஓய்வுபெறும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமான தொகை ஆளணியை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், 2023 ஆம் ஆண்டு பதவியில் இருந்து விலகும் அல்லது சேவை வறிதாக்குதலுக்கு உட்படுத்தப்படும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கைக்காக 2023 ஆம் ஆண்டுக்கென உத்தேசிக்கப்பட்ட ஆளணி ஒதுக்கீட்டுக்குச் சமனான விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.